கழக வெளியீடு—சசுo

T.
2446

# தமிழ்ப்

T. 2446

# புலவர் வரிசை

மூன்றும் புத்தகம்

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்.

வெளியீடு : ௪௬௦

# தமிழ்ப் புலவர் வரிசை

[மூன்றும் புத்தகம்]

ஆசிரியர் :

திரு. சு. அ. இராமசாமிப் புலவர்

[*Approved by the Madras Text-Book Committee,*
*for class use Non-detailed Study,*
*Vide Gazette, Page* 121, *dated* 19—5—1954.]

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை-1.

First Edition: 1948.
Reprints: 1951; Oct., 1956.

# THAMIZHP PULAVAR VARISAI
## BOOK III

[All Rights Reserved]

*Published by*

**THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,**
**1/140, BROADWAY, MADRAS-1.**

***Head Office*:**

**98, EAST CAR STREET, TIRUNELVELI.**

Appar Achakam, 2/140, Broadway, Madras-1.—C. 1200.

# பதிப்புரை

**"செய்யபதி னாற்புலவர் செந்தமிழும் செய்திகளும்
உய்வுதரும் வைப்பாம் உணர்."**

முன்னேற்றத்தை விரும்பும் நாடுகள் எல்லாம், தத்தம் நாட்டுப் புலவர்கள் செய்தருளிய தாய்மொழி நூல்களை விரும்பிப் படித்தலும் படிப்பித்தலும் செய்கின்றன.

அத்துடன், அப் புலவர்கள் வரலாற்றைச் செம்மையுடன் உணர்ந்து அவர்தம் அறிவு, ஆண்மை, அன்பு, ஒழுக்கம், தந்நலமின்மை, தாய்மொழிப் பற்று, எல்லாருக்கும் உதவுதல், விடா உழைப்பு, அஞ்சாமை, வாய்மை, கடமை முதலிய நற்பண்புகளை மேற்கொண்டு நடத்தி நற்பயன் பெறுகின்றன.

அம் முறையில் நம் நாட்டுப் புலவர்பெருமக்கள் வரலாறுகளையும், அவர்கள் செய்தருளிய நூல்களையும் மாணாக்கர் இளமையிலேயே கற்று அதன்படி ஒழுகுவது, நாட்டுக்கும், மொழிக்கும், செய்யும் நல்தொண்டாகும்.

அம் முறையில் 'தமிழ்ப் புலவர் வரிசை மூன்றாம் புத்தகமாக' இது வெளிவருகிறது.

இதன்கண், சிவப்பிரகாசர் முதல் தாமோதரம் பிள்ளை ஈறாகப் பதினால்வர் வரலாறுகளும் பரவை வழக்காக வழங்கும் கதைகளும், பாடல்களும், உள்ளுறைநயங்களுடன் செவ்விய இனிய எளிய முறையில் சொல்லப் பெற்றிருக்கின்றன.

இதனையும் முதற்புத்தகம் இரண்டாம் புத்தகங்கள் போலவே, ஆசிரியர்களும், மாணாக்கர்களும், பொதுமக்களும் வாங்கிக் கற்றுப் புலவர்பெருமக்கள்பால் செய்ய வேண்டிய நன்றியை நிறைத்து எங்களையும் ஊக்குவார்களாக.

எங்கள் வேண்டுகோளின்படி இதனை ஆக்கித்தந்த திரு. **கு. அ. இராமசாமிப் புலவர்** அவர்களுக்கு எங்கள் நன்றி உரித்தாகுக.

**சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.**

# உள்ளுறை


| | | | பக்கம் |
|---|---|---|---|
| க. | சிவப்பிரகாசர் | ... | 1 |
| உ. | படிக்காசுத் தம்பிரான் | ... | 11 |
| ௩. | அந்தகக்கவி வீரராகவ முதலியார் | ... | 24 |
| ௪. | தாயுமானவர் | ... | 43 |
| ரு. | சிவஞானமுனிவர் | ... | 48 |
| சா. | மயிலேறும் பெருமாள் பிள்ளை | ... | 58 |
| எ. | வைத்தியநாத நாவலர் | ... | 60 |
| அ. | அருணசலக் கவிராயர் | ... | 63 |
| கூ. | இராமலிங்க அடிகள் | ... | 66 |
| க0. | மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளை | ... | 79 |
| கக. | ஆறுமுக நாவலர் | ... | 91 |
| கஉ. | பூண்டி அரங்கநாத முதலியார் | ... | 102 |
| க௩. | இராய்பகதூர் பெ. சுந்தரம் பிள்ளை | ... | 127 |
| க௪. | சி. வை. தாமோதரம் பிள்ளை | ... | 137 |

# தமிழ்ப் புலவர் வரிசை

## மூன்றாம் புத்தகம்

### க. சிவப்பிரகாசர்

ஏறக்குறைய இருநூற்றெண்பது யாண்டுகட்கு முன்னர் காஞ்சிபுரத்தில் குமாரசாமி தேசிகர் என்பார் ஒருவர் இருந்தார். இவரும் இவர் குலத்தினரும் வேளாளருக்கு நல்லொழுக்க முறைகளைக் கற்பிக்கும் ஆசிரியர்களாவர். இக் குமாரசாமிதேசிகருக்கு, சிவப்பிரகாசர், வேலாயுதம், கருணைப்பிரகாசம் என்னும் மூன்று ஆண் பிள்ளைகளும், ஞானம்பிகை என்னும் ஒரு பெண் பிள்ளையும் பிறந்தனர்.

தந்தையார் காலமானபின் சிவப்பிரகாசர் தம் உடன் பிறந்தவர்களை அழைத்துக்கொண்டு திருவண்ணாமலைக்குச் சென்றார். ஆங்கு அப்போது 'குருதேவர்' என்று ஒரு பெரியார் இருந்தார். அவரை வழிபட்டுக்கொண்டிருந்ததுடன் செந்தமிழ்நூல்களையும் பயின்று வந்தார். அப்போது ஒரு நாள் மலைவலஞ் செய்வதற்குச் சென்றார். வலம்வந்து முடிதலுக்குள் சோணசைலமாலை என்னும் ஓர் அரிய புகழ்நூலைப் பாடினார்.

பின்னாள் ஆங்கிருந்து பின்னர்த் துறைமங்கலம் என்னும் ஊருக்குச் சென்றார். ஆங்கு அந்நாளில் அண்ணாமலை ரெட்டியார் என்னும் பெயருள்ள செல்வர் ஒருவர் அறிவுந் திருவும் உடையராய் வாழ்ந்திருந்தார். அவர் சிவப்பிரகாசரையும் அவர்தம் உடன்பிறந்தார்களையும்

மிகவும் போற்றியதுடன், அவர்கள் உறைவதற்குத் திரு மடம் ஒன்றும் அமைத்துக் கொடுத்தார். சிவப்பிரகாசர் அத் திருமடத்தில் சின்னாள் உறைந்திருந்தார். அந்நாளில் அவர் இலக்கிய நூல்களைத் தாமாக நன்கு பயின்றிருந்ததே யன்றி இலக்கண நூல்களைப் பயிலவில்லை. இலக்கணப் பயிற்சியைத் தக்கார்மாட்டுப் பெறவேண்டுமென்று எண்ணியிருந்தார். அப்போது திருநெல்வேலி சிந்துபூந் துறையில் வெள்ளியம்பலவாணத்தம்பிரான் என்பவர், இலக்கணக் கடலாக விளங்குகின்றார் என்னுஞ் செய்தி சிவப்பிரகாசருக்குத் தெரிந்தது. அவரிடம் சென்று இலக்கணங் கற்க விரும்பினார். உடன்பிறந்தார்களோடு புறப்பட்டுச் சிந்துபூந்துறையை அடைந்தார். வெள்ளியம்பலவாணத் தம்பிரானுக்குத் தம் உள்ளக்கிடக்கையைத் தெள்ளிதிற் புலப்படுத்தினார். அத் தம்பிரான் சிவப்பிரகாசரின் இலக்கியப் பயிற்சியை அறிய விரும்பினார். கூ என்பதை முதலாகக் கொண்டு தொடங்கி, கூ என்பதையே இடையிலும் இறுதியிலும் அமைத்து இறைவனுடைய ஊர் முதலியவற்றை ஒரு வெண்பாவில் பாடச் சொன்னார். சிவப்பிரகாசர்,

> "கூடக்கோடு வானெயிறு கொண்டார்க்குக் கேழல்
> முடக்கோடு முன்னமணி வார்க்கு—வடக்கோடு
> தேருடையான் தெவ்வுக்குத் தில்லைதோல் மேற்கொள்ளல்
> ஊருடையான் என்னும் உலகு."

என்னும் வெண்பாவைப் பாடினார். சிவப்பிரகாசரின் இலக்கியப் பயிற்சியைக் கண்ட தம்பிரான் மிக்க மகிழ்ச்சியையடைந்தார். பதினைந்து நாட்களுக்குள் ஐந்திலக்கணங்களையும் பாடஞ்சொல்லி முடித்தார். அதனாற் களிப்படைந்த சிவப்பிரகாசர் அண்ணாமலை ரெட்டியார் வழிச் செலவுக்குத் தமக்களித்த பொருளை அத் தம்பிரானுக்குக்

காணிக்கையாகக் கொடுத்தார். வெள்ளியம்பலவாணத் தம்பிரான், சிவப்பிரகாசர் அளித்த பொருளை ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் சிவப்பிரகாசரை நோக்கி, "திருச் செந்தூரிலே ஒரு போலிப்புலவர் இருக்கின்றார். அவர் எம்மை இகழ்தலையே தம்முடைய தொழிலாகக் கொண் டுள்ளார். அவரைக் கல்வியினால் வென்று அடிமைப் படுத்திக் கொணர்ந்து நம்மை வணங்குமாறு செய்தலே நீவிர், நமக்குக் கொடுக்கவேண்டிய காணிக்கையாகும்," என்றார். சிவப்பிரகாசரும் தம்பிரான் வேண்டுகோளுக் கிசைந்து புறப்பட்டுத் திருச்செந்தூரையடைந்தார்.

சிவப்பிரகாசர் முருகனைப் போற்றித் திருக்கோவிலை வலம்வந்துகொண்டிருந்தார். அப்போது அங்கிருந்த போலிப்புலவர், "சிவப்பிரகாசர் யாவர்?" என்று வினவினார் சிலரைப் பார்த்து. அவர்கள், "இவருடைய பெயர் சிவப்பிரகாசர்; சிந்துபூந்துறை வெள்ளியம்பலவாணத் தம்பிரானிடம் இலக்கணங் கற்றவர்," என்று பதிலளித்த னர். உடனே போலிப்புலவர் தம் வழக்கப்படி, "வெள்ளி யம்பலத் தம்பிரானிடம் படித்தவரா? அவருக்கென்ன தெரியும்? அவருக்குத் தெரிந்தது தானே இவருக்குந் தெரிந்திருக்கப் போகிறது," என்று இகழ்ந்துரைத்தார். இச்செய்தியைக் கேட்டோர் சிவப்பிரகாசரிடஞ் சென்று சொல்லினர். உடனே சிவப்பிரகாசர் அப் புலவரை யழைத்து, "நாமிருவரும் சொற்போர் புரிவோம்; தோற்றவர் வென்றவருக்கு அடிமை," என்று முடிவையுங் கூறினார்.

சிவப்பிரகாசர் கூறியதற்குப் போலிப்புலவர் ஒருப் பட்டார். போலிப்புலவரே சிவப்பிரகாசரை நோக்கி, "முருகன்மீது ஒரு நிரோட்டகயமகவந்தாதி முப்பது செய்

யுளில் பாடுவோம். முதலில் பாடி முடித்தவருக்குப் பாடி முடிக்காதவர் அடிமையென்றார். சிவப்பிரகாசர் அப்படியே செய்வோமென்றார். சிலர் நடுவுநிலைமையாளராக அமைக் கப்பட்டனர். இருவரும் பாடத்தொடங்கினர். சிறிது நேரத்திற்குள் சிவப்பிரகாசர் முப்பது பாடல்களையும் பாடி முடித்துவிட்டார். போலிப் புலவருக்கோ முதற்பாட்டுக் கூட முடிவுபெறவில்லை. தம்முடைய தோல்வியை ஒப்புக் கொண்டார். சிவப்பிரகாசர் அவரை யழைத்துக்கொண்டு சிந்துபூந்துறைக்குச் சென்று, தம்முடைய ஆசிரியராகிய வெள்ளியம்பலவாணத் தம்பிரானை வணங்கச்செய்து அவருக்கு அடிமையாக்கினர். பின்னர்ச் சின்னாள் அங் கிருந்து திரும்பினர்.

சிவப்பிரகாசரும், அவருடன் பிறந்தார்களும் திரு வெங்கைமாநகர் என்னும் ஊரை யடைந்தனர். அண்ணா மலை ரெட்டியார் அங்கொரு திருமடம் அமைத்துக் கொடுத் தனர். சிவப்பிரகாசரும் அவருடன் பிறந்தவர்களும் அத் திருமடத்தில் அமர்ந்திருந்தனர். அப்போது சிவப் பிரகாசர், திருவெங்கைக் கோவை, திருவெங்கைக் கலம்பகம் முதலிய நூல்களைப் பாடியருளினர். பின்னர்த் துறை மங்கலஞ் சென்றார். அண்ணாமலை ரெட்டியார் சிவப் பிரகாசரைத் திருமணஞ்செய்து கொள்ளுமாறு வேண்டிக் கொண்டார். அதற்குச் சிவப்பிரகாசர்,

"சேய்கொண்டா ருங்கமலச் செம்மலுட னேயரவப்
பாய்கொண்டா னும்பரவும் பட்டீச் சுரத்தரனே
நோய்கொண்டா லுங்கொளலா நூறுவய தளவிருந்து
பேய்கொண்டா லுங்கொளலாம் பெண்கொள்ள லாகாதே."

என்னும் பாடலால் தமக்குத் திருமணம் வேண்டியதில்லை யென்பதைத் தெரியப்படுத்தினர். பின்னர் ரெட்டியார் சிவப்பிரகாசரின் உடன்பிறந்தார்களாகிய கருணைப்பிரகாச

ரையும், வேலாயுதரையும் வேண்டிக்கொண்டார். அவர்கள் தம் உடன்பாட்டினைத் தெரிவித்தனர். அவர்களிருவருக்கும் திருமணஞ் செய்துவைத்தார். அப்போது சிவப்பிரகாசர்,

"அரன் அவன் இடத்திலே ஐங்கரன் வந்துதான்
ஐயஎன் செவியை மிகவும்
அறுமுகன் கிள்ளினன் என்றே சிணுங்கிடவும்
அத்தன்வே லவனை நோக்கி

விரைவுடன் வினவவே அண்ணன்என் சென்னியில்
விளங்குகண் எண்ணி னனென
வெம்பிடும் பிள்ளையைப் பார்த்துநீ அப்படி
விகடம்ஏன் செய்தாய் என

மருவும்என் கைந்நீளம் முழம்அளந் தானென
மயிலவன் நகைத்து நிற்க
மலையரையன் உதவவரும் உமையவளை நோக்கிநின்
மைந்தரைப் பாரா யெனக்

கருதரிய கடலாடை உலகுபல அண்டங்கள்
கருப்பமாப் பெற்ற கன்னி
கணபதியை அருகழைத் தகமகிழ்வு கொண்டனள்
களிப்புடன் உமைக்காக் கவே."

என்பது முதலிய சில பாடல்களால் வாழ்த்துக் கூறியருளினார். சிவப்பிரகாசர் திருவெங்கை நகரில் தங்கியிருந்தபோது அவ்வூர்ப் பிடாரியின் திருவிழா வந்தது. பிடாரியின் ஊர்வலம் மடத்தை ஒட்டிச் செல்வது வழக்கம். பிடாரியின் ஊர்வலத்தெருவையொட்டி மடத்திற்குரிய முருங்கைமரம் ஒன்று இருந்தது. அம் மரம் பிடாரியின் தேர் சென்றபோது அத் தேர்க்காலில் அகப்பட்டு முறிந்து விழுந்துவிட்டது. அம் மரம் மடத்திலுள்ள அடியார்கட்கு மிகவும் பயன்பட்டுக் கொண்டிருந்தது. அம் மரம் முறிந்தது சிவப்பிரகாசரின் உள்ளத்தை வருத்தியது. அவர்,

"திருந்துதமிழ் இலக்கணஐந் திணைக்கோவை
திருவெங்கைச் செல்வற் கோதும்
பெருந்தகைமை உடையம்யாம் விடும்ஓலை
வெங்கைநகர்ப் பிடாரி காண்க
இரும்புவியில் ஒருமுருங்கைக் கொம்பொடியா
மற்காத்திங் கிருக்கும் நீநம்
முருங்கைதனை வேரோடுங் களைந்தனைஎன்
ருல்உனக்கு முறைய தாமோ."

என்னும் செய்யுளைப் பாடியருளினர். அவ்வளவில் அம் முருங்கைமரம், அடிகள் வாக்கு நயத்தாலும், பிடாரியின் அருள் நயத்தாலும், தழைத்து வளர்ந்து முன்போல் நின்றது.

சிவப்பிரகாசர் அண்ணாமலை ரெட்டியாரோடு சிதம்பரத்தையடைந்து கூத்தப்பிரானைப் போற்றி வழிபட்டுக் கொண்டிருந்தார். அக்காலை **நால்வர்நான்மணிமாலை**, **சிவப்பிரகாசர், தருக்கபரிபாடை, சதமணிமாலை** முதலிய நூல்களை அருளிச்செய்தார்.

சிவப்பிரகாசர் பல விடங்களிலும் எழுந்தருளியுள்ள இறைவன் வடிவங்களையெல்லாம் போற்றிக் கொண்டு, திருக்காட்டுப்பள்ளி என்னும் ஊரையடைந்தார். அங்குச் சில பகல் தங்கியிருந்தார். அந்நாளில் கல்விமிக்க கட்டழகி ஒருத்தி தெருவின்கண்ணே ஊழ்வினைவசத்தால் உப்பு விற்றுக்கொண்டு சென்ருள். அவளது நிலைமையை எல்லோரும் தெரிந்துகொள்ள வேண்டி,

"நிறைய உளதோ எளிதோ கொளுவேம்
பிறையை முடிக்கணிந்த பெம்மான்—உறையும்
திருக்காட்டுப் பள்ளி திரிபாவாய் நீயிங்
கிருக்காட்டுப் பள்ளி எமக்கு."

என்னும் வெண்பாவைப் பாடியருளினர் உடனே அப் பெண்,

"தென்னோங்கு தில்லைச் சிவப்பிரகா சப்பெருமான்
பொன்னோங்கு சேவடியைப் போற்றினோம்—அன்னோன்
திருக்கூட்டம் அத்தனைக்குந் தெண்டனிட்டோம் தீராக்
கருக்கூட்டம் போக்கினோம் காண்."

என்னும் பாடலைப் பாடிச் சிவப்பிரகாசரை வணங்கி நின்றாள். அவளுக்கு உண்மையறிவு தோன்றுமாறு சிவப்பிரகாசர் திருவருள் செய்தார்.

பின்னர், சிவப்பிரகாசர் அண்ணாமலை ரெட்டியாருடன் புறப்பட்டுக் காஞ்சி நகரை நோக்கி வரும் வழியில், சாந்தலிங்க சுவாமிகள் என்னும் பெரியாரைக் கண்டு அவருடன் அளவளாவி மகிழ்ந்தார். அப் பெரியார் தாம் பேரூரில் நின்றும் புறப்பட்டுச் சிவஞானபாலையதேசிகரைக் காணும் பொருட்டுப் பொம்மையபாளையத்துக்குச் செல்வதாகக் கூறினார். சிவப்பிரகாசர் தாமும் அப் பெரியாரைக் காண விரும்புவதாகக் கூறி அவருடன் சென்றார். சாந்தலிங்க சுவாமிகள் சிவப்பிரகாசரைப் பார்த்துச் சிவஞான பாலைய தேசிகர்மீது சில பாக்கள் பாடவேண்டுமென்று கூறினார். சிவப்பிரகாசர் தாம் மக்கள் யாக்கையினரைப் பாடுவதில்லையென்று கூறி மறுத்துவிட்டார். இருவரும் அன்றிரவு ஓர் ஐயனார் கோவிலருகில் உறங்கினர். அப்போது சிவப்பிரகாசர், முருகப்பெருமானார் மயின்மீதேறித் தம்பால் எழுந்தருளி, ஓர் ஏனத்தில் விடுபூக்களை வைத்து அவற்றைத் தொடுத்துத் தமக்கு அணியவேண்டுமென்று கூறியதாகக் கனவு கண்டு, அக் கனவினைச் சாந்தலிங்க சாமிகளுக்குத் தெரியப்படுத்தினார். அதனைக் கேட்ட சாந்தலிங்க சாமிகள், சிவஞான பாலைய தேசிகர் முருகன்மாட்டுப் பேரன்புடையவரென்று கூறினார். சிவப்பிரகாசர், சிவஞானபாலைய தேசிகரைப் பாடுமாறு முருகனே தமக்குக் கட்டளையிட்டதாக வெண்ணித் தேசிகர்மீது தாலாட்டு, நெஞ்சுவிடு தூது

என்னும் நூல்களைப் பாடிச் சாந்தலிங்க சாமிகளை மகிழ்வித்ததுடன், அந்நூல்களைத் தேசிகர் திருமுன்பு அரங்கேற்றுதலும் செய்தார். பின் அவ் வாசிரியரின் அருமை பெருமைகளை அறிந்து அவருடைய அடியவரானார். அவ் வாசிரியர் கட்டளைப்படி தம்முடைய தங்கை ஞானம்பிகையைச் சாந்தலிங்க சாமிகளுக்குத் திருமணஞ் செய்து கொடுத்தார். சின்னாள் கழிந்தபின் ஆசிரியரின் உடன்பாடு பெற்றுக் காஞ்சிநகரை யடைந்தார். அங்கிருந்து வேதாந்த சூடாமணி, சித்தாந்த சிகாமணி, பிரபுலிங்கலீலை என்னும் அரிய நூல்கள் பலவற்றை இயற்றியருளினார். சிறிது நாளானவுடன் சிவஞான பாலைய தேசிகரைக் காண வேண்டும் என்னும் அவாவுண்டாகியது. திருப்பள்ளியெழுச்சி, பிள்ளைத்தமிழ் என்னும் இரண்டு இனிய நூல்களைப் பாடி யெடுத்துக்கொண்டு, சென்று ஆசிரியரைக் கண்டு வணங்கினார். செல்லும் வழியிலுள்ள திருக்கூவம் என்னும் தலத்தின்மீது தலபுராணமும் பாடினார்.

பின்னர் ஆசிரியர் கட்டளைப்படி பழமலை யென்னும் விருத்தாசலத்தை யடைந்து, அங்குச் சிதம்பரபூபதி என்பார் அமைத்துக்கொடுத்த திருமடத்திலே எழுந்தருளி யிருந்துகொண்டு பழமலை நாதரைப் போற்றிக்கொண்டிருந்ததுடன் அப் பெருமான்மீது பழமலையந்தாதி, பிக்ஷாடந நவமணிமாலை, பெரியநாயகி திருவிருத்தம் முதலிய நூல்களைப் பாடியருளினார்.

ஒருநாள் அடிகள் மணிமுத்த ஆற்றிலே நீராடிவிட்டு ஒரு மாஞ்சோலை வழியே வந்துகொண்டிருந்தார். ஒரு மாங்கனி கீழே விழுந்து கிடந்தது. அஃது இறைவழிபாட்டுக்காமென் றெண்ணிக் கீழே குனிந்து அக் கனியைக்

கையிலெடுத்தார். அவ்வளவில் அச் சோலைக் காவலன் ஓடிவந்தான். அப்பேதை அடிகளாரின் பெருமையைச் சிறிதும் அறியான். அவன் அடிகளாரின் மடியைப் பிடித்துக்கொண்டு, "நீ ஏன் மாம்பழத்தைத் திருடினாய்? வா சோலைச் சொந்தக்காரரிடம்," என்று கூறி வம்பு செய்தான். அவன் செய்த வம்பு அடிகளாரின் சீற்றத்தை மூட்டி விட்டது. அடிகள் மனம் நொந்து,

"அடுத்துவருந் தொண்டனுக்கா அந்தகனைத் தாளால்
அடர்த்ததுவுஞ் சத்தியமே ஆனால்—எடுத்தவொரு
மாங்கனிக்கா என்னை மடிபிடித்த மாபாவி
சாங்கனிக்கா தித்தன்வரத் தான்."

என்று ஒரு வசை கவியைப் பாடியருளினார். அப் பேதையும் அடிகளின் வாக்குப்படி, கன்னிராசிக்கு ஞாயிறு வந்தபோது இறந்தொழிந்தான்.

பின்னர் சிவப்பிரகாசர் தம் ஆசிரியர் இட்டலிங்கத்தொடு இரண்டறக் கலந்ததுணர்ந்து உள்ளங் கலங்கி ஆங்கடைந்தார். ஆசிரியர் பிரிவுக்கு வருந்தி ஒருவாறு தேறினார். பின்னர் நல்லாற்றூரை யடைந்தார். அப்போது தம் கட்டளைப்படி திருவெங்கை மாநகரத்தில் இருந்த தம் சிறியதம்பியாராகிய கருணைப்பிரகாசர் திருக்காளத்திப் புராணம் பாடத் தொடங்கி அது முடிவதற்குள் பதினெட்டாம் ஆண்டிலே இறைவனடி யெய்தினார் என்னும் துன்பச்செய்தி வந்தது. உடனே சிவப்பிரகாசர் வெங்கை நகரடைந்து,

"முன்னமொரு தமிழ்ப்புலவன் தனையுண்டு
கண்டசுவை முதிர்ச்சி யாலே
தன்னியலை முழுதும்உரைத் தமையாமுன்
நினைக்கவர்ந்து தடங்கா ளத்தி

மன்னவன்உண் டான்எனது மாதவத்தின்
வலிதீர மண்ணின் மீதே
என்னுடன்வந் தவதரித்த இளங்கருணைப்
பிரகாசன் என்னுங் கோவே."

என்னும் பாவைப் பாடி வருந்தினர். அப்பொழுது அங்கு வந்திருந்த முதல் தம்பியாகிய வேலைய சுவாமிகள்,

"ஆண்டதனல் எனைஒவ்வாய் வித்தையினில்
தமையனினும் அதிகம் என்றே
பூண்டஉல கதனில்உள்ளோர் புகல்வதுகேட்
டிருந்துமென்ன புதுமை தானே
காண்டகுகண் மணியேநல் இளங்கருணைப்
பிரகாசக் காளாய் நீதான்
மாண்டனையென் றறிந்திருந்தும் உயிர்தரித்தேன்
யானும்மிக வன்னெஞ் சேனே."

என்னும் பாடலைப் பாடி வருந்தினர். பின்னர்ச் சிவப் பிரகாசர் நல்லாற்றூரை யடைந்து பல சிறு நூல்களையும் பாடினர். திருக்காளத்திப் புராணத்தில் எஞ்சிய பகுதியைப் பாடத்தொடங்கி இரண்டு சருக்கங்கள் பாடி முடிப்பதற் குள், முப்பத்திரண்டாம் ஆண்டிலே பூதவுடல் நீத்துப் புகழுடலை நிறுத்தினர். அப்போது வேலைய சுவாமிகள்,

"அல்லிமலர்ப் பண்ணவனும் ஆராய்ந் தறிகவிதை
சொல்லும் இருவரிடைத் தோன்றியயான்—முல்லை
அரும்பிற் பொலியும் அணிமுறுவல் நல்லாய்!
கரும்பிற் கணுநிகர்த்தேன் காண்."

என்னும் வெண்பாவைப் பாடி மிக வருந்தினர். திருக் காளத்திப் புராணத்தின் எஞ்சிய பகுதி வேலைய சுவாமி களா லியற்றப்பெற்று இனிது முடிவுபெற்றது.

## உ. படிக்காசுத் தம்பிரான்

'பண்பாய பகர்சந்தம் படிக்காசலா தொருவர் பகரொணுதே' என்று பாராட்டப்பெற்ற படிக்காசுத் தம்பிரான், தொண்டைமண்டலத்திலே பொற்களந்தைப்பதி என்னும் தென்களத்தூரிலே இருநூற்றைம்பது யாண்டுகட்கு முன்னே தோன்றினர். அவ்வூரிலே ஒரு காலத்தில் நெற்கதிர் பொற்கதிராக விளைந்ததாம். அக் கதிர் இன்றுங் கூட அவ்வூர்க் கோயிலிலே உள்ளதென்றுரைப்பர். படிக்காசுத் தம்பிரானுடைய பிள்ளைப்பெயர் இன்னதென்று விளங்கவில்லை. அவர் இளமைக் காலத்திற் கற்கவேண்டிய நூல்களை யெல்லாம் இனிது கற்றுணர்ந்தார். அவருடைய அறிவு இளமைக் காலத்திலேயே சீர்மையுங் கூர்மையுஞ் செறிந்து விளங்கியது.

பள்ளிக்கல்வி கற்று முடிந்ததும் புலமைக் கல்வி கற்றுப் புலவராக எண்ணினர். அக் காலத்திலே பெரும் புலவராகப் பிறங்குவோர் யாவரென்று பலரையும் கேட்டார். திருவாரூரின்கண் வைத்தியநாத நாவலர் என்பவர் பெரும்புலவராக விளங்குவதுடன் இலக்கண விளக்கம் என்னும் எழின்மிகு நூலுஞ் செய்துள்ளாரென்னுஞ் செய்தி தெரிந்தது. அவரிடஞ் சென்று இலக்கண இலக்கியங்களை யெல்லாம், இனிது பயில எண்ணினர். நன்னுளொன்றிற் புறப்பட்டுத் திருவாரூரை நண்ணினர். நாவலரைக் கண்டு வணங்கினர். தாம் அவர்பால் இலக்கண இலக்கியங்களைக் கற்பான் வந்துள்ளமையைத் தெரியப் படுத்தினர்.

நாவலரும் படிக்காசரை மாணவராக ஏற்றுக்கொண்டு இலக்கண இலக்கியங்களைக் கற்பித்தார். படிக்காசர் தமது

நுண்ணுணர்வானே மிக விரைவில் பல நூல்களையும் பயின்று பாவாணராகவும் ஆயினர்.

பின்னர், தம்முடைய ஆசிரியரிடத்திலே விடை பெற்றுக்கொண்டு தம்மூரை யடைந்தார். திருமணஞ் செய்துகொண்டு இல்லற வாழ்க்கையிலே ஈடுபட்டார். கற்றுத்துறைபோய காதலராய புலவர்க்குக், கற்பினளாய மனைவி முதன் மகனை யீன்றளித்தாள். அம் மகவு போதிய தாய்ப்பால் பெறாது அல்லற்பட்டது. மிகப் பச்சிளங் குழவியாக விருந்தமையின் கஞ்சி முதலியவைகளைக் கொடுத்துப் பசியை ஆற்றவும் முடியவில்லை. பாற்பசு வாங்கிப் பிள்ளைக்குப் பாலளிக்கலாமென்றாலோ படிக்காசரை வறுமைப்பேய் பலமாகப் பற்றிக்கொண்டு ஆட்டியது. எவரிடமேனும் சென்று இரந்தாலன்றிப் பிழைப்பிற்கு வகையில்லையென்பது புலப்பட்டது. அவர் தம்முடைய நிலைமைக்கு மிகவும் வருந்தினர். அப்போது வல்லமாநகர் என்னும் ஊரில் காளத்திபூபதி என்பவர் ஒருவர் இருந்தார். அவர் அறிஞரின் வறுமைப் பிணிக்கோர் மருந்தாக வுள்ளா ரென்பதுந் தெரிந்தது. எனவே படிக்காசர் அவரைச் சென்று கண்டு,

"பெற்றாள் ஒருபிள்ளை என்மனை யாட்டிஅப் பிள்ளைக்குப்பால்
பற்றாது கஞ்சி குடிக்குந் தரமல்ல பாலிரக்கச்
சிற்றாளும் இல்லைஇவ் வெல்லா வருத்தமுந் தீரஒரு
[1] கற்றா தரவல்லை யோவல்ல மாநகர்க் காளத்தியே."

என்னும் ஒரு பாட்டைக் கூறினர். அவர் புலவர் வறுமையைக் கண்டு பெரிதும் வருந்தினர். நன்கு பால் கறந்துகொண்டிருந்த ஓர் ஆவையும், பெரும் பொருளையும் படிக்

1. கற்றா - கன்றையுடைய ஆ.

காசர்க்கு வழங்கி மகிழ்வித்தார். படிக்காசரும் அவ் வள்ளலின் அருங்கொடையைப் பாராட்டி,

"வழிமேல் விழிவைத்து வாடாமல் என்மனை யாளைமற்றோர்
பழியாமற் பிள்ளையும் பால்என் றழாமல் பகைரெனுஞ்சொல்
மொழியாம லேவிட்ட பாவை [1]முசித்துச் சதையதனைக்
கழியாமல் ஆஅளித் தாய்வல்ல மாநகர்க் காளத்தியே."

என்னும் பாவால் தம்முடைய நன்றியறிதலைப் புலப்படுத் தினார். பின்னர் ஊரையடைந்து வறுமைப்பேயை விரட்டி மகிழ்ந்தார்.

அந்நாளில் மாவண்டூர் என்னும் ஊரிலே கத்தூரி முதலியார் என்பவர் பிள்ளையாகத் தோன்றிய கறுப்ப முதலியார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் கல்வி கேள்விகளிற் சிறந்தவர். அவர் படிக்காசரை நோக்கித் தொண்டை மண்டலத்தின் பெருமைகளை யெல்லாம் தொகுத்து ஒரு சதகம் பாடவேண்டுமென்று வேண்டிக் கொண்டார். படிக்காசரும் அவருடைய வேண்டுகோளின் படி ஒரு சதகத்தைப் பாடி அரங்கேற்றஞ் செய்தார். கறுப்ப முதலியார் அச் சதகத்தைக் கேட்டு மிக மகிழ்ந்து பெரும்பொருள் பரிசாக அளித்ததன்றிப், படிக்காச ருடைய சிவிகையையுந் தாங்கி அவரைப் பெருமைப்படுத் தினார். அந்தக் கறுப்ப முதலியாரின் செயல் படிக்காச ருள்ளத்தை மிகவும் உருக்கியது. அவருடைய தன்மையை வியந்து,

" ஓர் [2]கறுப்பு மில்லாத தொண்டைவள
நன்னாட்டில் உதித்த வேளைச்
சீர்கறுப்பொன் றில்லாத கத்தூரி
மன்னனருள் [3]சேயைப் பார்மேல்

---

1. முசித்து - மெலிந்து. 2. கறுப்பு - பஞ்சம். 3. சேய் - மகன்.

ஆர்கறுப்பன் என்றுசொல்லி அழைத்தாலும்
நாமவனை அன்பினாலே
பேர்கறுப்பன் நிறஞ்சிவப்பன்
கீர்த்தியினால் வெளுப்பனெனப் பேசுவோமே."

என்று புகழ்ந்து பாடினார். நாட்கள் பல சென்றன. அறிஞராயினார் பலவிடங்கட்குஞ் சென்று பலரையுங் கண்டு மகிழ்தலையும், இறைவனைப் போற்றுதலையுந் தொழிலாகக் கொண்டிருந்தமையைத் தாமும் தொழிலாகக் கொண்டார். தில்லையையடைந்து சில காலம் தங்கியிருந்தார். புல்லறிவாளர் சிலர் புலவருக்கு அல்லல் விளைத்தனர். நல்லறிவு பல கூறியும் அம் முழுமக்கள் அடங்கவில்லை. அவர் கூத்தப்பிரானை நோக்கி,

"பொல்லாத மூர்க்கருக் கெத்தனை தான்புத்தி போதிக்ினும்
நல்லார்க்குண் டான குணம்வரு மோநடு ராத்திரியில்
சல்லாப் புடைவை குளிர்தாங்கு மோநடுச் சந்தைதனில்
செல்லாப் பணஞ்செல்லு மோதில்லை வாழுஞ் சிதம்பரனே."

என்ற செய்யுளைப் பாடினார். புல்லறிவாளருந் திருவருட் செயலால் அடங்கினர். 'ஐங்காதம் போனாலும் தன் பாவம் தன்னுடனே ஆகுந்தானே,' என்பதற்கிணங்க வறுமைக் கொடுமை படிக்காசரைத் தில்லையிலும் அல்லற் படுத்தலாயிற்று. சிவகாமி அம்மையை நோக்கி,

"வேல்கொடுத் தாய்திருச் செந்தூர்க் கம்பியின் மீதுவைக்கக்
கால்கொடுத் தாய்நின் மணவாள னுக்குக் [1]கவுணியர்க்குப்
பால்கொடுத் தாய்மத வேளுக்கு மூவர் பயப்படச்செங்
கோல்கொடுத் தாய்அன்னை யேஎனக் கேதும் கொடுத்திலையே."

என்று பாடினார். திருவருள் பஞ்சாச்சரப்படியின் மேல் ஐந்து பொற்காசுகள் அங்குள்ளார் பலரும் அறியப், '**புலவர்க்கம்மையின் பொற்கொடை**' என்னும் ஒலியுடன்

1. கவுணியர் - திருஞானசம்பந்தர்.

மேலிருந்து கீழே விழுந்தன. அவற்றைத் தில்லைவாழந்தணர் ஒருவர் பொற்றட்டி லெடுத்துக் கோயில் சிறப்புடன் படிக் காசருக்கு வழங்கினார். அன்று முதல்தான் புலவருக்குப் **படிக்காசுப் புலவர்** என்று பெயர் வழங்கலாயிற்று. மேலும் பலநாள் அவ்வாறே படிக்காசு பெற்றுத் தில்லை யில் தங்கிக் கூத்தப்பிரானையும், இறைவியையும் போற்றி வழிபட்டுக் கொண்டிருந்தார்.

பின்னர்ப் புலவர் பெருமானாகிய படிக்காசுப் புலவர் அவ்விடம் விட்டு நீங்கிப் பல சிவ திருப்பதிகளையும் பாடி வழிபட்டுக்கொண்டு இராமநாதபுரத்தை யடைந்தார். அப் போது சேது மன்னராகத் திகழ்ந்த சேதுபதி தமிழ் அறிவிலும் தமிழ் வளர்ச்சியிலும் தலைசிறந்தவராக விளங் கினார். சுருங்கக் கூறுமிடத்து அந்நாளில் சேதுமன்ன ராகிய இரகுநாத சேதுபதி புலவர்களுக்குத் தாயைப் போல விளங்கியிருந்தார். அவரைச்சென்று கண்ட படிக் காசுப் புலவர்,

"[1]மூவேந்தரும் அற்றுமுச் சங்கமும்
  போய்ப்பதின் மூன்றோ டெட்டுக்
கோவேந் தரும்அற்று மற்றொரு
  வேந்தன் கொடையும் அற்றுப்
பாவேந்தர் காற்றில் இலவம்பஞ்
  சாகப் பறக்கையிலே
தேவேந்தர தாருவொத் தாய்ரகு
  நாத செயதுங்கனே."

என்று அவரைப் பாராட்டிப் பாடினார். சேதுபதியும் படிக்காசுப் புலவரின் அருங்கல்விச் சிறப்பை வியந்து

---

1. மூவேந்தர் - சேர சோழ பாண்டியர். முச்சங்கம் - முதல் இடை கடை என்னும் முச்சங்கம். பதின்மூன்றோடெட்டுக் கோவேந்தர் - முதலெழுவள்ளல் இடையெழுவள்ளல் கடையெழு வள்ளல் ஆகிய இருபத்தொருவர்.

பலநாள் தம்மிடமே தங்கவைத்திருந்தார். பின் புறப்பட்டுக் காயற்பட்டினம் என்னும் ஊரையடைந்தார். அப்போது அவ்வூரிலே சீதக்காதி என்று பெயருடைய வள்ளல் ஒருவர் வாழ்ந்திருந்தார். அவர் முகமதிய சமயத்தைச் சேர்ந்தவராயினும், தமிழை நன்குணர்ந்து தமிழ்ச் சுவையைப் பெரிதும் போற்றுபவர். தமிழ்ப்புலவர்கள் பலர் அவருடைய சீரையுஞ் சிறப்பையும் புகழ்ந்து பாடிப் பல பரிசுகளைப் பெற்றனர். அந்தச் சீதக்காதியின் அறச் செயல்களையும், அறிவுத்திறனையும் குணநலத்தையும் பெருமையையும் பலரும் பலபடப் புகழ்ந்து கூறுதலைக் கேட்ட படிக்காசுப்புலவர் அவரைக் காண விழைந்தார். சீதக்காதியின் இல்லத்தையடைந்தார். அவரைக்கண்டார்.

"ஓர்தட்டி லேபொன்னும் ஓர்தட்டி லேநெல்லும் ஒக்கவிற்கும்
[1] கார்தட் டியபஞ்ச காலத்தி லேதங்கள் காரியப்பேர்
ஆர்தட்டி னுந்தட்டு வாராம லேஅன்ன தானத்திற்கு
மார்தட் டியதுரை மால்சீதக் காதி வரோதயனே."

"ஈயாத புல்லர் இருந்தென்ன போயென்ன எட்டிமரம்
காயா திருந்தென்ன காய்த்துப் பலனென்ன கைவிரித்துப்
போயா சகம்என் றுரைப்போர்க்குச் செம்பொன் பிடிபிடியாய்
ஓயாமல் ஈபவன் வேள்சீதக் காதி ஒருவனுமே."

என்று இரண்டு பாடல்களையும் பாடிப் புகழ்ந்தார். சீதக்காதியார் படிக்காசரின் பாநலத்தை நுகர்ந்து ஆண்டே அவரைப் பன்னாள் அமரச்செய்தார். பின் படிக்காசுப் புலவர் சீதக்காதியிடம் பலவகைப் பெரும் பரிசுகளையும் பெற்றுக்கொண்டு, மிகுந்த ஆரவாரத்துடன் சிவகங்கை என்னும் ஊரை யடைந்தார். அப்போது அவ்வூரில் இருந்த திருமலைத்தேவர் என்பவர் அறிவுடையவராக விருந்தாராயினும், படிக்காசருடைய ஆரவாரவருகை

1. கார் தட்டிய - கார் பெய்யாதுவிட்ட.

அவருக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. அவர் படிக்காசுப்புலவரைக் கிளிக்கூண்டு போன்ற ஒரு சிறிய அறையில் அடைத்தார். வேளைக்குத் தக்கபடி உணவும் அளிக்கவில்லை. எனவே படிக்காசுப்புலவர் அச் சிறையிற் கிடந்து வாடி வருந்தவேண்டியதாயிற்று.

ஒரு நாள் திருமலைத்தேவர் படிக்காசுப்புலவரை யடைத்துள்ள சிறைக்கருகே உள்ள பூம்பொழிலில் உலாவிக்கொண்டு படிக்காசுப் புலவரின் செய்கையைக் குறிப்பாகப் பார்த்துக் கொண்டிருந்தார். அதனை யுணர்ந்த படிக்காசுப் புலவர் திருமலைத்தேவர் காதில் விழும்படியாக,

"நாட்டிற் சிறந்த திருமலையா துங்க நாகரிகா
காட்டில் வனத்தில் திரிந்துழ லாமற் கலைத்தமிழ்தேர்
பாட்டிற் சிறந்த படிக்காசன் என்னுமோர் பைங்கிளியைக்
கூட்டில் அடைத்துவைத் தாய்இரை தாஎன்று கூப்பிடுதே."

என்று ஒரு செய்யுளைப் பாடினர். செய்யுள் திருமலைத் தேவர் காதுகளை அடைந்ததுதான் தாமதம். ஒரு நல்ல புலவரை இவ்வாறு வருத்தினேமே என்று அவர் வருந்திப் படிக்காசுப் புலவரைச் சிறையினின்று வெளிப்படுத்தி, இல்லத்திற்கழைத்துப் போய்ப் பலவகைச் சிறப்பும் செய்து மிகவும் போற்றியனுப்பினர்.

பின்னர்த் திருச்செந்திலம்பதியை அடைந்தார். ஆண்டெழுந்தருளியுள்ள அறுமுகவள்ளலைப் பலவகைப் பாக்கள் பாடிப் போற்றினர்.

"முற்கரை [1]அப்பரை ஏறவிட் டாட்கொள் முதல்வர்உள்ளக்
கற்கரைக் கும்படி போதித் திடுங்கரு ணைக்கடலைச்
சிற்பரைக் குட்டியை எங்கெங்குந் தித்திக்குஞ் செங்கரும்பின்
சர்க்கரைக் கட்டியைக் கண்டேன்செந் தூர்எனுந் [2]தானத்திலே."

1. அப்பர் - திருநாவுக்கரசர்.　　2. தானம் - இடம்.

"முன்னம்நின் அன்னை முலையூட்டி மையிட்டு மூக்குச்சிந்திக்
கன்னமுங் கிள்ளிய நாள்அல்ல வேஎன்னைக் காப்பதற்கு
அன்னமும் [1]மஞ்ஞையும் போலிரு பெண்கொண்ட ஆண்பிள்ளைநீ
இன்னமுஞ் சின்னவன் தானோசெந் தூரில் இருப்பவனே."

"சின்னஞ் சிறுபிள்ளை செங்கோட்டுப் பிள்ளை சிவந்தபிள்ளை
பொன்னன் மணிப்பிள்ளை பூலோகம் எங்கும் புகழும்பிள்ளை
சொன்னெஞ் சுழல்கின்ற சூரனைக் கொன்றசொக் கேசர்பிள்ளை
வன்னக் கிளிப்பிள்ளை செந்திற் குறத்திக்கு மாப்பிள்ளையே."

என்பன முதலிய பாடல்கள் அறிஞர் நெஞ்சை அள்ளும் பான்மையுடன் விளங்குகின்றனவன்றோ? பின்னர்ப் படிக்காசுப்புலர் பல பகுதிகளையும் போற்றி வழிபட்டுக் கொண்டு தஞ்சைமாவட்டத்திலுள்ள திருத்தண்டலை நீணெறி என்னும் பதியை அடைந்து, இறைவனைப்போற்றி வழிபட்டுக்கொண்டிருந்தார். அக்காலை அவ்வூரினர் பாவாணரின் பான்மையை நன்குணர்ந்தவர்களாதலின் அப் பதியில் எழுந்தருளிய இறைவன்மீது ஏதேனுமொரு நூல் இயற்றியருள வேண்டுமென்று வேண்டிக்கொண்டனர். படிக்காசுப்புலவரும் அவர்கள் வேண்டுகோளுக் கிசைந்து, பழமொழிவிளக்கம் என்னும் **தண்டலையார் சதகத்தைப்** பாடி யருளினார். அச் சதகத்தின் பாடல்கள் ஒவ்வொன்றும் இனிய எளிய நடையில் இயன்றவை. அரிய பெரிய அறவுரைகளைக் கொண்டவை. அந்நூல் மிகச் சிறிய அளவுடையதேயாயினும், பண்பால் பெரிய அளவுள்ளதாயிற்று.

அந்நூற் செய்யுள்களில் ஒன்றையிங்குக் காட்டுவாம்.

"காதிலே திருவேடங் கையிலே செபமாலை கழுத்தின் மார்பின்
மீதிலே தாழ்வடங்கள் மனதிலே [2]கரவடமாம் வேட மாமோ
வாதிலே [3]அயன்தேடுந் தண்டலைநீ ணெறியாரே மனிதர்காணும்
போதிலே மவுன[4]மிராப் போதிலே ருத்ராட்சப் பூனை தானே."

1. மஞ்ஞை - மயில். 2. கரவடம் - கபடம்.
3. அயன் - நான்முகன். 4. இரா - இரவு.

புலவர் அவ்வூரிலே சிலகாலம் தங்கியிருந்தார். சீதக்காதியை மீண்டுங் காணவேண்டுமென்னும் அவா பிடர் பிடித்துந்தியது. புறப்பட்டுப் பலநாள் வழி நடந்து காயற்பட்டினத்தை யடைந்தார். அவர் காயற்பட்டினத்தை யடைந்ததும் சீதக்காதிவள்ளல் புகழுடலை உலகில் நிறுத்திப் பூதவுடலை மறைத்துவிட்டாரென்னுஞ் செய்தி செவிக்கெட்டியது. புலவரின் துயர் புகலவுங்கூடுமோ? அழலிடைப்பட்ட வெண்ணெயென வுருகி வருந்தினர். பின்னர் ஒருவாறு தேறித்தெளிந்தார். அவர் அடக்கஞ் செய்யப்பட்டுள்ள இடத்தையாயினுஞ் சென்று காண்போமென்று அவ்விடத்தை யடைந்தார். அவ்விடத்தை யண்மியதும் பாடல்கள் புலவரையுமறியாது அவர் வாயினின்றும் புறப்பட்டன.

[1]"பூமா திருந்தென்ன புவிமா திருந்தென்ன பூதலத்தில்
நாமா திருந்தென்ன நாமிருந் தென்னநன் நாவலர்க்குக்
கோமான் அழகமர் மால்சீதக் காதி கொடைமிகுந்த
சீமான் இறந்திட்ட போதே புலமையுஞ் செத்ததுவே."

[2]"தேட்டாளன் காயல் துரைசீதக் காதி சிறந்தவச்ர
நாட்டான் [3]புகழ்க்கம்பம் நாட்டிவைத் தான்தமிழ் நாவலரை
[4]ஓட்டாண்டி யாக்கி அவர்கள்தம் வாயில் ஒருபிடிமண்
போட்டான் அவனும் ஒளித்தான் சமாதிக் குழிபுகுந்தே."

---

1. பூமாது - திருமகள். புவிமாது - நிலமகள். நாமாது-கலைமகள். மால்சீதக்காதி - பெருமையுடைய சீதக்காதி.

2. தேட்டாளன் - பொருளைத் தேடுவதில் சிறந்தவன்.

3. புகழ்க்கம்பம் - புகழ்த்தூண்.

4. ஓட்டாண்டி-கையில் ஓட்டையுடையவராய் ஐயமேற்போர்.

"மறந்தா கிலும்அரைக் காசுங் கொடாமட மாந்தர்மண்மேல்
இறந்தாவ தென்ன? இருந்தாவ தென்ன இறந்துவிண்போய்ச்
சிறந்தாளுங் காயல் துரைசீதக் காதி திரும்பிவந்து
பிறந்தால் ஒழியப் புலவோர் தமக்குப் பிழைப்பில்லையே."

இவ்வாறு சில பாடல்களைப் புலவர் பாடிய அளவில் அடக்கக்குழியின் ஒரு பக்கத்தில் ஒரு வெடிப்புண்டாகியது. அவ் வெடிப்பினின்றும் ஒரு கை மேலே தோன்றிற்று. அக் கையின் விரல் ஒன்றில் விலை மிகவுயர்ந்த ஓராழி விளங்கியது. புலவர் வியப்புடன் திடுக்கிட்டவராய்ப் பார்த்துக் கொண்டிருக்கும்போதே ஆழி நழுவிப் புலவர்க்கு முன்விழக் கை மீண்டும் மறைந்து வெடிப்பும் மூடிக்கொண்டது. வியப்பால் திகைப்பையடைந்த புலவர் அவ்வாழியை யெடுத்துக்கொண்டு சீதக்காதி வாழ்ந்திருந்த இல்லத்தை யடைந்தார். நடந்தவைகளையெல்லாம் சீதக்காதியின் உறவினரிடத்தில் நவின்றார். அவர்கள் புலவரைப் பார்த்து, "சீதக்காதியார் உயிர்விடும்போது அவ்வாழியைக் கழற்ற வேண்டாமென்று கூறினார்," எனக் கூறினர். அது முதல் "செத்துங் கொடுத்தான் சீதக்காதி" என்றொரு பழமொழி வழங்கத் தொடங்கியது.

படிக்காசுப்புலவர் ஆண்டுச் சிலநாள் தங்கியிருந்து புறப்பட்டனர். தம் ஆசிரியரின் திருமகனாகிய சதாசிவ நாவலரைப் பார்க்கவேண்டுமென்று விரும்பினார். திருவாரூரை நோக்கிச் சென்று கொண்டிருந்தார். திருவாரூர்க் கணித்தேயுள்ள ஒரு பட்டிக்காட்டில் ஒரு செடியருகில் ஒருவர் யாப்பருங் கலக்காரிகையை நெட்டுருப் போட்டுக் கொண்டு ஏதோ வொரு காயைப் பறித்துக்கொண்டிருந்தார். அதைப் பார்த்துக்கொண்டு சென்றார் புலவர். தம்மாசிரியரின் மகனைக் கண்டு மகிழ்ச்சியுடன் உரையாடிக்

கொண்டிருந்தார். அப்போது சதாசிவநாவலரைப் பார்த்து,

"கூடுஞ் சபையில் [1]கவிவா ரணங்களைக் [2]கோளரிபோல்
[3]சாடுஞ் சதாசிவ சற்குரு வேமுன்னுன் தந்தைதன்னால்
பாடும் புலவர்க ளானேம்இன் றிச்செம்மற் பட்டியெங்கும்
காடுஞ் செடியும்என் னேதமிழ்க் காரிகை கற்பதுவே."

என்னும் பாட்டைக் கூறியதுடன், இக்காலத்திலே நன்கு கல்வி கற்காதவர்கள் கூடப் புலவர்களென்றும் பாவாணர்களென்றும் பெயர் வைத்துக்கொண்டு உள்ளம் போனவாறு எதையேனும் பாடிக்கொண்டு கிளம்பி விடுகிறார்கள். முன்னாளில் இவ்வாறு கிடையாது. தகுந்தோர் மட்டுமே பாவாணர்களென்று வெளிப்படலாம். இப்பொழுது நினைத்தவர்களெல்லாம் இவ்வாறு கிளம்பக் காரணம் என்னையெனின், முற்காலத்தைப் போல இக்காலத்தில்,

[4]"குட்டுதற் கோபிள்ளைப் பாண்டியன் இங்கில்லை
குறும்பியளா வாய்க்காதைக் குடைந்து தோண்டி
எட்டினமட் டறுப்பதற்கோ வில்லி யில்லை
இரண்டொன்றாய் முடிந்துதலை இறங்கப் போட்டு
வெட்டுதற்கோ கவியொட்டக் கூத்த னில்லை
விளையாட்டாய்க் கவிதைதனை விரைந்து பாடித்
[5]தெட்டுதற்கோ வறிவில்லாத் துரைகளுண்டு
தேசமெங்கும் புலவரெனத் திரிய லாமே."

என்று ஒரு பாட்டினால் முற்காலத்தில் போலிப்புலவர்கள் மிகுந்திராமைக்குக் காரணத்தையும் விளக்கினார். செல்வர்களிடமெல்லாஞ் சென்றிரந்து வாழ்தலே வாழ்க்கையாகி

---

1. கவி வாரணம் - கவியானைகள். 2. கோளரி - சிங்கம்.
3. சாடும் - சொற்போரில் வெல்லும்.

4. புலவர்கள் பாட்டிற் றவறு கண்டால் அவர்கள் தலையிற் பட்டென்று குட்டுவது பிள்ளைப் பாண்டியன் என்னும் அரசனுடைய வழக்கம். 5. தெட்டுதற்கு - ஏமாற்றுவதற்கு.

விட்டபடியால், அவ்விடமிருந்து புறப்பட்டுச் செல்வரை நாடிச் செல்லலானர். முன்பின் அறியாத ஒரு செல்வன் பாற் சென்று செய்யுட்கள் சில பாடிப் பரிசில் விழைந் தார். அச் செல்வன் அறிவில் வறியவனுதலால் யாதுந் தரவில்லை. தான் மிகுந்த வறியவனென்றும் தன்னிடம் பொருளில்லை யென்றும் பொய்யுரை புகன்றுன். அச் செல்வன் கூத்து புலவருக்குப் பெருவியப்பை விளைத்தது. தம் இரத்தல் நிலையை நோக்கிப் பெரிதும் வருந்தினர். தம்மையே இகழ்ந்துகொண்டார். அவருடைய நிலை அவ ருக்கே மிகுந்த வெறுப்பை விளைவித்தது. ஆகவே அவர் தம்மை நொந்துகொண்டு,

" அடகெடுவாய் பலதொழிலும் இருக்கக் கல்வி
அதிகமென்றே கற்றுவிட்டோம் அறிவில்லாமல்
திடமுளமோ கனம்ஆடக் கழைக்கூத் தாடச்
செப்பிடுவித் தைகள்ஆடத் தெரிந்தோம் இல்லை
தடமுகைவே சையராகப் பிறந்தோ மில்லை
சனியான தமிழைவிட்டுத் தைய லார்தம்
இடமிருந்து தூதுசென்று பிழைத்தோம் இல்லை
என்னசென்மம் எடுத்துலகில் இருக்கின்றேமே."

என்று வருந்திப் பாடினர். பிறகு இவ் வாழ்க்கையை விட்டுத் துறவியாகப் போதலே நல்லதென்ற முடிவுக்கு வந்தார். அக்காலத்தில் துறவியாதற்குத் தருமபுரத்துச் சைவமடம் தகுதியானதாகவும், தகுந்த அறிவாசிரியரை யுடையதாகவும் விளங்கிற்று. எனவே புலவர் அங்குச் சென்று அம் மடத்தின் தொண்டர்களில் ஒருவராக அமர்ந் தார். சைவசித்தாந்த நூல்கள் பலவற்றையும் நன்கு கற்று அவைகளிலும் வல்லவராக ஆனர். பின்னர் அம் மடத்தின் தலைவரால் துறவிகட்குரிய கல்லாடையும், மெய் யறிவுரையும் பெற்றூர். அதுமுதல் அவருடைய பெயர்

படிக்காசுத் தம்பிரான் என மாறியது. மடத்தின் தலைவர் படிக்காசுத் தம்பிரானைத் திருப்புள்ளிருக்கு வேளூர் என்னும் வைத்தீசுரன் கோயில் கட்டளைத் தம்பிரானாக இருக்குமாறு கட்டளையிட்டார். படிக்காசுத் தம்பிரானும் ஆசிரியர் கட்டளையை மறுக்க அஞ்சி, அவ்வாறே கட்டளைத் தம்பிரானாகவிருந்து காரியங்களைப் புரிந்தார்.

அப் பதியிலெழுந்தருளிய இறைவன்மீது ஏதேனும் ஒரு நூல் செய்தருள வேண்டுமென்று மக்கள் பலரும் வேண்டிக்கொண்டனர். படிக்காசுத் தம்பிரானும் அவர்கள் வேண்டுகோளின்படி புள்ளிருக்கு வேளூர்க் கலம்பகம் என்னும் நூலைப்பாடி அரங்கேற்றஞ் செய்தார். மக்களும் அக்கலம்பக மாட்சியைக்கேட்டு இன்பக்கண்ணீர் சொரிந்து பலவகைப் பரிசுகளளித்துச் சிறப்புச் செய்தனர்.

படிக்சாசுத்தம்பிரான் அவ்விடமே தங்கி இறைவன் பணியை முட்டின்றிச் செய்திருந்ததுடன், அடிக்கடி தில்லையம்பதிக்குச் சென்று இன்பக்கூத்தனையும் சிவகாமியையும் இனிது போற்றி வணங்கிக்கொண்டு வந்தார். அகவை மிகுதியானகாலை தம்பிரான் புள்ளிருக்குவேளூர்ப் பணியை நிறுத்திப் பொன்னம்பலத்திலேயே தங்கிப் பொய்யுடலகல மெய்யருளை நாடி நின்றார். இறுதியில் கூத்தப்பிரானின் திருவடிப்பேற்றை யெய்தினர். படிக்காசுத் தம்பிரானுடைய பாட்டின் பெருமையைச் சொக்கநாதப் புலவர் என்பவர்,

"[1]மட்டாருந் தென்களந்தைப் படிக்காசன் உரைத்ததமிழ்
[2]வரைந்த ஏட்டைப்
பட்டாலே சூழ்ந்தாலும் மூவுலகும் பரிமளிக்கும்
[3]பரிந்தவ் வேட்டைத்

1. மட்டு ஆரும் - மணம் பொருந்திய. 2. வரைந்த-எழுதிய.
3. பரிந்து - விரும்பி.

தொட்டாலும் கைம்மணக்கும் சொன்னாலும் வாய்மணக்கும்
[1]துய்ய சேற்றில்
நட்டாலுந் தமிழ்ப்பயிராய் விளைந்திடுமே பாட்டினது
[2]நளினந் தானே."

என்று புகழ்ந்து பாடியுள்ளார்.

---

## ந. அந்தகக்கவி வீரராகவ முதலியார்

தண்டமிழுலகில் மண்டிய புகழுடைத் தொண்டை நாடு "தொண்டை நன்னாடு சான்றோருடைத்தெனு" ஆன்றோர்களால் சிறப்பித்துக் கூறப்பெற்றது. அத் தொண்டை நாட்டின் பாலாற்றங் கரையில் பூதூரென்னும் புகழ்மிகு ஊரொன்றுள்ளது. அவ்வூர் பலவகை வளங்களாலும் சிறப்புற்று விளங்கியது. அவ்வூரில் ஏறக்குறைய இரு நூற்றைம்பது யாண்டுகட்கு முன் வடுகநாத முதலியார் என்னும் பெருங்குடி வேளாளர் ஒருவர் பெற்றிமிக் குடையாராய் வாழ்ந்திருந்தார். அவருக்கு நீண்ட காலமாக மக்கட்பேறு வாய்க்காதிருந்து இறுதியிலோர் ஆண் குழந்தை பிறந்தது. அக் குழந்தை இரண்டு கண்களுமற்ற குருடாக விருந்தது. முதலியாரும் அவருடைய மனைவியும் பிள்ளை யில்லாக்குறைக்கு வருந்தியதைவிடப் பன்மடங்கு மிகுதியாக வருந்தி நாளடைவில் தேறினர்.

நாட்கள் சில சென்றன. முதலியார் தம் மைந்தனுக்குப் பெயரிடச் சுற்றத்தினர் சிலருடன் கலந்து எண்ணமிட்டார். முதியாள் ஒருத்தி, வீரராகவன் என்று பெயரிட வேண்டுமென்று கூறினாள். வடுகநாத முதலியார் சைவராக விருந்தும் அம் மூதாட்டியின் எண்ணப்படியே பெயரிட்டார். குழந்தை நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்தது. குழந்தை உடற்கண்தான்

---

1. துய்ய - நல்ல. 2. நளினம் - அழகு.

அற்றதாக விருந்ததே தவிர உளக்கண்ணில் எவ்விதமான பழுதுமற்றதாக விருந்தது. குழந்தைக்குத் தக்க அகவை நிரம்பியதும் அதற்குக் கல்வி கற்பிப்பதெவ்வாறு என்று வடுகநாத முதலியார் வருந்தினர். அப்போது குழந்தை தந்தையைப் பார்த்து, "என்னைப் பள்ளியில் விடுங்கள். கணக்காயர் எழுத்துக்களை என் முதுகில் எழுதிக் காட்டட்டும். நான் எழுத்துக்களின் தன்மையை உணர்ந்து கொள்ளுகிறேன். மற்றைப்பிள்ளைகள் படிப்பதைக் கேட்டுக் கருத்தூன்றி நோக்கிச் செய்திகளை உணர்ந்துகொள்ளுகிறேன்," என்றது. தந்தை குழந்தையின் அறிவுத் திறமையைப் பெரிதும் வியந்து பள்ளிக்கு அனுப்பினர்.

ஒருவருக்கு ஒரு புலனின் திறமை குன்றியிருந்தால் மற்றொரு புலனில் அத் திறமை நிறைந்திருப்பது உலக வழக்கம். வீரராகவருடைய கட்புலனறிவு செவிப்புலனில் மிகுவதாயிற்று. கேள்வியினாலேயே வீரராகவர் பள்ளிக் கல்வியைப் பயின்று முழுதுமறிந்தார். அவ்வாறுள்ள நாளில் பாலியாற்றின் நீர்ப்பெருக்கால் அடிக்கடி பூதூருக்குத் தொல்லை நேர்ந்துகொண்டிருந்தது. வடுகநாத முதலியார் அத் தொல்லைக்கஞ்சிப் பொற்களந்தைப் பதியென்னும் பொன்விளைந்த களத்தூருக்குக் குடிபுகுந்தார்.

வீரராகவர் எத்தொழிலிலும் ஈடுபடுதல் அருமையென்பதை யுணர்ந்து மேலும் கல்விப் பயிற்சியிலேயே ஈடுபடவெண்ணினர். காஞ்சிபுரத்திற்குச் சென்றார். அங்குக் கல்வியிற் சிறந்து விளங்கிய புலவர் பெருமக்களை யடுத்தார். ஏடு வாசிப்போன் ஒருவனும் வீரராகவருடன் சென்றான். ஏடு வாசிப்போன் நூல்களைப் படிக்கப் புலவர்கள் உரையை விரைக்க வீரராகவர் நூற்பொருளை நுண்ணிதினுணர்ந்தார்.

"கற்றலிற் கேட்டலே நன்று," "கற்றில னாயினுங் கேட்க வஃதொருவற், கொற்கத்தி னூற்றாந் துணை," என்னும் பொய்யாமொழிகள் வீரராகவர்மாட்டு மெய்யாயின. சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம் மணிமேகலை முதலிய பெருங்காப்பியங்களையும், நன்னூல், தொல்காப்பியம், யாப்பருங்கலம் முதலிய இலக்கண நூல்களையும் மற்றும் கற்கவேண்டிய நூல்களையும் வழுவறக்கற்று அவைகளி லெல்லாம் வல்லவரானார். சிறிது காலத்தில் செய்யுள் இயற்றும் திறமையும் வீரராகவருக்கு நன்கு அமைந்தது. அதுமுதற்கொண்டு அவருடைய பெயர் 'கவிவீரராகவ முதலியார்' என்றும், 'அந்தகக்கவி வீரராகவ முதலியார்' என்றும் வழங்கலாயின. வீரராகவருடைய புலமைத் திறத்தை வியந்து, கந்தபுராணம் பாடிய கச்சியப்ப சிவாச் சாரியார்,

"பொங்குதமிழ் அயோத்தியில்வாழ் தசரதனென்
 போனிடத்தும் பூதூர் வேந்தன்
துங்கவடு கன்னிடத்தும் வீரரா கவர் இருவர்
 தோன்றி னால்
அங்கொருவன் ஒருகலைமான் எய்திடப்போய்
 வசைபெற்றான் அவனி பாலன்
இங்கொருவன் பல்கலைமான் எய்திடப் போய்க்
 கவியினால் இசைபெற் றானே."

என்றொரு செய்யுள் பாடினார். வீரராகவர் கல்விப்பயிற்சி முடிந்து பொற்களந்தைப்பதியை அடைந்தார்.

வடுகநாத முதலியார் தம் மகனுக்குத் திருமணஞ் செய்துவைக்க எண்ணினார். கண்ணற்ற தம் மகனுக்கு யார்தாம் பெற்ற கண்ணைப்போன்ற பெண்ணைக் கொடுக்க முன்வரப் போகிறார்களென்று எண்ணிப் பெரிதுங் கவலைப் பட்டார். ஆனால், உண்மை அவ்வாறில்லை. வீரராகவருடைய

அறிவுக்கண்ணையும் புகழையும் நன்குணர்ந்த பலர், 'நான் நீ' என்று பெண் கொடுக்க முன் வந்தனர். நல்ல மங்கை ஒருத்தியைத் தேர்ந்தெடுத்து வடுகநாத முதலியார் தம் மகனுக்குத் திருமணஞ் செய்துவைத்தார். வீரராகவர் தம் அருமை மனைவியோடு இல்லற வாழ்க்கையை இனிது நடத்திக்கொண்டிருந்தார்.

ஒருநாள் வீரராகவர் வெளியே சென்றுவிட்டு வீட்டுக்குத் திரும்பினார். அப்போது வீரராகவருடைய இல்லாள் அயல்வீட்டுப் பெண்கள் சிலருடன் வீணுரையாடிக்கொண்டிருந்தாள். முதலியார் வருதலையறிந்த அயல்வீட்டுப் பெண்கள் அவர் வருகையை அவர் மனைவிக்குத் தெரியப் படுத்தினர். அதற்கவள், "வந்தாலென்ன? யானைமேல் வருகின்றாரா? குதிரைமேல் வருகின்றாரா? அல்லது எங்கேனுஞ் சென்று வளநாடும் இளங்கன்றும் பெற்று வருகின்றாரா," என்று இகழ்ச்சி தோன்றக் கூறினாள். அவள் கூறியது அந்தகக்கவி வீரராகவர் காதுகளிலும் விழுந்தது. 'இல்லானை இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தாயும் வேண்டாளன்றோ?' அவள் கூறிய சொற்கள் முதலியாரின் உள்ளத்தில் அம்புபோற் சென்று தைத்து வருத்தியது. சிறிதுபோது இல்லத்திலிருந்து எண்ணமிட்டார். வீட்டிலுணவு கொள்வதற்குக்கூட அவருடைய மனம் பொருந்தவில்லை. நண்பர் ஒருவரின் இல்லத்திற்குச் சென்று உணவுகொண்டு மறுநாட்காலை ஏடு படிப்போன் ஒருவனுடன் ஊர்ப்பயணந் தொடங்கினார். நண்பகலுணவுக்காகக் கையில் கட்டுச்சோற்று மூட்டை ஒன்றையுங் கொண்டுசென்றனர். அச்செய்தியறிந்த முதலியார்மனைவி அஞ்சி, "அந்தோ! இவ்வாறு நேர்ந்ததே," என்று வருந்திக்கொண்டிருந்தாள்.

பயணந் தொடங்கியவன்று நண்பகலாயிற்று. இருவரையும் பசிநோய் வருத்தியது. வழியில் ஒரு குளம் காணப்பட, அவ்விடத்தில் உண்பதற்கு முடிவு செய்தனர். மாணவன் கட்டுச்சோறு மூட்டையை முதலியார் அருகில் வைத்துவிட்டுக் குளத்தில் இறங்கினன். அப்போது ஒரு நாய் அங்கு வந்தது. அதுவும் பசிப்பிணியால் வாடியிருந்தது. ஆகவே, அது கட்டுச் சோற்று மூட்டையைக் கவ்விக்கொண்டு காற்ருய்ப் பறந்துவிட்டது. கரையேறிய மாணவன் நிகழ்ந்ததை முதலியாருக்குக் கூறினன். முதலியாரை அப்போது வயிற்றுப்பசி பிடுங்கித் தின்றுகொண்டிருந்தது. ஆயினும், அச்சமயத்தில் கூட அவருக்கு நகைச்சுவையுடன் பாட்டொன்று தோன்றியது. அவர்,

"சீராடை யற்ற [1]வயிரவன் வாகனம் சேரவந்து
பாராரும் [2]நான்முகன் வாகனம் தன்னைமுன் பற்றிக்கொண்டு
[3]நாரா யணனுயர் வாகன மாயிற்று நம்மைமுகம்
பாரான் [4]மைவா கனன்வந்தே வயிற்றினிற் பற்றினனே."

என்னும் பாட்டொன்றைப் பாடிவிட்டு அங்கோரிடத்தில் படுத்துச் சிறிது கண்ணயர்ந்தார். அப்போது முதலியாருடைய நண்பர் ஒருவர் அவ்வழியே இராமேசுவரப் பயணம் புறப்பட்டு வந்துகொண்டிருந்தார். அவர் வீரராகவ முதலியாரைக் கண்டு அளவளாவித் தம்மிடமிருந்த பல வகை யுணவுகளையும் உண்ணச்செய்தார். பிறகு அவரையும் உடனழைத்துக்கொண்டு சென்று வீரராகவர் விருப்பப்படி சோழநாட்டிலே விட்டுவிட்டுச் சென்ருர்.

---

1. வயிரவன் வாகனம் - நாய்.
2. நான்முகன் வாகனம் - அன்னம்.
3. நாராயணன் வாகனம் - கருடன்.
4. மை வாகனன் - அக்கினி பகவான். நாய் கட்டுச்சோற்று மூட்டையைக் கவ்விக்கொண்டு பறந்துவிட்டபடியால் பசித்தீ என்னைப்பற்றியது என்பது கருத்து.

வீரராகவ முதலியார் சோழநாட்டில் சிலகாலந் தங்கிப் பல சிவப்பதிகளையுங் கண்டு போற்ற விரும்பினர். சீர்காழி, மாயூரம், திருவாரூர் முதலிய பல பதிகளைக் கண்டு வணங்கினர். திருவாரூரிற் சிலநாள் தங்கித் 'திருவாரூர் உலா' என்னும் நூலைப் பாடினர். பின் ஈழநாட்டை யடைந்தார். அப்போது அந்நாட்டின் வடபாகத்தைப் 'பரராசசிங்கம்' என்னும் தமிழரசன் ஆட்சிபுரிந்துகொண்டிருந்தான். அவ்வரசனை வீரராகவ முதலியார் காண விழைந்தார். அவனே எளிதாகப் புலவரை வரவேற்க வில்லை. வீரராகவர் இயற்றமிழ்ப் புலமையோடு இசைத்தமிழ்ப் புலமையும் நன்கு நிரம்பியவர். யாழ் வாசிப்பதில் மிகுந்த திறமையுடையவர்; பல விடங்களில் இசையரங்குகளையும் நடத்தினர். எனவே முதலியாருடைய பெரும்புகழ் ஈழநாடெங்கணும் இனிது பரவுவதாயிற்று. வீரராகவரின் பெருமையை அரசன் அவைக்களப் புலவர்களும் நன்கு உணர்ந்திருந்தார்கள். ஆயினும், தங்கள் புலமைக்கு இழுக்கு வருமே என்ற அச்சத்தால் யாரும் வீரராகவரைப்பற்றிச் சிறிதும் அரசனுக்கு அறிவிக்கவில்லை.

வீரராகவரின் செய்தி அரசன் மனைவியின் காதுகளுக்கும் எட்டியது. பெரும்புலவரை வரவேற்றுப் போற்றாதிருந்ததற்காக அவள் அரசனோடு ஊடல்கொண்டிருந்தாள். அவள் ஊடலின் காரணம் அரசனுக்குத் தெரியாமையால் திகைத்துப் போயிருந்தான். அவ்வாறாக ஒருநாள் அரசன் தனது இள மரக்காவை யடைந்து உலாவிக்கொண்டிருந்தான். அப்போது ஒரு மரப்பொந்தில் கிளியொன்று கூடுகட்டிக் குஞ்சு பொரித்திருந்தது. அம் மரத்தருகே வாழை மரங்கள் நெருங்கி யிருந்தன. ஒரு மரத்தின் குருத்து காற்றினால் அசைந்து அடிக்கடி பொந்தின் வாயிலை நெருங்கி மீண்டது. அப்போது அக்குஞ்சுகளின்

தாய் இரைகொண்டு வரும்பொருட்டு வெளியே சென்றிருந்தது. குஞ்சுகள் தாயின் வருகையை எதிர்பார்த்து அடிக்கடி வெளியே தலையை நீட்டி யெட்டிப்பார்த்தன. அப்போது வாழைக்குருத்து பச்சைப் பாம்புபோல் அவற்றிற்குத் தெரிய அஞ்சித் தலையை உள்ளே யிழுத்துக் கொண்டன. இப்படிப் பலகால் நிகழ்ந்தது. இக் காட்சியைப் பரராசசிங்கம் பார்த்தான். கிளிக்குஞ்சுகள் அச்சமுற்றுத் தலையை உள்ளே யிழுத்துக்கொள்வதற்குக் காரணம் அவனுக்குப் புலப்படவில்லை. அவன் அதைப்பற்றியே எண்ணமிட்டுக்கொண்டு அரண்மனையை அடைந்தான்.

அரசன் அன்று அத்தாணிமண்டபத்தை அடைந்ததும் தன் மனக்கவலை இன்னதென்றுணர்ந்து யாரேனும் புலப்படுத்த வேண்டுமென்று புலவர்களைப் பார்த்துவேண்டிக் கொண்டான். புலவர்களுக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து விழித்தனர். பிறகு அப் புலவர்களுள் ஒருவர் அரசனைப் பார்த்து, "சோழநாட்டிலிருந்து வந்திருக்கும் அந்தகக்கவி வீரராகவ முதலியார் என்பவர் கண்டசித்தி பாடுவதில் வல்லவர். அவரை யழைத்தால் அவர் நும் மனக்கவலையைத் தீர்த்து உண்மையை உரைக்கக்கூடும்," என்றார். அரசன் அதற்கு உடன்பட்டு வீரராகவ முதலியாரை அழைப்பதற்கு ஏற்பாடு செய்தான். அழுக்காறுகொண்ட ஒரு சிலர், "அரசன் குருடாக வுள்ளவர்களைப் பார்க்கலாகாது," என்று கூறித் தக்க ஏதுவும் காட்டினர். அரசன் அரியணைக்கும் புலவர் இருக்கைக்கும் இடையே திரையொன்று கட்டினர். வீரராகவ முதலியாரும் அவைக்களத்தை யடைந்தார்.

கவிவாணர் இருக்கைக்கும் அரசன் இருக்கைக்கும் இடையே திரையிடப் பட்டிருத்தலைக் கண்ட முதலியார்

மாணவன், 'சிவசிதம்பரம் சிவசிதம்பரம்' என்று கூறி முதலியாரை அவருக்கென இடப்பட்டிருந்த இருக்கையில் இருத்தினன். மாணவன் கூறியதை யறிந்துகொண்ட முதலியார், 'அண்ணுமலை அண்ணுமலை' என்று இருமுறை கூறி,

"நரைகோட் டிளங்கன்று நல்வள நாடு நயந்தளிப்பான்
விரையூட்டு தார்ப்புய வெற்பீழ மன்னனென் றேவிரும்பிக்
கரையோட்ட மீதின் மரக்கலம்போட் டுன்னைக் காணவந்தால்
திரைபோட்டு நீயிருந் தாய்சிங்க பூப சிரோமணியே."

என்ற பாடலைச் சொல்லி, இறைவனை யெண்ணினுர்.

அவ்வளவில் அத் திரையில் தீப்பற்றிக்கொண்டது. உடனே திரையை அவிழ்த்து அப்புறப்படுத்தினர். அனைவருக்கும் வீரராகவ முதலியாரிடம் அச்சமும் வியப்பும் உண்டாயிற்று. அரசன் மேலும் புலவரைச் சோதிக்க எண்ணித் தன்கையில் அம்பையும் வில்லையும் ஏந்திக்கொண்டிருந்தான். அப்போது ஓர் அமைச்சன் முதலியாரைப் பார்த்து, "இப்போது அரசன் கோலம் எவ்வாறுள்ளது?" என்று வினவினன். முதலியார் எண்ணமிட்டார். அரசன் இயற்கைக் கோலத்தோடிருப்பின் இக் கேள்வி எழ ஏது வில்லை. ஆதலின் அரசன் தன் கோலத்தை மாற்றிக் கொண்டிருக்கின்றுன். அரசன் அவைக்களக்கோலத்தைத் தவிர கொள்ளக்கூடியது போர்க்கோலமே யாகும். எனவே இப்போது அரசன் அம்பும் வில்லுந் தாங்கியுள்ளான் போலும் என்று ஒரு நொடிக்குள் முடிவு செய்தவராய், "இப்போது இங்கு இராவணன் இல்லை. மாயமானும்

1. நரைகோட்டு - வெள்ளிய கொம்புகளையுடைய. விரை - மணம். தார் - மாலை. புயவெற்பு - புயமலை.

பரராச சிங்கமன்னன் திரையிட்டுக் கொண்டிருந்தபோது இப் பாட்டைப் பாடியதாகவும் வழங்குகிறது.

இல்லை. ஏழு மராமரங்களும் இல்லை. அவ்வாருக நீ வில்லைக் கையிற்கொள்ளக் காரணம் யாது?" என்ற பொருளை யமைத்து,

"வாழும் இலங்கைக்கோ மானில்லை மானில்லை
ஏழு மராமரமோ இங்கில்லை—ஆழி
அலையடைத்த செங்கை அபிராமா இன்று
சிலையெடுத்த வாறெமக்குச் செப்பு."

என்னும் வெண்பாவால் அரசனுடைய கோலத்தைப் பாடிஞர். அரசன் வீரராகவ முதலியாருடைய பேரறிவைக் கண்டு பெருமகிழ்ச்சி யடைந்தான். பின் தன் மனத்திலுள்ள கவலையைத் தீர்க்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டான். உடனே வீரராகவ முதலியார்,

[1] "வடவைக் கனலைப் பிழிந்துகொண்டு
மற்று மொருகால் வடித்தெடுத்து
வாடைத் [2] துருத்தி வைத்தூதி
மறுகக் காய்ச்சிக் குழம்புசெய்து,
[3] புடவிக் கயவர் தமைப்பாடிப்
பரிசு பெருமல் திரும்பிவரும்
புலவர் மனம்போற் சுடுநெருப்பைப்
புழுகென் றிறைத்தாற் பொறுப்பாளோ?
[4] அடவிக் [5] கதலிப் பசுங்குருத்தை
[6] நச்சுக் குழலென் றஞ்சியஞ்சி
[7] அஞ்சொற் கிளிகள் [8] பஞ்சரம் விட்(டு)
அகலா துறையும் அகளங்கா.

---

1. வடவைக்கனல் - வடவைத்தீ. 2. துருத்தி - தோற்பை. 3. புடவிக்கயவர் - உலகத்திலுள்ள கீழ்மக்கள். 4. அடவி - காடு. 5. கதலி - வாழை. 6. நச்சுக்குழல் - பச்சைப்பாம்பு: 7. அம் - அழகிய. 3. பஞ்சரம் - கூடு.

திட [1]முக் கடவா ரணமுகைத்த
தேவே தேவ சிங்கமே
திக்கு விஜயஞ் செலுத்திவரும்
செங்கோல் நடாத்தும் எங்கோவே."

என்னுஞ் செய்யுளைப் பாடினர். இப் பாட்டின் முன்னிரண்டடிகளால் தேவியின் ஊடற் காரணமும், பின்னிரண்டடிகளால் கிளிக் குஞ்சுகள் கூட்டைவிட்டு வெளிவருவதற்கு அஞ்சிய காரணம் வாழைக்குருத்தைப் பச்சைப்பாம்பென மருண்டமையுமே என்பதும் அரசனுக்கு நன்கு விளங்கியது. அரசன் அளவிறந்த உவகையுடையவனானன். முதலியாருக்குப் பலவகைச் சிறப்புக்களும், பொற் பந்தமும், யானைக்கன்றும் அளித்தான். புலவர் பொற் பந்தத்தைக் குறித்து,

[2] "பொங்குமிடி யின்பந்தம் போயதே என்கவிதைக்
கெங்கும் விருதுபந்தம் ஏற்றதே—குங்குமந்தோய்
வெற்பந்த மானபுய வீரபர ராசசிங்கம்
பொற்பந்தம் இன்றளித்த போது."

என்றும் யானைக்கன்று கொடுத்திருத்தலைக் குறித்து,

"இல்லெனுஞ்சொல் லறியாத சீமையில்வாழ்
[3]தானனைப்போய் [4]யாழ்ப்பா ணன்யான்
பல்லைவிரித் திரந்தக்கால் வெண்சோறும் [5]பழந்தூசும்
பாலி யாமல்

---

1. முக்கடவாரணம் - மூன்று மதங்களையுடைய யானை. உகைத்த - செலுத்திய.

2. பொங்குமிடி - மிகுதியான வறுமை. பந்தம் - தொடர்பு. விருதுபந்தம் - வெற்றித்தொடர்பு. வெற்பு அந்தம் ஆனபுயம்-மலையின் அழகிய தன்மையைக்கொண்ட தோள். பொன் பந்தம் - பொன் முடிப்பு.

3. தானன் - கொடையை உடையவன். 4. யாழ்ப்பாணன்- யாழையுடைய பாடகன். 5. பழந்தூசு - பழைய ஆடை.

கொல்லனை நிந் தேதனது [1]நால்வாயைப்
 பரிசென்று கொடுத்தான் பார்க்குள்
தொல்லையென வொருவாய்க்கும் நால்வாய்க்கும்
 இரையெங்கே [2]துரப்பு வேனே."

என்றும் பாடினர். அரசன் யானைக்கன்று வளரும் பொருட்டு வளநாடு ஒன்றும் வழங்கினன். அரசன் அவைக்கு முதலியார் பலநாள் சென்று உரையாடி மகிழ்வித்து வந்தார். அரசன் அவையிலுள்ள புலவர்கள் ஒருநாள் முதலியாரைப் பார்த்துச் சில வினக்கள் விடுத்தனர். முதலியார் அவைகளுக்கெல்லாம் தக்க விடையிறுத்தார்.

வினு :—குருதியுண்ணும் பறவை யாது?

விடை :—கவலை.

வினு :—பசும்பால் என்னும் பண்புத்தொகைக்குப் பொருள் என்ன?

விடை :—கார்காலத்து வெள்ளாட்டுப்பால்.

வினு :—மங்கை மஞ்சளிழந்தும் மங்கலமும் நன்கலமும் இழவாதவெதப்படி?

விடை :—

"மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு."

ஒருநாள் பரராச சிங்கன் வீரராகவ முதலியாரைப் பார்த்துக் கம்பராமாயணச் சொற்பொழிவு செய்தல் வேண்டுமென்று வேண்டிக்கொண்டான். வீரராகவ முதலியார் அதற்கு இசைந்தார். கம்பராமாயணத்தைத் தருவித்தார். மாணவன் ஒருவனைச் சில பாடல்களைப் படிக்கக் கூறித் தாம் பொருள் விரித்தார். அவருடைய சொற்பொழிவைக் கேட்டு அனைவரும் மகிழ்ந்தனர்.

---

1. நால்வாய் - தொங்குகின்ற வாயையுடைய யானை.
2. துரப்புவேன் - நிரப்புவேன்.

மறுநாள் அரசன் அவை கூடியது. வீரராகவர் களைப்புடன் இருப்பவர்போல் காணப்பெற்ருர். அரசன் அவருடைய களைப்புக்குக் காரணம் யாது? என்று கேட்டான். முதலியார் அரசனைப் பார்த்து, "நெருநல் இரவில் இராமாயணப்போர் ஒப்படி செய்தேன். அதனுல் களைப்பு நேர்ந்தது," என்று பதிலளித்தார். "அவ்வாருயின் கண்டுமுதல் யாதோ?" என்ருன் அரசன். "அடித்தது பத்தாயிரம்; அதில் நெல் நாலாயிரம்; கல் இரண்டாயிரம்; புல் நாலாயிரம்," என்ருர் முதலியார். முதலியார் கூறியதைக்கேட்ட அரசன் கம்பராமாயணத்தின் இரண்டாயிரம் பாடல்கள் கல்லைப்போல் கடினமானவை யென்றும், நாலாயிரம் பாடல்கள் செம்பாகம் உடையன வென்றும், நாலாயிரம் பாடல்கள் புல்லைப்போல் மிகக் கீழ்த்தரமானவை யென்றும் உணர்ந்தான். வீரராகவ முதலியாரின் கல்விப்பெருக்கு அரசனுக்கு மிகுந்த மகிழ்ச்சியை விளைவித்தது. அவன் வீரராகவரின் கல்விப்பெருமையை வியந்து,

"இன்னங் கலைமகள் கைமீதில் புத்தகம் ஏந்தியந்தப்
பொன்[1]னம் புயப்பள்ளி புக்கிருந் தாள்என்ன புண்ணியமோ
சன்னன் சயந்தன் கவிவீர ராகவன் [2]கச்சியிலே
தன்னெஞ்சம் ஏடெனக் கற்ருன் கன[3]முத் தமிழையுமே."

என்று பாராட்டினுன். மேலும், அவர் பாடிய திருவாரூர் உலாவைக் கேட்டான். அதனுடைய நயங்கள் அரசனுக்கு உவகையை மிகுதியும் உண்டாக்கியது. அவ்வுலாவைப் பாராட்டி,

---

1. அம்புயப்பள்ளி-தாமரையிருக்கை. 2. கச்சி - காஞ்சிபுரம்.
3. முத்தமிழ் - இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழ்.

"[1]புவி[2]யேர் பெறுந்திரு வாரூ ருலாவைப் புலவர்க்கெல்லாம்
செவியே சுவைபெறு மாறுசெய் தான்சிவ ஞானவனு
பவியே யெனுநங் கவிவீர ராகவன் பாடியநற்
கவியே கவியவன் அல்லாத பேர்கவி [3]கற்கவியே."

என்று பாராட்டியதுடன் மற்றும் முதலியாருடைய நூல்களை யெல்லாம் பார்த்து,

"[4]விரகன் முத்தமிழ்க் கவிவீர ராகவன்
வரகவி மாலையை மதிக்கும் போதெலாம்
உரகனும் வாணனும் ஒக்கக் கூடினல்
சிரகர கம்பிதம் செய்ய லாகுமே."

என்றும் புகழ்ந்து பாடினன். பின்னர் வீரராகவர் ஈழ நாட்டிலே தமக்குக்கிடைத்த ஊர்களில் இந்தியாவிலிருந்து தமிழ்மக்கள் பலரைக் குடியேற்றினர். அவ்விடம் யாழ்ப்பாணம் என்னும் பெயருடன் இன்றுவரை விளங்கி வருகிறது. சில ஆண்டுகள் சென்றபின் வீரராகவர் பரராசசிங்கனின் உடன்பாடு பெற்றுத் தம் நாட்டுக்குத் திரும்பலானர். கயத்தாறு என்னும் ஊர்அரசன்மீது எல்லா அணிகளும் இலங்க ஓர் உலாப்பாடி அரங்கேற்றினர். அந்நூலின் மிகுந்த சுவைக்கு உளமகிழ்ந்த ஒருவர்,

"ஒட்டக்கூத் தன்கவியும் ஓங்கியகம் பன்கவியும்
பட்டப் பகல்விளக்காய்ப் பட்டவே—அட்டதிக்கும்
வீசும் கவிவீர ராகவனும் வேளாளன்
பேசுங் கவிகேட்ட பின்."

---

1. புவி - உலகில். 2. ஏர்பெறும் - அழகுபெறும்.

3. கற்கவி - கதவுநிலையின் மேலிடும் பாவுகல்.

4. விரகன்-வெற்றியையுடையவன். வரகவிமாலை-மேன்மையான பாமாலை. உரகன்-ஆயிரம் தலைகளையுடைய பாம்பாகிய ஆதிசேடன். வாணன் - ஆயிரங்கைகளுடைய வாணசுரன். சிரகரகம்பிதம் - தலையாட்டலும் கைதட்டலும். வீரராகவருடைய மேன்மையான பாக்களைப் புகழும்போது தலையாட்டுதற்கு ஆயிரந் தலைகளையுடைய ஆதிசேடனும், கை தட்டுதலுக்கு ஆயிரங்கைகளையுடைய வாணசுரனும் வரவேண்டுமென்பது கருத்து.

என்று நயமுறப் பாராட்டினர். பின் தமதூராகிய பொற்களந்தைப் பதியை அடைந்தார். தம்முடைய மனைவிக்குத் தமது வருகையை உணர்த்தினர். தாம் வளநாடும் இளங்கன்றும் பெற்று வந்திருப்பதாகத் தெரிவிக்கச் சொன்னர். மனைவி தன் தலைவரை எதிர்கொண்டு வரவேற்ருள். தன் பிழையைப் பொறுக்குமாறு வேண்டிக் கொண்டாள். தாம் அதனைச் சிறிதும் உள்ளத்திற் கொள்ளவே இல்லையென்று முதலியாரும் உரைத்தார். இருவரும் மகிழ்ச்சியுடன் நிகழ்ந்தவைகளைப்பற்றி உரையாடிக்கொண்டிருந்தனர். முதலியாரின் மனைவி முதலியாரைப் பார்த்து, "எனக்கு யாது வாங்கிக்கொண்டு வந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டாள். அவளுடன் வேடிக்கையாகப் பேச விரும்பிய முதலியார், தாம் யானைக் கன்று வாங்கி வந்திருப்பதை அதன் பல பரியாயப் பேர்களுள் ஒன்றினுல், "**களபம்**" என்ருர். முதலியார் மனைவி கலவைச் சாந்தென எண்ணி, "பூசு" மென்ருள். முதலியார், "கலவைச் சாந்தன்று **மாதங்கம்**" என்ருர். முதலியார் மனைவி மிகுந்த தங்கமென்று பொருள் கொண்டு, "அப்படியானல், இனி நமக்குக் குறைவில்லை நாம் நன்கு வாழலாம்," என்ருள். முதலியார், "தங்கமல்ல, **வேழம்**," என்ருர். முதலியார் மனைவி இம்முறை கரும்பெனப் பொருள்கொண்டு, "அப்படியானல் தின்னும்," என்ருள். முதலியார், "கரும்பன்று **பகடு**," என்ருர். முதலியார் மனைவி எருதென்று பொருள் கொண்டு, "நிலத்தை உழலாம்," என்ருள். முதலியார் மீண்டும், "எருதன்று **கம்பமா**," என்ருர். முதலியார் மனைவி கம்பு என்னும் கூலத்தின் மாவெனக் கருதி, "நல்ல களி கிண்டலாம்," என்ருள். முதலியார், "கம்புமா அல்ல, **கைம்மா**," என்ருர். இம்முறை அதன்

பொருளை யுணராத மனைவி இஃதேது புதுமையாக விருக்கிறது என்று திகைத்துப் போயிருந்தாள். முதலியார் இதனை ஒரு பாவாக அமைத்து,

"இம்பர்வா னெல்லை இராமனையே பாடி
என்கொணர்ந்தாய் [1]பாணநீ என்றாள் [2]பாணி,
[3]வம்பதாங் **களப**மென்றேன்; பூசும்என்றாள்;
**மாதங்கம்** என்றேன்நான் வாழ்ந்தோம் என்றாள்;
[4]பம்புசீர் **வேழம்**என்றேன்; தின்னும் என்றாள்;
**பகடு**என்றேன்; உழுமென்றாள் [5]பழனந் தன்னை;
[6]**கம்பமா** என்றேன்; நற் களியா மென்றாள்;
[7]**கைம்மா**என் றேன்;சும்மா கலங்கி னாளே."

என்று நகைச்சுவை ததும்பப் பாடினார்.

ஒருகால் வீரராகவருக்கு ஒரு குதிரை வேண்டியதாயிற்று. அப்போது சேலத்தைச் செழியன் தரையன் என்பவன் அரசு புரிந்துவந்தான். அவனுக்குச் சீட்டுக்கவி யொன்று,

"ஏடாயி ரங்கோடி எழுதாது தன்மனத்
தெழுதிப் படித்த விரகன்
இமசேது பரியந்தம் எதிரிலாக் கவிவீர
ராகவன் விடுக்கு மோலை,
சேடாதி பன்சிரம் அசைத்திடும் புகழ்பெற்ற
திரிபதகை குலசேகரன்
தென்பாலை சேலம்பு ரந்துதா கந்தீர்த்த
செழியன்எதிர் கொண்டு காண்க;

1. பாணன் - பாடுபவன். 2. பாணி - பாணன் என்பதன் பெண்பாற் பெயர். 3. வம்பு - மணம். 4. பம்பு - நிறைந்த. 5. பழனம் - வயல். 6. கம்பம் மா - கம்பத்திற் கட்டப்படும் யானை. 7. கைம்மா - கையை உடைய யானை.

பாடாத [1]கந்தருவம் எறியாத கந்துகம்
பற்றிக்கொ லாத கோணம்
பறவாத கோக்குஅனற் பண்ணைத கோடைவேம்
படையில்தொ டாத சூந்தம்;
சூடாத பாடலம் பூவாத மாவொடு
தொடுத்துமுடி யாத சடிலம்
சொன்னசொற் சொல்லாத கிள்ளையொன்
றெங்குந்து திக்கவர விடல்வேண் டுமே."

என்று அனுப்பினர். செழியதரையனும் பாவாணர் பாவருமையை யுணர்ந்து பாய்மா வொன்றளித்தான். மற்றொரு சமயம் முதலியார்க்கு உடற்பிணிகண்டது. அதற்கு எருமைப்பால் சாப்பிட வேண்டியது இன்றியமையாததாக விருந்தது. அதன் பொருட்டுக் காளத்தி கிருட்டிணப்ப வாணன் என்பவனுக்கு ஒரு சீட்டுக் கவி,

"இனிதினிதெ னச்சேர சோழபாண் டியர்மெச்சும்
[2]இச்சித மதுர வாக்கி
ஈழமண் டலமளவும் [3]திறைகொண்ட கவிவீர
ராகவன் விடுக்கு மோலை,
[4]வனிதையர்வி காரமன் மதராச ரூபன்
மயிலையா திபதி சக்ர
வாளத்தி யாகிநங் காளத்தி கிருஷ்ணப்ப
வாணன் எதிர் கொண்டு காண்க,
கனதமிழ்த் துறையறிம ரக்கலங் கல்வியாம்
கன்னிகா மாட நன்னூல்
கட்டுபேர் கொட்டாரம் [5]வாணி[6]சிங் காதனம்
கவிநாட கஞ்செய் சாலை
வினவுசிவ காதையிற் சர்க்கரையெ னத்தக்க
வினையேன் உடம்பு நோயால்

---

1. கந்தருவம், கந்துகம், கோணம், கொக்கு, கோடை, சூந்தம், பாடலம், மா, சடிலம் ஆகியன குதிரையின் பரியாயப் பெயர்கள்.

2. இச்சிதம் - இனிமை. 3. திறை-கப்பம். 4. வனிதையர்-பெண்கள். 5. வாணி-கலைமகள். 6. சிங்காதனம்-அரியணை.

மெலியுமோ மெலியாத வகைபால் பெருத்ததொரு
[1]மேதிவர விடவே ணுமே.”

என்று அனுப்பினர். சீட்டுக்கவி சென்ற அளவில் வீட்டிற்கு எருமை வந்து சேர்ந்தது. வீரராகவரும் எருமைப் பால் பெற்று மகிழ்ந்தார். ஒருகால் வீரராகவர் இடும்பாவனம் என்னும் ஊருக்குச் சென்றிருந்தார். அவ்வூரில் தகுந்த உணவு, தங்குமிடம் முதலியன அமையவில்லை. பசியுடன் ஒரு பாழ்வீட்டில் படுத்திருந்தார். அங்கு மூட்டைப்பூச்சிக்கடியும் அதிகமாகவிருந்தது. அப்போது,

“ பசி[2]முடுக நோவதல்லால் பாழ்வீட்டில் பாழ்த்த
கொசுகுகடி [3]யாலும் குமைந்தோம்—[4]மிசையில்
நெடும்பாவம் யாஞ்செய்தால் நீரென்ன செய்வீர்
இடும்பா வனநா தரே.”

என்றொரு செய்யுள் இசைத்தார்.

சந்திரவாணன் என்னும் செல்வன் மீது வீரராகவ முதலியார் ஒரு கோவை பாடினர். அக் கோவை புலவர் பெருமக்கள் குழுமிய பேரவையிலே அரங்கேற்றஞ் செய்யப்பட்டுக் கொண்டிருந்தது. அப்பொழுது பெருநயப் புரைத்தல் என்னும் துறையில் வந்த,

“ மாலே நிகராகுஞ் சந்திர வாணன் வரையிடத்தே
பாலேரி பாயச்செந் தேன்மாரி பெய்யநற் பாகுகற்கண்
டாலே யெருவிட முப்பழச் சேற்றின் அமுதவயல்
மேலே முளைத்த கரும்போஇம் மங்கைக்கு மெய்யெங்குமே.”

என்னுஞ் செய்யுளைப் படித்தவுடன் அங்கிருந்த கலையறிவு மிக்க விலைமகளாகிய அம்மைச்சி என்பவள், “ புலவர்க்குக் கண்ணுடன் அறிவுங்கெட்டு விட்டதுபோலும்,” என்றாள். அவள் கூறியதைக் கேட்ட வீரராகவர் அவள் கூறியதன்

1. மேதி - எருமை. 2. முடுக - மிகுதிப்பட.
3. குமைந்தோம்-வருந்தினோம். 4. மிசையில்-விருப்புடன்.

கருத்தை யறிந்துகொண்டு, கையேடுபடிக்கும் மாணவனைப் பார்த்துக், "கொம்பை வெட்டிக் காலை நடு," என்றார். மாணவனும் உடனே சேற்றின் என்னும் மொழியைச், சாற்றின் என்று மாற்றிப் படித்தான். அன்று முதல் அம்மைச்சிக்கும் வீரராகவருக்கும் நட்பு வளர்ந்துவந்தது. இருவரும் மிகுந்த நட்புடையவராயினர்.

காஞ்சீபுரத்து வைணவர்சிலர் அம்மைச்சியின் கல்விச் செருக்கை அடக்கவேண்டு மென்று திட்டமிட்டுக்கொண் டிருந்தனர். வரதராசரின் திருவிழா நெருங்கியது. வரத ராசரின் தேரை அம்மைச்சியின் வீட்டில் மோதுவதற்கு ஏற்பாடு செய்தனர். தேரும் அம்மைச்சியின் வீட்டிற் சென்று முட்டியது. வீட்டை யிடித்துவிட்டுத்தான் தேரை இழுக்க வேண்டுமென்றனர் வைணவப் பார்ப்பனர். முதலியார் பார்ப்பனர்களை யழைத்து, "ஓர் ஏழைப்பெண் ணின் வீட்டையிடிப்பது நேர்மையல்ல. வேறெவ்வகையா லேனும் தேரை யிழுத்துச் செல்லுங்கள்," என்று கூறினர். பார்ப்பனர்களோ பகைமை காரணமாகப் பாவாணர் சொல்லைக் கேளாது தாம் எண்ணியதையே செய்யப் புகுந்தனர். பார்ப்பனரின் தீக்குணத்தையும், பிடிவாதத் தையுங் கண்ட முதலியார் மிகவும் வெகுண்டு,

"பார்ப்பார் குரங்காய்ப் படையெடுத்து வந்தீரோ
தேர்ப்பெருமா ளேகச்சிச் செல்வரே—கோப்பாகக்
கொம்மைச்சிங் காரலங்கைக் கோட்டையென்று எண்ணுதீர்
அம்மைச்சி வாழும் அகம்."

என்று பாடினர். பார்ப்பனர் அஞ்சி, வீரராகவர் கையறம் பாடி நம்மைத் தொலைப்பினும் தொலைப்பர் என்று வேறொரு வகையாகத் தேரை நடத்திக்கொண்டு சென்ற னர். பின்னர் முதலியார் தம் ஊரை யடைந்தார். அவருக்

கொரு பெண்மகவும் தோன்றியது. அவர் பல்லாண்டு இனிதே வாழ்ந்திருந்தார். திருக்கழுக்குன்றஞ் சென்ற போது கழுக்குன்றிறைவன் மீது திருக்கழுக்குன்றமாலை என்னும் ஓர் அரிய நூலைப் பாடினார். அந்நூலின் பெருமை, "கந்தரந்தாதியைப் பாராதே; கழுக்குன்றத்து மாலையை நினையாதே," என்னும் வாசகத்தால் விளங்கும். அதுவே அவர் இறுதியிற் செய்த நூலாகும்.

"மாடேறு தாளும் மதியேறு சென்னியும் மாமறையோன்
ஓடேறு கையும் உடையார் தமக்கிடம் ஊருழவர்
சூடேறு சங்கஞ் சொரிமுத்தை முட்டையென் றேகமலக்
காடேறும் அன்னஞ் சிறகால் அணைக்குங் கழுக்குன்றமே."

என்பது அந்நூலிலுள்ள ஒரு பாடலாகும். வீரராகவ முதலியார் இறுதிவரை இறைவனையே எண்ணியிருந்து அவன் திருவடியை யெய்தினார். முதலியார் பிரிவை யறிந்து அறிஞர் அனைவரும் வருந்தினர். கயத்தாற்று மன்னன்,

"முன்னாட்டுத் தவமுனியுஞ் சேடனும்வான் மீகனும்உன்
முன்னில்லாமல்
தென்னாட்டு மலையிடத்தும் பாரிடத்தும் புற்றிடத்தும்
சென்று சேர்ந்தார்;
இந்நாட்டுப் புலவருனக் கெதிரிலையே கவிவீர
ராக வாநீ
பொன்னாட்டுப் புலவருடன் வாதுசெய்யப் போயினையோ
புகலுவாயே."

என்று கையறுநிலை பாடி உள்ளம் வருந்தினான். புலவரின் புகழுடல் பொன்றாச் சிறப்புடன் என்றும் நின்று நன்றே நிலவுகிறது.

## ௬. தாயுமானவர்

'சோழவளநாடு சோறுடைத்து,' என்று அறிஞர்களால் வியக்கப்பட்டது சோழமண்டலம். சோழ மண்டலம் காவிரியாறு பாய்தலால் 'வான்மாரி பொய்ப்பினுந் தான் யாதும் பொய்யாது, வளஞ்சிறந்து கொழிக்குஞ் சிறப்புடைத்து. சமய குரவர்களால் தேவாரம் பாடிப் புகழ்பெற்ற திருக்கோயில்கள் இந்நாட்டில்தான் மிகுதி யாக விருக்கின்றன. மேலும் சைவ மடங்களும் வேதாந்த மடங்களும்கூட இந்நாட்டில்தான் மிகுதியாக இலங்குகின்றன. இனிய செந்தமிழும் இந்நாட்டில்தான் கனிவுடன் பேசப்பெறுகிறது. இச்சோழ நாடே செந்தமிழ் நாடுமாம் என்பது பல அறிஞர்கள் முடிபு. இந்நாட்டின்கண், திருமறைக்காடென்னும் தென்மொழிப்பெயரை யுடையதும் வேதாரணியம் என்னும் வடமொழிப்பெயரை யுடையதுமாகிய ஓர் அரிய சிவப்பதி உளது. மறைகள் இறைவனை வழிபட்டுப் பூசனை புரிந்தது அப்பதியிலேதான்.

அத் திருமறைக் காட்டிலே ஏறக்குறைய இருநூற்றறுபது யாண்டுகளுக்குமுன் கேடிலியப்பபிள்ளை என்னும் பெயருடையார் ஒருவர் வாழ்ந்திருந்தார். அவர் கல்வி கேள்விகளிலும் இறைவன் வழிபாடு, அவன் அடியார் வழிபாடு ஆகியவற்றிலுஞ் சிறந்து விளங்கினார். அவர் மறைக்காட்டிறைவனுடைய திருக்கோயில் தருமப்பணியாகிய திருத்தொண்டிலே ஈடுபட்டிருந்தார்.

அந்நாளில் திரிசிரபுரத்தைத் தலைநகராகக் கொண்டு, விசயரகுநாத சொக்கலிங்க நாயகர் என்பவர் அரசுபுரிந்திருந்தார். அவர் கேடிலியப்ப பிள்ளையின் கணக்குவன்மை காரிய வன்மை முதலியவைகளைப் பல பெரியோர்கள் சொல்லக் கேட்டிருந்தார். அக்காலத்தில் காரியவன்மையுடையார்

அகப்படுவது அரிதாக விருந்தமையால் கேடிலியப்ப பிள்ளையை வரவழைத்துத் தம்மிடத்திலே ஓர் உயர்ந்த அலுவல் கொடுத்து அமர்த்திக்கொண்டார். கேடிலியப்ப பிள்ளையும் தந்தொழிலைக் கருத்துடன் பார்த்துத் தம்மரசனைக் களிப்பித்திருந்தார்.

அப்போது மறைக்காட்டிலே இருந்த கேடிலியப்ப பிள்ளையின் மூத்த உடன்பிறந்தார் பிள்ளைப்பேறில்லாது அல்லற்பட்டுக் கொண்டிருந்தார். அவரை மகிழ்வித்தற் பொருட்டுத் தமக்கு அப்போதிருந்த சிவசிதம்பரம் என்னும் பிள்ளையைத் தம் முன்னவர்க்கு வளர்ப்பாக வழங்கி விட்டார். பின்னர்த் தமக்கொரு மகன் வேண்டுமென்று கேடிலியப்ப பிள்ளை திரிசிரபுரத்துத் திருமலையில் எழுந்தருளிய தாயுமான இறைவனைப் பெரிதும் போற்றி வழிபட்டுக்கொண்டிருந்தார். கேடிலியப்ப பிள்ளையின் வழிபாடு வீண்போகவில்லை. அவருடைய மனைவி மறைக்காட்டிலே ஒரு மைந்தனைப் பெற்றாள். அக்குழந்தை திருமறைக்காட்டிற் பிறப்பினும், திரிசிரபுரத்திறைவன் திருவருளாற் பிறந்தமையின், தாயுமானவர் என்று பெயரிட்டு அருமையாக வளர்த்து வருவாராயினர்.

அக் குழந்தையும் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக நன்கு வளர்ந்து, கல்விப்பயிற்சிக் காலத்தையும் அடைந்தது. பள்ளிக்கூடக் கல்வியைச் சின்னாளிற் செம்மையாகப் பயின்றதுடன் சைவசித்தாந்த நூல்களையும் நன்கு பயின்று உலக வாழ்க்கைக்குரிய பொது அறிவும் நிரம்பப்பெற்று விளங்கியது.

அவ்வாறு தாயுமானவர் தலைசிறந்தாராய் விளங்குங் காலையில் தந்தையாராகிய கேடிலியப்ப பிள்ளை இறைவன் திருவடிநீழலைக் கிட்டினர். அரசருடைய வற்புறுத்தலின்

மேல் தந்தையாருடைய அரச காரியத்தை மைந்தர் பார்க்கலானார். அரசகாரியத்தி லீடுபட்டிருப்பினும் தண்ணீரிலுள்ள தாமரை இலையைப்போல் அக்காரியத்தில் உள்ளம் பதியப்பெறாது, தம்முயிர்க் குறுதிபயக்கும் உயர்வழியிற் செல்லுதலையே எதிர்நோக்கி அக்காலத்தைக் கருதிக் கொண்டிருந்தார்.

அக்காலத்தில் மௌனகுரு சாமிகள் என்னும் பெரியார் திரிசிரபுரத்திற்கு எழுந்தருளித் தாயுமானவர் திருக்கோயிலில் சிலபகல் தங்கியிருந்தார். அவருடைய திருவருள் நோக்கம் தாயுமானவருக்குக் கிடைத்தது. அக்காலத்தில் விசயரகுநாத சொக்கலிங்க நாயகர் விண்ணக வாழ்வையெய்தினர். அவ்வரசருக்கு மக்கட்பேறின்மையால் செய்ய வேண்டிய காரியங்களையெல்லாம் அரசருடைய மனைவி செய்து முடித்து, அரச காரியங்களையும் தானே பார்த்து வருவாளாயினள். தாயுமானவருடைய அழகிய உருவம் அவளுடைய உள்ளத்தை வாட்டி வருத்தியது. தீய எண்ணம் தலையெடுத்தது. ஒருநாள் தாயுமானவரைத் தனியே அழைத்து, “ என்னுடைய அரசாட்சி, செல்வம், உடல், பொருள், ஆவி முதலிய எல்லாவற்றையும் தங்களுக்கே உரிமையாக்குவதாக முடிவு செய்துள்ளேன். அடியாளைத் தங்களுடைய விருப்பம்போல் ஆண்டுகொண்டருளுங்கள்,” என்று வேண்டிக் கொண்டாள். அவளுடைய தீய எண்ணத்தை நன்குணர்ந்த தாயுமானவர் அவளுக்கு அறிவு கற்பிக்கவேண்டிய வகையில் கற்பித்தார். “இனி இவ்விடத்தில் சிறிதும் தாமதிக்கலாகாது; தாமதிப்பின் நமக்கு இழிவுவருவது ஒருதலை,” யென்று முடிவுகட்டினர். அவ்விடமிருந்தும் புறப்பட்டு இராமநாதபுரத்திற்குச் சென்று சில நாள் தங்கியிருந்து, பின்னர் இராமேசுரத்தை யடைந்தார்.

தாயுமானவருடைய மூத்த உடன்பிறந்தாராகிய சிவ சிதம்பரம் பிள்ளைக்குத் திரிசிரபுரத்தில் நடந்த காரியங்கள் முழுவதும் தெரிந்தன. அவர் உடனே புறப்பட்டு இராமேசுவரத்தை யடைந்து தம் இளவலாகிய தாயுமான வரைக் கண்டு, வழி விளங்கும்படியாகத் திருமணஞ் செய்துகொண்டு இல்லறத்தில் அமரவேண்டுமென்று வேண்டிக் கொண்டார். இயற்கையிலேயே துறவியைப் போன்ற தாயுமானவர் மணஞ்செய்து கொள்ளலை வெறுத் தார். ஆயினும் உடன்பிறந்தாரின் வற்புறுத்துதலுக்காக வும், தம் அறிவாசிரியராகிய மௌன குருவின் ஆணைக்காக வும் திருமணஞ் செய்துகொள்ள இணங்கினர்.

பின்னர் **மட்டுவார் குழலம்மை** என்னும் மாது நல்லா ளுக்கும் தாயுமானவருக்கும் மணம் நிகழ்ந்தது. தாயுமான வர் சில காலம் இல்லறத்திலமர்ந்து, 'தென்புலத்தார் தெய்வம் விருந் தொக்கல் தான்' என்ற ஐம்புலத்தார்களை யும் ஓம்பி இயல்புடன் இல்வாழ்க்கையை நடத்திக்கொண் டிருந்தார். அந்நாளில் தாயுமானவருக் கோர் ஆண்மகவு தோன்றியது. தாயுமானவர் அக் குழந்தைக்குக் **கனக சபாபதி** என்று பெயரிட்டு அருமையுடன் வளர்த்தார்.

அப்போது முன்னர்த் திரிசிரபுரத்தில் தோன்றித் திருவருள் வழங்கிய மௌனகுரு தேசிகர் ஆங்குத் தோன்றித் தாயுமானவர் துறவறநிலையை யெய்துதற்குக் குறிப்புக் காட்டினர். மெய்யறிவையும் போதித்தருளினர். தாயுமானவர் அதன்பின் சில நாட்கள் இல்லத்தி லிருந்து விட்டுப், பின்னர் இல்லத்தைவிட்டுப் புறப்பட்டுத் திருவாரூர், திருத்தில்லை, திருவருணை, மதுரை முதலிய பல சிவப்பதிகளையும் வழிபட்டுப் போற்றிக்கொண்டு இராமேசுவரத்தை யடைந்தார். அப்போது அங்கு மறை

யின்மையால் அவ்வூர் மக்கள் அல்லற்பட்டுக் கொண்டிருந் தனர். தாயுமானவர் மக்களின் அல்லலைக் கண்டு மன மிரங்கி,

"சைவ சமயஞ் சமயமெனி லச்சமயத்
தெய்வம் பிறைசூடுந் தெய்வமெனில்—ஐவரைவென்
றானந்த இன்பில் அழுந்துவது முத்தியெனில்
வானங்காண் பெய்ம்மின் மழை."

என்னும் திருவெண்பாவைப் பாடியருளினர். அவ்வளவிற் பெருமழை பிடித்து நன்கு பொழிந்தது. ஊரும் வளஞ் சிறந் தோங்கியது. மக்களுந் தாயுமானவரின் பெருமை யைப் போற்றிப் புகழ்ந்து வாழ்த்தினர்.

சிலகாலம் இராமேசுவரத்தில் தங்கியிருந்த தாயுமான வர் பின்னர் இராமநாதபுரத்தை யடைந்து பிரியாதிருந்த அருளையர், கோடிக்கரை ஞானியார் முதலிய நன்மாணவர் கட்கு மெய்யறிவைக் கற்பித்துப் பின்னர்ப் பேரானந்தப் பெருவாழ்வை யடைந்தார்.

தாயுமானவர் அவ்வவ் வமயங்களிலே பாடியருளிய பாடல்கள் பலவும் ஒருங்கு தொகுக்கப் பெற்றுத், **தாயுமானவர் திருப்பாடற்றிரட்டு** என்னும் பெயருடன் உலகில் பொன்றாப் புகழுடன் சிறந்து விளங்குகின்றது. பாடல்கள் எல்லாம் இனிய எளிய தன்மையில் வேதாந்த சித்தாந்தக் கருத்துக்கள் நிறையபெற்றுப் பொதுமறை யாகத் திகழ்கின்றது. மக்கள் அனைவராலேயும் நன்கு மதித்துப் போற்றப்பெறுகின்றது.

## ரு. சிவஞானமுனிவர்

தென்பாண்டித் திருநாட்டின்கண் பாவநாசம் என்றொரு திருப்பதி யுள்ளது. அப் பாவநாசப்பதிக் கருகே விக்கிரமசிங்கபுரம் என்று ஓர் ஊர் தக்கோர் புகழத்தக்க சால்புடன் உள்ளது. அவ்வூரில் ஏறக்குறைய இருநூறு யாண்டுகட்கு முன்னர் ஆனந்தக் கூத்தர் என்னும் அரும் பெயருடையார் ஒருவர் இருந்தார். அவர் பெறலருந் திருவினையுடைய கற்புக்கரசியாகிய மயிலம்மை என்னும் மாதுடன் இல்லறத்தை இனிது நடத்திக் கொண்டிருந்தார். அடியார் அன்பிலும், இறைவன் அன்பிலும் மிகுந்த பற்றுடையவர். இல்வாழ்க்கையை நடத்தவேண்டிய இயல்புடன் நடத்திக் கொண்டிருந்த அவ்விருவருக்கும் இறைவனருளால் ஒரு மகவு தோன்றியது. ஆனந்தக் கூத்தர் அக்குழவிக்குச் செய்யவேண்டிய சடங்குகளை யெல்லாஞ் செய்து முக்களாலிங்கர் என்று திருப்பெயரிட்டுப் பேருவகையுடன் சீர்பெற வளர்ந்துவந்தார்.

முக்களாலிங்கருக்கு அகவையும் ஐந்து நிரம்பியது. ஆனந்தக்கூத்தர் அவரைப் பள்ளிக்கூடத்திற் கனுப்பிக் கல்விகற்கச் செய்தார். முக்களாலிங்கர் தினமும் பள்ளிக்குச் சென்று கல்விகற்றுக் கொண்டிருந்தார். ஒரு தினம் நண்பகலுணவுக்காக முக்களாலிங்கர் பள்ளியில் நின்றும் இல்லத்திற்கு வந்துகொண்டிருந்தார். அப்போது காவியுடை கட்டியவர்களும், திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்தவர்களுமாகிய சில தம்பிரான்களை வழியிலே கண்டார். கருவிலே அமையப்பெற்றுள்ள அடியாரன்பு முக்களாலிங்கருக்கு வெளிப்பட்டது. அவ்வடியார்களிடஞ் சென்று, “அடிகள் என தில்லத்திற்குப் போந்து உணவு கொண்டுசெல்ல வேண்டும்,” என்று வேண்டிக்கொண்டார்.

அத் தம்பிரான்களும் முக்களாலிங்கருடைய அன்பைப் புகழ்ந்து அவருடைய வரலாற்றைக் கேட்டுத் தெரிந்து கொண்டு, இளமையிலேயே இத்தகைய குணங்கொண் டிருத்தல் அருமையிலும் அருமையென வியந்து அவருடன் சென்றனர். அதுகாலை முக்களாலிங்கரின் தந்தையார் வெளியே சென்றிருந்தார். முக்களாலிங்கர் தம் தாயாரைப் பார்த்து, "அத் தம்பிரான்களுக்கு உணவளிக்க வேண்டும்;" என்று வேண்டிக்கொண்டார். மயிலம்மையாரும் மைந்தர் செய்கைக்கு மகிழ்ந்து தம்பிரான்கட்கு இன்னடிசில் சமைத்து உண்பித்தார். அம்மையாருடைய அருங்குணங்களைப் பாராட்டி அத் தம்பிரான்களில் ஒருவர்,

> "அருந்ததியென் னம்மை அடியவர்கட் கென்றும்
> திருந்த வமுதளிக்குஞ் செல்வி—பொருந்தவே
> ஆநந்தக் கூத்தர் அகமகிழத் தொண்டுசெயும்
> மானந் தவாத மயில்."

என்றொரு வெண்பாவால் புகழ்ந்தருளினர். இவ்வெண்பாவை முக்களாலிங்கரே பாடியதாகவும் சிலர் கூறுவர். உணவு முடிந்தபின் தம்பிரான்கள் அவ்வூரிலுள்ள ஓராதீனத்திற் சென்று அமர்ந்திருந்தனர். வெளியே சென்றிருந்த முக்களாலிங்கரின் தந்தை வீட்டையடைந்து தாம் இல்லாதபோது நிகழ்ந்தவற்றைத் தம் மனைவியாரால் அறிந்தார். முக்களாலிங்கரையும் உடனழைத்துக்கொண்டு சென்று அத் தம்பிரான்களைக் கண்டு வணங்கினர்.

முக்களாலிங்கருக்குப் பழவினைப்பயனால் அத் தம்பிரான்களுடன் சென்று மெய்யறிவு நூல்களைக் கற்கவேண்டுமென்னும் விருப்பம் மிகுதியாயிற்று. தம் விருப்பத்தைத் தந்தைக் குணர்த்தினர். முக்களாலிங்கர் மொழிந்ததைக் கேட்டு ஆநந்தக்கூத்தர் வருந்தினர். பின்னர் ஒருவாறு

துணிந்து மைந்தர் தம்பிரான்களுடன் செல்லுதற்கு உடன் பட்டார். முக்களாலிங்கர் தாயாருடைய உடன்பாடும் பெற்றுத் தம்பிரான்களுடன் சென்றூர்.

தம்பிரான்கள் முக்களாலிங்கரைத் தம்முடன் அழைத்துக்கொண்டு சென்று சுசீந்தரத்தை யடைந்தனர். அங்குள்ள திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த திருமடத்தில் அப்போது வேலப்பதேசிகர் என்பவர் எழுந்தருளியிருந்தார். தம்பிரான்கள் முக்களாலிங்கருடன் சென்று அவரைக் கண்டு வணங்கிஞர்கள். வேலப்ப தேசிகர், "முக்களாலிங்கர் யார்?" என்று வினவிஞர். தம்பிரான்கள் நிகழ்ந்ததைக் கூறிஞர்கள். வேலப்பதேசிகர் இவ்வளவு சிறுபிள்ளைக் காலத்திலேயே இத்தகைய உயர்ந்த குணங்களுடன் இருத்தல் மிகவும் அருமையென்று பாராட்டிஞர். சமயதீக்கை முதலியனவுஞ் செய்தார். மெய்யறிவு நூல்களையுங் கற்பித்தார். தக்க பக்குவத்தை யடைந்ததும் காவியுடை தந்து வீடுபேற்றிற்கு வழியையுங் காட்டிஞர். சிவஞானம் என்று தீட்சைப் பெயரும் வழங்கிஞர். முதலில் சிவஞானத் தம்பிரான் என்று முக்களாலிங்கருடைய பெயர் வழங்கிநின்றது. மிகப் பிற்காலத்திலேதான் சிவஞானமுனிவர் என்னும் பெயர் உண்டாயிற்று.

சிவஞானமுனிவர் தென்மொழி இலக்கண இலக்கியங்கள் பலவற்றையுந் தெளிவாகக் கற்றுணர்ந்தார். வடமொழியையுங் கற்றுணர வேண்டுமென்னும் வேட்கை அவரைப் பிடர்பிடித்துந்தியது. வடமொழியையும் அம்மொழி நூல்கள் பலவற்றையும் பயின்று அம்மொழியிலும் வல்லுநராஞர்.

வேலப்பதேசிகர் திருவாவடுதுறையிலுள்ள தம்முடைய அறிவாசிரியரைப் பார்க்க விரும்பிஞர். 'சிவ

ஞானத் தம்பிரானையும் மற்றுஞ் சிலரையும் உடனழைத்துக்கொண்டு புறப்பட்டார். பாண்டிநாட்டிலுள்ள பல திருப்பதிகளையும் வணங்கிக்கொண்டு செப்பறைப் பதியை அடைந்தார். ஆங்குத் திருக்கோயில் கொண்டருளிய அழகியகூத்தரையுஞ் சிவகாமியையும் வணங்கினார். அப்பதிக் கருகேயுள்ள இராசவல்லிபுரம் அகிலாண்டேசுவரி மீது வேலப்பதேசிகர் விருப்பப்படி பதிகமொன்று பாடினார் சிவஞான முனிவர். அப் பதிகம் தேசிகர் முன்பு அங்கு அரங்கேற்றஞ் செய்யப்பட்டது. பின் அனைவரும் கொங்கு நாடடைந்து பேரூரில் தங்கியிருக்கும்போது வேலப்பதேசிகர் இறைவன் திருவடிநீழலை யெய்தினார்.

சிவஞான முனிவர் தம்மாசிரியருக்குச் செய்யவேண்டிய இறுதிச் சடங்குகள் யாவற்றையும் இயற்றினார். பின் அவ்விடத்தில் ஒரு தம்பிரானை அமர்த்திவிட்டு மற்றவர்களோடு திருவாவடுதுறையை யடைந்தார். அப்போது அங்கு ஒன்பதாவது ஆசிரியராக வீற்றிருந்த வேலப்ப தேசிகரைக் கண்டு வணங்கினார். அவரிடம் திருப்பேரூரில் இரண்டாவது வேலப்பதேசிகர் இறைவன் திருவடிப் பேறெய்திய செய்தியைத் தெரிவித்தார்.

சிவஞான முனிவர் திருவாவடுதுறையி லிருந்தகாலத்தில் பஞ்சாக்கர தேசிகர் மாலை என்ற நூலை யியற்றியருளினார். சங்கரநமச்சிவாயப்புலவர் இயற்றிய நன்னூல் விருத்தியுரையை ஆராய்ந்து அதில் சில பகுதிகளை நீக்கியும் சேர்த்தும் புதுப்பித்தருளினார். திருவாரூர் வைத்தியநாத தேசிகர் இயற்றிய இலக்கண விளக்கம் என்னும் நூலை ஆராய்ந்து பார்த்து, அதிலுள்ள பிழைகளையெல்லாம் எடுத்துக்காட்டி இலக்கண விளக்கச் சூறாவளி என்னும் நூலைச் செய்தார். சித்தாந்த மரபு கண்டனக்

கண்டனம், சிவஞானபோதச் சிற்றுரை, சிவஞான சித்தியார் சுபக்கப் பொழிப்புரை முதலிய நூல்களையுஞ் செய்தார்.

பின்னர்ச் சிவப்பதிகள் பலவற்றிற்குஞ் சென்று இறைவனை வழிபட வெண்ணினர். வேலப்பதேசிகரை வணங்கி விடைபெற்றுக்கொண்டு தம் மாணவர்களுடன் புறப்பட்டார். திருத்துருத்தி, மாயூரம், திருத்தில்லை முதலிய பதிகளை வழிபட்டுக்கொண்டு திருப்பாதிரிப்புலியூரையடைந்தார். அங்கு ஒரு தினம் திருக்கோயிலின்கண் கூடியிருந்த புலவர்கள் பேரவையில் அறிவுந், திருவும் ஒருங்கே வாய்க்கப் பெற்றவர் ஒருவர் நூறு பொன் கொண்ட ஒரு பொன் முடிப்பைக் கொண்டுவந்து வைத்து, "கரையேறவிட்ட முதல்வா உன்னையன்றியுமோர் கதியுண்டாமோ?" என்னும் அடியை ஈற்றடியாக வைத்து ஒரு நல்ல செய்யுள் இயற்றுவார்க்கு அப் பொன் முடிப்பைக் கொடுப்பதாக அறிவித்தார். அன்று முழுவதும் முயன்றும் எவரும் அச் செல்வர் உவந்தேற்குமாறு நல்ல செய்யுளைப் பாடவில்லை. அவ்வூரில் ஓர் ஏழையந்தணன் இருந்தான். அவன் சிவஞான முனிவரையடைந்து, "அப் பாட்டைத் தனக்குப் பாடித் தந்து அப் பொருளையடையச்செய்யவேண்டும்," என்று வேண்டிக்கொண்டான். அவர்,

"வரையேற விட்டமுதஞ் சேந்தனிட
வுண்டனைவல் லின்மென் றூலும்
உரையேற விட்டமுத லாகுமோ
வெனச்சித்தென் றுரைக்கி லென்னும்
நரையேற விட்டமுத னளவனுக்
கொண்டுநறும் புலிசை மேவும்
கரையேற விட்டமுதல் வாவுன்னை
யன்றியுமோர் கதியுண் டாமோ?"

என்று அப் பாடலை முடித்துத் தந்தார். பார்ப்பனனும் பாட்டினைப் பெற்றுப்போய் அவையோரிடம் படித்துக் காட்டிப் பொருளைப் பெற்ருன். அவனுடைய வறுமையும் நீங்கியது.

சிவஞானமுனிவர் திருப்பாதிரிப்புலியூர் இறைவனைப் போற்றி வழிபட்டு அங்கிருந்து புறப்பட்டுக் காஞ்சியை அடைந்தார். ஏகாம்பரநாதரையும் காமாட்சியம்மையையும் வழிபட்டுக்கொண்டு தங்கியிருந்தார். அப்போது சில திருமாலடியார்கள் சிவஞானமுனிவரையடைந்து, "செந்தமிழ் மொழியிலே கம்பராமாயணம் போல் சிறந்த நூல் வேறு யாதும் இல்லையன்றே?" என்று கம்பராமாயணத்தைப் புகழ்ந்து பேசினர். அவர்கள் அவ்வாறு அகந்தையுடன் பேசியது முனிவருக்கு வருத்தத்தையளித்தது. அவர்களை நோக்கிச் சிவஞானமுனிவர், கம்பராமாயணத்தின் முதற்செய்யுளாகிய, "நாடிய பொருள் கைகூடும் ஞானமும் புகழுமுண்டாம்," என்னுங் காப்புச் செய்யுளே முழுதுந் தப்புடைத்து என்று கூறி, அப் பாட்டின் ஒவ்வொரு சொல்லையும் மறுத்தார். அம் மறுப்பைக் கேட்ட மாலடியார்கள் மருண்டு பதில் கூற வகையறியாது விழித்து, "ஆயின் அப்பாட்டு முழுதுங் குற்றமுடையதுதானே?" என்று கூறி வருந்தினர். முனிவரே ஒவ்வொன்றிற்குந் தக்க பதில் கூறி அவர்கள் துயரை நீக்கி அனுப்பினர். அக்காலை அவர்களிடம் மறுத்த மறுப்பும் பிறகு கூறிய விடையும், கம்பராமாயண முதற் செய்யுட் சங்கோத்தர விருத்தி என்னும் பெயருடன் வழங்கி வருகிறது. மற்றும், எடுத்து என்னுஞ் சொல்லுக்கிட்ட வைரக் குப்பாயம், சிவசமவாதவுரை மறுப்பு என்னுங் கண்டன நூல்களையும் இயற்றினர்.

மேலும் முனிவர் காஞ்சிபுரத்திலிருக்கும்போது, சித்தாந்தப் பிரகாசிகை, சுலோக பஞ்சகம், தர்க்க சங்கிரக அன்னம் பட்டீயம், சிவதத்துவ விவேகம் முதலிய நூல்களை வடமொழியில் இருந்தும் தமிழில் மொழிபெயர்த்தருளினர். தொல்காப்பியப் பாயிரத்திற்கும் முதற் சூத்திரத்திற்கும் விருத்தியுரை யெழுதினர்.

பின்னர்ச் சிவஞான முனிவர் காஞ்சிபுரத்திலிருந்தும் புறப்பட்டுத் திருவொற்றியூரையடைந்து ஆண்டுள்ள இறைவனைப் போற்றி வழிபட்டுக்கொண்டிருந்தார். அப்போது அவ்வூரில் மணலிச் சின்னையா முதலியார் என்னும் பெருஞ் செல்வர் ஒருவர் இருந்தார். அவர் தமதூராகிய திருவொற்றியூரில் சிலகாலம் தங்கியிருக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டார். சிவஞானமுனிவரும் அதற்கிசைந்தார். அப்போது தாம் நீண்டகாலமாகச் சிவஞான போதத்திற்கு எழுதவேண்டுமென்று எண்ணியிருக்கும் விருத்தியுரையை நன்கு எழுதுவதற்கு உதவியாகச் சிவாகமங்களையும் ஓதியுணரவேண்டுமென்று எண்ணினர். தம்முடைய கருத்தை மணலிச் சின்னையா முதலியாருக்குத் தெரியப்படுத்தினர். சின்னையா முதலியார் சிவாகமப் பயிற்சி மிக்கார் பலரைப் பலவூர்களில் நின்று வரவழைத்துச் சிவஞான முனிவர் விருப்பத்தைத் தெரியப்படுத்தினர்.

சிவாகமம் வல்ல அந்த அந்தணர்கள் பார்ப்பனரல்லாத சிவஞான முனிவருக்குச் சிவாகமநூலை விளக்கலாமா என்று ஆராய்ந்தார்கள். பார்ப்பனர் அல்லாத சிவஞான முனிவருக்குச் சிவாகமங்களைத் தெரியப்படுத்துவதால் தம்மவர் பெருமைக்குச் சிறுமைவரும் என்று எண்ணினர்கள். சின்னையாமுதலியாரிடம் பார்ப்பனரல்லாதார் சிவாகமங்களை ஓதக்கூடாதென்றும், ஓதினல் மிகுந்

குற்றம் விளையுமென்றும் பலவகையாகக்கூறி மழுப்பினர்கள். சின்னையா முதலியாரோ விடாக்கண்டராய், "ஓதித்தான் ஆகவேண்டும்," என்று ஒரே பிடியாய்க் கூறினர். ஒரு சூழ்ச்சியை உள்ளத்திற்கொண்ட சிவாகமப் பார்ப்பனர் திருவுளச்சீட்டுப் போட்டுப் பார்க்கலாம்; சீட்டுக் கிடைத்தால் உடனிருந்து சிவாகமங்களை ஓதுவிக்கிறோம் என்றார்கள். "சிவஞான முனிவருந்துச் சிவாகமநூலை ஓதுவிக்கக்கூடாது," என்றெழுதிய சீட்டுக்கள் நூறும், "சிவஞான முனிவருக்குச் சிவாகமநூலை ஓதுவிக்கலாம்," என்றெழுதிய சீட்டு ஒன்றையும் ஒரு பானையிலிட்டுக் குலுக்கி ஒரு சீட்டை யெடுத்தனர். "சிவஞான முனிவருக்குச் சிவாகமநூலை ஓதுவிக்கலாம்," என்றெழுதிய சீட்டே கிடைத்தது. சிவாகமப் பார்ப்பனர் தங்கள் சூழ்ச்சி இவ்வாறு வீழ்ச்சியடைந்ததே; இனிமேல் யாதும் தடை கூறுதல் தக்கதன்று என்று சிவாகமங்களைச் சிவஞானமுனிவருடன் ஓதி, அவற்றின் பொருள்களையும் நன்கு விளக்கினர். சிவஞான முனிவர் சிவாகமங்களிலும் வல்லவரானர்.

சிலகாலஞ் சென்றபின் முனிவர் திருவொற்றியூரை விட்டுப் புறப்பட்டுக் காஞ்சிபுரத்தை யடைந்தார். ஆங்குத் தாம் நீண்டகாலமாகத் திட்டமிட்டுக்கொண்டு வந்த சிவஞானபோத மாபாடியத்தை எழுதி முடித்தார். பின்னர் அதனை யெடுத்துக்கொண்டு திருவாவடுதுறை சென்று பல அறிஞர்களும் தம்பிரான்களும் நிறைந்த பேரவையிலே அரங்கேற்றஞ் செய்தார். அனைவரும் கேட்டு மகிழ்ந்தனர். பின்னர் அங்கிருந்து புறப்பட்டு மீண்டும் காஞ்சிபுரத்தை யடைந்து தம் மாணவர்களுக்கு இலக்கண இலக்கிய நூல்களையும் சைவசித்தாந்த நூல்களையும் கற்பித்துக் கொண்டிருந்தார். அந்நாளில் திருத்தொண்டர் திருநாமக் கோவை பாடினர்.

பின் பல சிவப்பதிகளுக்கும் இறைவழிப்பாட்டிற்காகச் சென்ற விடங்களில், வடதிருமுல்லைவாயிலில் திருமுல்லைவாயில் அந்தாதியும், குளத்தூரில் குளத்தூர்ப் பதிற்றுப்பத்தந்தாதியும், சோமேசர் முதுமொழி வெண்பாவும், இளங்காடு என்ற ஊரில் இளசைப் பதிற்றுப்பத் தந்தாதியும் பாடினார். பயணத்தை முடித்துக்கொண்டு காஞ்சிபுரத்தையடைந்தார்.

காஞ்சியில் தங்கியிருக்குங்கால், கம்ப ரந்தாதி, கச்சி ஆநந்த ருத்திரேசுரர் பதிகம், ஆநந்தக்களிப்பு முதலியவைகளைப் பாடினார். காஞ்சியின் பெருமைகளைக் கூறுவதாகிய காஞ்சிப் புராணத்தையும் சிவஞானமுனிவர் பாடத் தொடங்கி அரிய கற்பனை நயங்கள் நிறையுமாறு முதற் காண்டத்தைப் பாடினார்.

காஞ்சிப்புராணத்தைச் சிவஞான முனிவர் காஞ்சியில் ஒரு பேரவையைக் கூட்டி அதில் அரங்கேற்றஞ் செய்யத் தொடங்கினார். காஞ்சிப்புராணத்தின் முதற்கண் கூத்தப்பிரான் வணக்கம் கூறப்பெற் றிருந்தது. அதனைக் கேட்ட புலவர் சிலர், "முதலில் இப்பதிக் குரிய ஏகாம்பரநாதப் பெருமான் வணக்கங் கூறாது கூத்தப்பிரான் வணக்கம் கூறியது ஏன்?" என்று வினவினர்.

அப்போது அப்பேரவைக்கண், சிவஞான முனிவருடைய தலைசிறந்த மாணவர்களாகிய கச்சியப்பத் தம்பிரான், சுப்பிரமணியத் தம்பிரான் முதலியோருங் கூடியிருந்தனர். சிவஞான முனிவர் தடை கூறியவர்களுக்குத் தக்கபடி விடைகூற எண்ணினார். காஞ்சி ஓதுவார் சிலரையழைப்பித்தார். அப் பதிக்குரிய தேவாரப்பதிகம் ஒன்றைப் பாடுமாறு கூறினார். அவர்களும் அவ்வாறே பாடத் தொடங்கித், 'திருச்சிற்றம்பலம்' என்றனர்.

சிவஞானமுனிவர் குறிப்பை யுணர்ந்த கச்சியப்பத் தம்பிரான், அவ்வோதுவார்களை மேலே பாடாதவாறு தடுத்து நிறுத்திப், புராணத்திற்குத் தடை கூறியவர்களைப் பார்த்து, "இவ்வோதுவார்கள் இப் பதிக்கேற்றபடி பிருதிவியம்பலம் என்று கூருமல் இங்குத் திருச்சிற்றம்பலம் என்று கூறுகிருர்களே. இஃது உங்களுக்கு உடன்பாடு தானு?" என்று கேட்டார். தடை கூறியவர்கள் விடை கூற வறியாது விழித்தனர்; மெல்லப் பேரவையை விட்டும் நழுவினர். புராண அரங்கேற்றமும் இனிது நிறைவேறியது. அப் புராணத்தின் இரண்டாம் காண்டம் கச்சியப்பத் தம்பிரானுல் பாடி முடிக்கப் பெற்றது.

அப்போது தொட்டிக்கலை என்னும் ஊரில் பெருஞ் செல்வராக வாழ்ந்திருந்த கேசவ முதலியார் என்பவர் சிவஞானமுனிவரைக் கண்டு வணங்கித், "தம்மூராகிய தொட்டிக்கலைக்கு வந்து சிறிது காலந் தங்கியிருக்க வேண்டும்," என்று கேட்டுக் கொண்டார். முனிவரும் அவர் வேண்டுகோளுக் கிணங்கித் தம் மாணவர் திருக்கூட்டத்துடன் தொட்டிக்கலை சென்று தங்கியிருந்தார். அப் பதியிலெழுந்தருளிய சிதம்பரேசுவரர்மீது, கலைசைப் பதிற்றுப்பத்தந்தாதி என்னும் நூலையும், அப் பதிப் பிள்ளையார்மீது செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ் என்னும் நூலையும் பாடி அரங்கேற்றஞ் செய்தருளினுர்.

பின்னர்த் திருவாவடுதுறையை அடைந்து அடியவர் திருக்கூட்டத்துடன் தங்கியிருந்தார். இறுதிவரை மாணவர்கட்கு இலக்கண இலக்கியங்களையும், சைவ சித்தாந்த நூல்களையும் கற்பித்துக் கொண்டிருந்து சாலிவாகன சகாப்தம் ஆயிரத்தெழுநூற்றெட்டில் இறைவன் திருவடிப் பேற்றை எய்தினுர்.

# கூ. மயிலேறும் பெருமாள் பிள்ளை

மயிலேறும் பெருமாள் பிள்ளை பாண்டி நாட்டிலுள்ள திருநெல்வேலியில் இருநூற்றைம்பது ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்திருந்த தாண்டவ மூர்த்திப் பிள்ளை யென்பவருக்குப் பிள்ளையாகத் தோன்றியவர். அவருடைய குலம் வேளாளர் குலம். மயிலேறும் பெருமாள் பிள்ளை செல்வக் குடும்பத்தில் தோன்றியவராதலின், பொருட்கவலை யற்றவராய்க் கல்வித்துறையிலே ஈடுபட்டார். கல்விப்பொருள் தக்காங்கு அமைவதாயிற்று. சைவத்திலே மிகுந்த பற்றுடையவர். இறைவனிடத்தும் அடியார்மாட்டும் பேரன்பு கொண்டவர். திருவாடுதுறை யாதீனத்திற்கு அடிக்கடி செல்வதும் ஆதீனத் தலைவரோடு அளவளாவி யிருத்தலும் அவருக்கு வழக்கம்.

இலக்கணக்கொத்துச் செய்த சாமிநாத தேசிகர் முதலியோருக்கும் மயிலேறும் பெருமாள் பிள்ளையே ஆசிரியரென்பது,

"திருநெல் வேலி எனுஞ்சிவ புரத்தன்
தாண்டவ மூர்த்தி தந்தசெந் தமிழ்க்கடல்
வாழ்மயி லேறும் பெருமாள் மகிபதி
இருபத கமலமென் தலைமேற் கொண்டு
இலக்கணக் கொத்தெனும் நூலியம் புவனே."

என்று சாமிநாத தேசிகர் தம்முடைய இலக்கணக் கொத்தில் இயம்புவதாற் பெறப்படுகின்றது. சாமிநாத தேசிகர் திருவாவடுதுறை யாதீனத்திற் சேர்ந்திருந்தார். வழக்கம் போல் ஒருமுறை திருவாவடுதுறை சென்ற மயிலேறும் பெருமாள் பிள்ளை சாமிநாத தேசிகரின் அறிவுநுட்பத்தைக் கண்டார். அவருக்குக் கல்வியை நன்கு புகட்டின் மிக முன்னுக்கு நன்கு வருவரென் றுணர்ந்தார். ஆதீனத் தலைவரின் உடன்பாடு பெற்றுச் சாமிநாத தேசிகரை

அழைத்துச்சென்று செந்தமிழ் இலக்கண இலக்கியங்களைச் செம்மையுறப் போதித்தார். வடமொழி வல்லவரைக் கொண்டு அம் மொழிப்பயிற்சியும் அளித்தார். சாமிநாத தேசிகரேயன்றி மற்றும் பலர் மயிலேறும் பெருமாள் பிள்ளையிடம் கல்வி கற்றனர். ஆயினும் அவர்கள் சாமிநாத தேசிகரைப்போல் முன்னுக்கு வரவில்லை. கல்விப் பயிற்சி முற்றுப்பெறுவதற்கு முன்னரே சிலர் கற்றலை நிறுத்தி விட்டனர்.

மயிலேறும் பெருமாள் பிள்ளை தொல்காப்பிய முதலிய இலக்கண நூல்களினும் சங்க இலக்கியங்களினும் நன்கு தேர்ச்சி பெற்றவர். எத்தகைய கடுமையான நடையில் அமைந்த செய்யுள்களாயினும் அவைகட்கெல்லாம் மிக எளிதாகப் பொருள் கூறும் ஆற்றல் படைத்தவர். பிரயோக விவேகமியற்றிய திருக்குருகூர் சுப்பிரமணிய தீட்சிதர் முதலியோர் இவர் காலத்தினராவர்.

கல்லாடம் என்னும் நூல் மிகக்கடிய நடையில் அமைந்து எத்தகையோர்க்கும் பொருள் விளங்காத நிலைமையில் இருந்தது. கல்லாடர் என்பவரால் செய்யப்பெற்ற அந்நூல் எல்லோராலும் நன்கு கற்றுணரப்படாதிருப்பதைப் பார்த்து மயிலேறும் பெருமாள் பிள்ளை அந் நூலுக்கு உரையெழுதத் தொடங்கினர். முப்பத்தேழு பாடல்களுக்கு அரிய பதவுரை எழுதினர். மற்றவை முடியுமுன் இறைவன் திருவடிப்பேற்றை யெய்தினர். வேறொரு புலவர் பின் அறுபது பாடல்களுக்கு உரை எழுதினர். இறுதியிலுள்ள மூன்று பாடல்கள் மட்டும் இன்றுவரை எவராலும் பதவுரை யெழுதப்பெறுமல் நின்றுள்ளன.

## எ. வைத்தியநாத நாவலர்

தன்னிடத்திற் பிறந்தவர்கட் கெல்லாம் வீடுபேறளிக்கும் விழுமிய சிறப்புடையது திருவாரூர். அத் திருவாரூரின்கண் இற்றைக்குச் சற்றேறக்குறைய இருநூற்றைம்பது யாண்டுகட்கு முன் **வன்மீகநாத தேசிகர்** என்னும் பெயருடையார் ஒருவர் வாழ்ந்திருந்தார். அவர் சைவாச்சாரியார் குலத்தில் தோன்றியவர். நல்ல அறிஞர். அவருக்கொரு மகன் தோன்றினன். அம் மகனுக்கு வைத்திய **நாதன்** என்று பெயரிட்டு அருமையாக வளர்த்துவந்தார்.

வைத்தியநாதனுடைய இளமைக் காலத்திலேயே தாய் தந்தையர் இருவரும் விண்ணுலக கெய்தினர். பின்னர் வைத்தியநாதர் அகோரமுனிவர் என்பவருடைய ஆதரவிலேயே வளர்ந்து வந்ததன்றிக் கல்விப்பயிற்சியும் பெற்றார். 'வைத்தியர் பிள்ளை நோயாளி, வாத்தியார் பிள்ளை முட்டாள்' என்னும் பழமொழி பொய்யாகும்படி புலவராகிய வன்மீகநாத தேசிகர்க்குப் பிள்ளையாகப் பிறந்த வைத்தியநாதர் தாமும் புலவரானார். வைத்தியநாதருடைய தந்தையாராகிய வன்மீகநாதர் தம்முடைய பாவன்மையால் சூனம்பேட்டை மானியமும் உப்பளமும் பரிசாகப் பெற்றவர். அவ் ஆற்றலெல்லாம் வைத்தியநாதருக்கும் அமைந்தது.

வைத்தியநாதர் தம் இளமைக் காலத்திலேயே இறைவனிடத்திற் பேரன்பு கொண்டு தம்மையும் மறந்து அத் தலைவனை யெண்ணியிருக்கும் உயர்நிலை கைவரப் பெற்றார். அதனால் அவருடைய ஆசிரியராகிய அகோர முனிவரும் அவருடன் இருத்தற்கு அஞ்சினர்.

வைத்தியநாதர் **தங்கம்** என்னும் மாதினைத் திருமணம் புரிந்து இல்லறத்தை இனிமையுடன் நடத்தினர். சதாசிவம்,

தியாகராசன், சிதம்பரநாதன், வடுகநாதன், வன்மீகநாதன் என்று ஐந்து பிள்ளைகள் தோன்றினர். வைத்தியநாதர் தம் மாணவர்கட்கு ஒய்வு ஒழிவு இன்றி நூல்களைப் பாடஞ் சொல்வதையே தமது தொழிலாகக் கொண்டிருந்தார். ஒரே நிலையில் உட்கார்ந்து பாடஞ் சொல்வதனால் ஏற்படும் கால்வலியைக்கூட அவர் ஒரு சிறிதும் பொருட்படுத்த மாட்டார். அவர் ஒரு முறை திருவாரூரில் நின்றும் புறப்பட்டுத் திருநெல்வேலிக்குச் சென்றார். மதுரையில் திருமலைநாயக்கரது காரியத் தலைவராக விருந்த திருவேங் கட நாதையர் என்பவர் வைத்தியநாத நாவலரை எதிர்ப் பட்டார். நாவலரின் ஆற்றல் ஐயரின் உள்ளத்தைக் கவர்ந் தது. தம்முடைய பிள்ளைகளுக்குத் தமிழாசிரியராக இருக்கும்படி ஏற்பாடு செய்தார். அப்பொழுது அவர் பல இலக்கண நூற்சூத்திரங்களைத் தொகுத்தும் சிலவற் றைத் தாமாக இயற்றியும் பாடஞ்சொன்னார். அவைகட்கு உரையும் எழுதி அம் மாணவர்கட்குப் போதித்தார். அந் நூலே பிற்காலத்தில் இலக்கணவிளக்கம் எனப் பெயர் பெற்றது. அந் நூலின் சில பகுதிகள் சிவஞான முனிவ ரால் இலக்கண விளக்கச் சூறாவளியால் மறுக்கப்பெற்றன.

படிக்காசுப் புலவர் வைத்தியநாத நாவலரின் மாணவ ரென்பது படிக்காசுப் புலவர் வரலாற்றுள் உரைக்கப் பட்டது. நாவலர் மலையாளத் தரசன்மேற் சில நூல்கள் பாடியதாகவும், அவ்வரசன் நாவலர்க்குப் பல சிறப்புக் களும் கொடுத்து மேன்மைப் படுத்தியதாகவும் கூறுவர். இலக்கணக்கொத்து நூலாசிரியராகிய சாமிநாததேசிக ரும், அந்தகக்கவி வீரராகவ முதலியாரும் நாவலர் புலமை யைப் பாராட்டிப் பாடியுள்ளனர். திருவாமாத்தூரிலிருந்த குறுநில மன்னர் திருவேங்கடநாதர் என்பவர் நாவலரை ஆதரித்ததாகவும் கூறுவர். நாவலரியற்றிய நூல்களில்

இலக்கண விளக்கமும், பிரபோத சந்திரோதயம் என்னும் மெய்ஞ்ஞான விளக்கமும் பெரியன. பிரபோத சந்திரோதயம் என்னும் நூல் வேதாந்தச் செய்திகளை விளக்குவது. இந்நூல் மாதைத் திருவேங்கடநாதர் வேண்டுகோளின்படி இயற்றப்பெற்றது.

வைத்தியநாதநாவலர் அவருடைய காலத்திலே வழங்கிய தொல்காப்பியம், நன்னூல் முதலிய இலக்கண நூல்கள் எல்லாவற்றினும் மிக வல்லுநரென்பது அவர் செய்துள்ள இலக்கண விளக்கத்தால் இனிது பெறப்படும். இலக்கண விளக்கம் மூலத்தையும் உரையையும் வைத்திய நாத நாவலரே செய்தாரென்பது,

"நூல்செய் தவனந் நூற்குரை யெழுதல்
முறையோ எனிலே அறையக் கேணீ
முன்பின் பலரே என்கண் காணத்
திருவா ரூரில் திருக்கூட் டத்தில்
தமிழ்க்கிலக் காகிய வைத்திய நாதன்
இலக்கண விளக்கம் வகுத்துரை எழுதினன்."

என்பதனாற் பெறப்படுகிறது. இலக்கணக் கொத்துச் செய்த சாமிநாத தேசிகர், கல்லாட வுரை செய்த மயிலேறும் பெருமாள் பிள்ளை, நன்னூலுக்கு விருத்தியுரை யெழுதிய சங்கரநமச்சிவாயப்புலவர் ஆகியோர் வைத்திய நாத நாவலர் காலத்திருந்த கீர்த்திபெற்ற செந்தமிழ் வாணர்களாவர்.

---

# அ. அருணாசலக்கவிராயர்

அருணாசலக்கவிராயர் என்னும் அருந்தமிழ்வாணர் தஞ்சைச் சில்லா மாயூரத்திற் கருகிலுள்ள தில்லையாடி என்னும் சிற்றூரைச் சேர்ந்தவர். கி. பி. ஆயிரத்து எழு நூற்றுப் பன்னிரண்டாம் ஆண்டில் நல்லதம்பிப் பிள்ளை என்பவருக்கு நான்காவது பிள்ளையாகப் பிறந்தார். பெற்றோர் இளமையிலேயே கல்வி கற்பித்தனர். அறிவுத் திருவைக் கருவிலேயே பெற்ற கவிராயர் மிகு விரைவில் பள்ளிக்கல்வியைப் பயின்று முடித்தார். அவருடைய இருமுது குரவர்கள் கவிராயருக்குப் பன்னிரண்டாவது ஆண்டு நடக்கும்போதே இறைவனடியை எய்தினர்.

கவிராயருக்குக் கல்வி வேட்கை மிகவும் அதிகரித்தது. அவ் வேட்கையை நிறைவேற்றவேண்டித் தருமபுர ஆதீனத்தை யடைந்தார். அங்கு இலக்கண இலக்கிய நூல்களையும் சைவசித்தாந்த நூல்களையும் நன்கு கற்றுத் தேர்ந்தார். இனிய பாக்கள் இயற்றும் ஆற்றலும் நன்கு பொருந்தியது. கல்வி நிரம்பிய பின்னர்த் தம்முடைய ஊருக்குச் சென்று திருமணம் புரிந்துகொண்டு இல்வாழ்க்கையில் ஈடுபட்டார். காசுக்கடையொன்று வைத்தார். அதன் வருவாய் குடும்ப வாழ்க்கைக்குப் போதியதாகவில்லை. இராமாயணச் சொற்பொழிவாற்றுதலையும் மேற்கொண்டார்.

ஒரு சமயம் கவிராயர் ஒரு வேலையாகப் புதுச்சேரிக்குச் செல்வதற்குப் புறப்பட்டார். சீகாழி சென்று தங்கினார். அங்கு அருணாசலக் கவிராயருக்கு நண்பராக ஒருவர் இருந்தார். அவருடைய பெயர் சிதம்பரம்பிள்ளை. அவரும் பல நூல்களையும் கற்ற ஒரு பாவாணர். அவர் 'பள்ளு' என்னும் ஒருவகை நூலைப் பாடத் தொடங்கி

யிருந்தார். அது முற்றுப்பெறுமல் அரைகுறையாக இருந்தது. அப் பள்ளை முடித்தலுக்கு உதவி செய்யும்படி சிதம்பரம் பிள்ளை அருணுசலக் கவிராயரை வேண்டிக் கொண்டார். கவிராயரும் அந் நூலை நயந்திகழ முடித்துத் தந்தார். பிறகு புதுச்சேரிக்குப் புறப்பட்டுச் சென்றார்.

அருணுசலக்கவிராயரின் அறிவாற்றலைக் கண்ட சிதம்பரம் பிள்ளை கவிராயரைச் சீகாழியிலேயே குடியேற்ற விரும்பினர். உடனே ஒரு வீட்டை விரைவாகக் கட்டி முடித்தார். கவிராயரின் உடன்பாடு பெறுமலே அவருடைய குடும்பத்தினரையும் அழைத்துவந்து அவ் வீட்டில் குடிபுகச் செய்துவிட்டார். புதுச்சேரிக்குச் சென்று காரியத்தை முடித்துக்கொண்டு திரும்பிய கவிராயர் சீகாழியை அடைந்தார். நண்பர் சிதம்பரம் பிள்ளை நட்பின் உரிமையாற் செய்துள்ள காரியங்களையெல்லாம் பார்த்தார். நண்பரின் அவாவைக் கெடுக்காமல் சீகாழியிலே தங்கிவிட்டார். அதுமுதல் அவருடைய பெயர் சீகாழி அருணுசலக் கவிராயர் என்று வழங்கத் தொடங்கியது.

கவிராயர் சீகாழியிலே இராமாயணச் சொற்பொழிவு, புதுநூல் இயற்றல் முதலிய காரியங்களைச் செய்துகொண்டிருந்தார். அவரால் இயற்றப்பெற்ற நூல்கள் சீகாழிப் **புராணம், சீகாழிக்கோவை, அனுமார் பிள்ளைத்தமிழ்,** அசோமுகி நாடகம், இராம நாடகம், முதலியனவாகும். இந் நூல்களுள் இராம நாடகமே மக்களால் பெரிதும் விரும்பிப் போற்றப்பெறுகிறது. இராம நாடகம் மணலி முத்துக்கிருட்டின முதலியார் என்பவர் முன்னிலையில் அரங்கேற்றஞ் செய்யப்பட்டது. அரங்கேற்ற முடிவில் முத்துக்கிருட்டின முதலியார் கவிராயருக்குத் தக்க சிறப்புச்செய்து போற்றினர் என்பது,

"கனந்தந்தான் கனகாபி டேகந் தந்தான்
களங்கமிலாக் கருப்பொருளை யழைத்துத் தந்தான்
மனந்தந்தான் முடிசூட்டு மாலை தந்தான்
வாணிசிங்கா தனத்திருத்தி வரிசை தந்தான்
இனந்தந்தான் இராமகதை எவர்க்குந் தந்தான்
எனைராமா யணக்கவிஞன் எனப்பேர் தந்தான்
அனந்தந்தான் மணலிமுத்துக் கிருட்ண பூபன்
அகந்தந்தான் இருமையினுஞ் சுகந்தந் தானே."

என்னும் பாடலால் பெறப்படுகின்றது. கவிராயர் தமது அறுபத்தேழாம் ஆண்டிலே இறைவன் திருவடி நீழலையெய்தினர்.

கவிராயருக்கு ஒருமுறை பத்து ரூபாய் இன்றியமையாத செலவு ஒன்றின்பொருட்டு வேண்டியதாயிற்று. கையிலோ ஒன்றும் இல்லை. பாப்பையர் என்பவரிடம் சென்று வேண்டினர். அந்தப் பாப்பையரோ இப்போது இல்லையே என்றார். அவரை நோக்கிக் கவிராயர்,

[1] "பத்துரூ பாயனைநேர் பாப்பையவே ளேயுனக்குப்
பத்துரூ பாயென்ன பஞ்சமோ—முத்தநகை
வீழிவாய்ப் பாலுண்ட வேந்தன் பிறந்தசீ
காழியரு ணசலன்யான் காண்."

என்னுஞ் செய்யுளைப் பாடினர் என்ப.

---

1. பத்துஉரு-பத்துவகைப் பிறப்புக்களை யெடுத்த. உபாயனை-சூழ்ச்சிகளையுளடைய கிருட்டினனை.

## ௬௰. இராமலிங்க அடிகள்

'திருவருட்பிரகாச வள்ளலார்' என்னும் சிறப்புப்பெயர் எய்தியவர் இராமலிங்க அடிகள். இப் பெரியார் தென்னார்க் காடு மாவட்டத்திலுள்ள மருதூர் என்னும் சிற்றூரில், இற்றைக்கு நூற்றுஇருபத்துநான்கு யாண்டுகட்கு முன்னர் இராமையபிள்ளை என்பவருக்கும் சின்னம்மையார் என்பவருக்கும் அருமைப் புதல்வராகத் தோன்றினர். இராமையபிள்ளை தம் புதல்வருக்குத் தம்முடைய பெயரையே இராமலிங்கம் என்று மாற்றியமைத்தார். இராமலிங்கரும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தார். இராமலிங்கரின் இளமைக்காலத்தில்தானே இராமையபிள்ளை இவ்வுலக வாழ்வை நீத்தகன்றார்.

இராமலிங்கரின் முன்னவராகிய சபாபதிப்பிள்ளையென்பவர், தம் உடன்பிறந்தார்களை உடனழைத்துக் கொண்டு சென்று, முன்னர்ப் பொன்னேரியிலும், பின்னர்ச் சென்னைநகரிலும் உறைந்திருந்தார். சபாபதிப்பிள்ளை சென்னையை அடைந்தபோது, அங்குக் காஞ்சிபுரம் சபாபதி முதலியார் என்பவர் சீர்த்திபெற்ற தமிழ்ப் புலவராகத் திகழ்ந்திருந்தார். சபாபதிப் பிள்ளை சபாபதி முதலியாரிடம் செந்தமிழ் இலக்கியங்களையும் இலக்கணங்களையும் செவ்வையாகப் பயின்றார். போதிய தமிழாற்றல் எய்தியதும் தாமே மற்றவர்கட்குத் தமிழ்நூல்களைக் கற்பிக்கத் தொடங்கித் தமிழாசிரியரானர். சபாபதிப் பிள்ளை இயற்கையிலேயே சொல்லாற்றல் மிக்குடையவராகத் திகழ்ந்தமையின் பல பேரவைகளிலும் சொன்மாரி பொழிந்ததுடன் புராணச் சொற்பொழிவுகளும் நிகழ்த்தினர். அவற்றின் வருவாய்களே குடும்பப் பாதுகாப்புப் பொருளாகவும் அமைந்தன.

சபாபதிப்பிள்ளை தம் இளவலாகிய இராமலிங்கருக்கும் இளமையிலேயே கல்விப் பயிற்சியை அளிக்கவெண்ணிக் கற்பிக்கலானார். ஆனால் இராமலிங்கரோ கல்வியில் கருத்தற்றவராகக் காணப்பட்டார். தம் இளவல் தம்மிடம் ஒழுங்காகக் கல்வி பயிலாததைக் கண்ட சபாபதிப்பிள்ளை, பிறரிடமாவது விட்டுப் பார்ப்போம் என்று எண்ணியவராய்த் தம் ஆசிரியராகிய சபாபதி முதலியாரிடமே, தம் இளவலை ஒப்புவித்துக் கல்வி பயிற்றுமாறு வேண்டிக் கொண்டார். அவரிடமும் இராமலிங்கனார் ஒழுங்காகப் பாடங் கேட்டாரில்லை. கந்தகோட்டம் குமரகோட்டம் முதலிய விடங்களுக்குச் செல்லுதலையும் ஆங்கெழுந்தருளிய அறுமுகக்கடவுளைப் போற்றி வழிபடுதலையுமே மேற்கொண்டார்.

சபாபதி முதலியார் இராமலிங்க அடிகளாரின் பற்றற்ற போக்கைக் கண்டு, அவருக்குத் தாம் கல்வி கற்பிப்பது வீண் என்று விட்டுவிட்டார். தம் இளவல் தம் ஆசிரியரிடமும் ஒழுங்காகக் கல்வி பயிலாமையைக் கண்ட சபாபதிப்பிள்ளை, தம் இளவலைப் பலவகையாகக் கண்டிக்கலானார். கண்டித்தவைகளெல்லாம் பயனில்லாது ஒழிந்தன. வேறு வகையாக வழிக்குக் கொண்டுவரலாமென்று எண்ணினார். தம் இல்லாளை யழைத்தார். "இராமலிங்கம் நம் சொற்கேட்டு ஒழுங்காகக் கல்வி பயிலாது ஊரைச் சுற்றி வீண்பொழுது போக்குகின்றமையின், இனி வீட்டிலே உணவிடுதல் வேண்டாம்,'' என்று கட்டளையிட்டார். சபாபதிப்பிள்ளையின் மனைவியாராகிய பாப்பாத்தியம்மையார் தம் கொழுந்தராகிய இராமலிங்கரிடம் மிகுந்த அன்புடையவர். இராமலிங்கர் போக்கும் தமையனார் தாக்கும் அவ்வம்மையாரை ஏக்கப்படுத்தித் துன்பக்கடலுள் அழுத்தியது. அவர் இராமலிங்கரைக் கைவிடவும்

முடியவில்லை. கணவர் சொல்லைத் தட்டவும் இயலவில்லை. இருதலைக்கொள்ளியில் அகப்பட்ட எறும்பைப்போல் வருந்தினர். பின்னர் ஒருவாறு தேறினர். இராமலிங்கர் பசியால் வாடி இல்லம் எய்தும்போதெல்லாம் கணவனர் அறியா வண்ணம் மறைமுகமாக உணவுபடைத்தார். இராமலிங்கரும் தம் தமையனர் உண்டு உறங்கும் வேளைநோக்கிப் பின்புற வழியாக வீட்டையடைந்து உண்டு தம் வழக்கப்படி சுற்றித் திரிதலை மேற்கொண்டிருந்தார். நாட்கள் பல சென்றன. இராமலிங்கனருக்கு அண்ணியார் கள்ளத்தனமாக உணவு படைத்து வருவது ஒருவாறு தெரியவந்தது. ஆயினும் அவர் அதை அறிந்துகொள்ளாதவரைப்போல இருந்துவிட்டார்.

இவ்வாறு நிகழ்ந்துவரும் நாளில் ஒருநாள் அடிகளின் தந்தையார் இறந்த நாட்கடன் வந்தது. உறவினர் பலரும் சபாபதிப்பிள்ளையின் இல்லத்திற் கூடினர். அறுசுவையுண்டி சமைக்கப்பட்டது. அனைவரும் இலைகளில் அமர்ந்தனர். சபாபதிப்பிள்ளை தம் இளவலை நினைத்துக்கொண்டார். உடன்பிறந்தான் உடனிருந்து உண்ணுதற்கில்லாது போனதை யெண்ணிக் கவன்றர். அவர் உள்ளம் உணவை நன்கு நாடவில்லை. இராமலிங்கம் எப்படியும் வீட்டிற்கு வந்து உண்டு செல்வான் என்பதை எண்ணி ஒருவாறு தெளிந்தார்.

அனைவரும் உண்டு இளைப்பாறினர். சபாபதிப்பிள்ளையும் சிறிது கண்ணயர்ந்தார். மணியும் மூன்றுக்கு மேலாகியது. இத்தகைய வேளையை எதிர்பார்த்துச் சுற்றித் திரிந்த இராமலிங்கனர் புறக்கடை வழியாகப் புகுந்தார். அந்தப்புறத்தில் இவருடைய வரவை வழிமேல் விழி வைத்து எதிர்நோக்கியிருந்த அண்ணியார் விரைந்து உண

வைப் படைத்தார். உணவோ ஆறிச் சுவைகுன்றிப் பத னழிந்து பழையதாக விருந்தது. 'பசி சுவையறியாது' என் பதற்கேற்பக் கடும்பசியோடிருந்த இராமலிங்கர் விரைந்து உண்டார். தம் தமையனார் எங்கு விழித்துக்கொண்டு விடுவாரோ என்னும் அச்சம் ஒருபுறம் அவர் உண்டலை விரைவாக்கியது. இராமலிங்கனாரின் இந் நிலைமையைக் கண்ட அண்ணியார் பெரிதும் வருந்தினார். எத்தனையோ பேர் உண்டு மகிழ்ந்த இன்றும்கூட இராமலிங்கனார் இவ் வாறு காலந் தப்பிக் கள்ளனைப்போல மெள்ளவந்து ஆறிப் பதனழிந்த உணவை விரைவாக உண்ணவேண்டியதாயிற்றே என்று அவர் எண்ணியபோது உள்ளங் கலங்கிற்று. கண்களினின்றும் கண்ணீர் ஆறாய்ப் பெருகி வழிந்தது. உண்டுகொண்டிருந்த இராமலிங்கம் நிமிர்ந்தபோது அண்ணியாரின் கண்ணீர் அருவியைக் கண்டார். அண்ணியார் வருந்துவதற்குக் காரணம் யாது என்று கேட் டார். அண்ணியார் இராமலிங்கரை நோக்கித், "தம்பி! உன்னுடைய நிலைமைதான் என்னை வருத்துகிறது. நீ இவ்வாறு தமையனார் சொல்லுக்குக் கட்டுப்பட்டு ஒழுங்கா யிராது, தமையனார் சினத்திற்காளாகித் திரிதல் தக்கது அன்று," என்று உரைத்தார்.

அன்புமிக்க அண்ணியாரின் கண்ணியவுரை அடிக ளாரைப் பெரிதும் கவர்ந்தது. இயற்கையாகவே அருள் அமைந்த இராமலிங்கர் அண்ணியாரின் துன்பத்தைப் பொறுக்கவில்லை. அவர் அண்ணியாரை நோக்கி, "நான் இனிமேல் ஒழுங்காக ஓரிடத்தில் இருந்து கல்வியைக் கருத் தூன்றிக் கற்கிறேன். நான் தனித்திருப்பதற்கு ஓரறையை ஒழுங்குபடுத்திக் கொடுங்கள்," என்று கூறினார். அம்மை யாரும் தம் கணவனாரிடம் இராமலிங்கனார் கூறியதைக்கூறி மேல்வீட்டில் ஓரறையை ஒழுங்குபடுத்திக் கொடுத்தனர்.

இராமலிங்கர் தமக்குத் தந்த அவ்வறையில் பூசனைக் குரிய பொருள்கள் சிலவற்றை வாங்கி வைத்துக்கொண் டார். ஒரு பெரிய நிலைக்கண்ணாடியும் கொணர்ந்து அக் கண்ணாடியைச் சுவரில் சார்த்திவிட்டார். அக் கண்ணாடியை மலர்மாலை முதலியவற்றால் அழகுபடுத்தினார். தாம் அதன் முன் இருந்துகொண்டு முருகவேளை நினைந்து மனமுருகி னார். முருகனும் அக் கண்ணாடியில் இராமலிங்கத்திற்குக் காட்சிதந்து மறைந்தான். அறுமுகப் பெருமான் திரு வருளால் இராமலிங்கருக்கு எல்லாக் கலைப்பொருள்களும் இனிது விளங்கின. அறுமுகனைப் பல வகையான இனிய பாக்களாற் பரவிப் போற்றினார். இந் நிகழ்ச்சிகளைவை யும் சபாபதிப் பிள்ளைக்குத் தெரியாது. அவர் தம் தம்பி இப்போது ஊர் சுற்றாது ஓரிடத்திலேயே நிலைத்திருப்ப தாக எண்ணினார். ஓரிடத்தில் நிலைத்தமைக்கு மகிழ்ந்தார்.

சபாபதிப்பிள்ளை முத்தியாலுப்பேட்டையில் ஒரு வீட்டிற் புராணச் சொற்பொழிவு நடத்திக்கொண்டிருந்தார். ஒருநாள் அங்குக் கூத்தப்பிரான் வடிவத்தை அமைத்தற் கும், அன்று திருஞானசம்பந்தப் பிள்ளையார் வரலாற்றைச் சொற்பொழிவாற்றுதற்கும் அவ் வீட்டுக்காரர் ஏற்பாடு செய்திருந்தார். அவர் ஏற்பாடு செய்திருந்த அன்று சொற்பொழிவாளராகிய சபாபதிப் பிள்ளைக்கு உடல்நலங் குன்றியது. அவர் சென்று சொற்பொழிவாற்ற இயலாதவ ரானார். நல்ல வருவாய் கிடைக்கக்கூடிய அன்று அவ்வாறு நேர்ந்தமைக்குப் பெரிதும் வருந்தினார். நிலைமையைத் தன் மனைவியாரிடம் கூறினார். அவ்வம்மையார், "இராமலிங்கத் தாற் போகமுடியுமா, என்று கேட்கிறேன்," எனக்கூறி, இராமலிங்கரிடஞ் சென்று நிலைமையை விளக்கி அவர் சென்று ஏதேனும் சொற்பொழிவுசெய்ய முடியுமா என்று கேட்டார். இராமலிங்கரும், "சென்று என்னால் முடிந்த

வரை ஏதோசெய்து பார்க்கிறேன்," என்றார். அச் செய்தியை அம்மையார் தம் கண்வனாருக்கு அறிவித்தார்.

சபாபதிப் பிள்ளை இராமலிங்கரைக் கூப்பிட்டு, "நீ நான் சொற்பொழிவாற்றும் சோமு செட்டியார் இல்லத் திற்குச் சென்று, என்உடல் நலமின்மையைக் கூறிவிட்டுப் பெரியபுராணத்தில் உள்ள திருஞானசம்பந்தர் புராணத் தில் இரண்டொரு பாடல்களைப் படித்துப் பொருள்கூறி வா," என்று சொல்லியனுப்பினார். இராமலிங்கரும் தமையனார் கட்டளையைத் தலைமேற்கொண்டு குறிப்பிட்ட இடத்திற்குச் சென்றார். வீட்டுக்காரரைக் கண்டார். தமையனார் உடல்நலமின்மையைக் கூறினார். அவருக்குப் பதில் தாம் ஏதேனும் சொற்பொழிவு செய்வதாகக் கூறி னார். இராமலிங்கர் கூறியதைக்கேட்ட வீட்டுக்காரர் முன் னர் வருந்தினாராயினும், பின்னர் ஏதோ இஃதாயினும் நடக்கிறதேயென்று தேறினார். கூத்தப்பிரான் வடிவம் நிலைநாட்டல் இனிது நடைபெற்றது. பின்னர் இராமலிங் கர் தம் சொற்பொழிவைத் தொடங்கினார். ஒன்பது மணிக்கு முடியவேண்டிய சொற்பொழிவு இரவு பன்னி ரண்டு மணிக்குக்கூட முடிவு பெறவில்லை. ஆனால், பாட் டிலோ இரண்டு அடிகள்தான் முடிந்திருந்தன. சொற் பொழிவோ, கேட்டார்ப் பிணிக்குந் தகையவாகவும் கேளாரும் கேட்க வேட்பதாகவும் விளங்கியது. எல்லோ ரும் சொல்லுக்குச் சொல் பொருள்கூறி விரிப்பார்கள். இராமலிங்கரோ எழுத்துக்கு எழுத்துப் பொருள் விரிக்க லானார். பின்னர் ஒருவாறு சொற்பொழிவு முடிவுபெற் றது. அன்று இராமலிங்கர் ஆற்றிய சொற்பொழிவைச் செவிமடுத்த அன்பர்கள், இன்பப் பெருக்கால் உவகைக் கடலில் படிந்தார்கள். சிலர் நிகழ்ந்தவற்றைச் சபாபதிப்

பிள்ளையிடம் வந்து தெரிவித்தார்கள். சொற்பொழிவு நடத்துவிக்குக்கும் வீட்டுக்காரரோ இராமலிங்கரை நோக்கி, "இனி உங்கள் தமையனார்க்குப் பதில் நீங்களே வந்து சொற்பொழிவு நடத்துங்கள். உங்கள் சொற்பொழிவு அருமையாக இருக்கிறது," என்று மிகவியந்து பாராட்டித் தக்கவாறு சிறப்புச்செய்து அனுப்பினார்.

எல்லாச் செய்திகளையும் உணர்ந்த சபாபதிப்பிள்ளை எல்லாம் திருவருள்செயல் என்று மகிழ்ந்திருந்தார். இராமலிங்கரின் சொற்பொழிவுச்சிறப்பு நாடோறும் அதிகரித்து வந்தது. மக்களின் பாராட்டுரையும் அதிகமாயிற்று. சபாபதிப்பிள்ளை தம் இளவலாகிய இராமலிங்கரின் சொற்பொழிவை ஒருநாளைக்குக் கேட்டுப்பார்க்க வேண்டும் என்று எண்ணினார். கல்வி கற்கவிட்டகாலத்தில் அதனைக் கருத்தூன்றிக் கற்காது, ஊர்சுற்றியாகத் திரிந்த இராமலிங்கம் எவ்வாறு நன்கு சொற்பொழிவாற்றக் கூடிய ஆற்றல் படைத்திருக்கக்கூடும், என்னும் ஐயம் அவருள்ளத்திலே ஏற்பட்டது.

ஒருநாள் இராமலிங்கர் சொற்பொழிவாற்றும் இடத்திலே மறைந்திருந்து இராமலிங்கரின் சொற்பொழிவைக் கேட்டார். இராமலிங்கரிடமோ கையேடும் இல்லை; மெய்யேடும் இல்லை. பெருஞ் சொற்கொண்டலாக நின்று அருஞ்சொன்மழை பொழிந்தார். சபாபதிப்பிள்ளை தம் தம்பியைத் தெய்வப்பிறவி என்று தெளிந்தார். அவருக்கு இளவல் இடத்தில் அச்சமும் அன்பும் அதிகரித்தன. இல்லத்திற்குச் சென்றதும் மனையாளை யழைத்து இராமலிங்கரின் வியத்தகு சிறப்பை யெல்லாம் விரித்துரைத்து, அவர் ஒரு தெய்வப் பிறவியினரே என்று கூறினார். கேட்ட அம்மையார், ஏதோ கடவுள் கண் திறந்தார் என்று எண்ணி

முன்னையைவிடப் பன்மடங்கு அன்பும் ஆதரவுங்காட்டி இராமலிங்கரைப் பேணிவரலானர்.

இராமலிங்கருக்கு நாளடைவில் அறிவாற்றலும் கடவுட் டன்மையும் பெருகிவந்தன. அடிக்கடி சென்னைக் கந்த கோட்டம், திருவொற்றியூர் ஆகிய இடங்கட்குச் சென்று இறைவன்மீதும், அறுமுகன்மீதும் அரிய பாமாலைகள் புனைந்து வழிபடலானர். இராமலிங்கர் நாவன்மையும் பாவன்மையும் யாவரையும் கவர்ந்தன. இராமலிங்கரின் ஆற்றலை முன்னரே ஒருவாறுணர்ந்தவரும், முன்னர் சபாபதிப் பிள்ளைக்கும் பின்னர் இராமலிங்கருக்கும் ஆசிரியராக விருந்தவருமாகிய வித்துவான் சபாபதி முதலியார், இராமலிங்கரைக்கொண்டு ஓர் அரிய உரைநடை நூல் எழுதுவிக்க வேண்டுமென்று எண்ணித் தம் எண்ணத்தை இராமலிங்கரிடத்தில் தெரியப் படுத்திக்கொண்டார். இராமலிங்கரும் அவ் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு, சிறியாரும் பெரியாரும் பெரிதும் பாராட்டிக் கற்குமாறு, பெரியபுராணத்திலுள்ள மனுநீதிச் சோழனுடைய வரலாற்றை, **மனுமுறை கண்ட வாசகம்** என்னும் பெயருடன் மிக வியக்கத்தக்க வண்ணம் எழுதியளித்தார். அந் நூலை அனைவரும் பாராட்டி வியந்தார்கள். அன்றுமுதல் இன்றுவரை அவ் வுரைநடை நூல் சிறியார் பெரியார் அனைவராலும் போற்றப் பட்டு இனிது விளங்குகிறது.

அந்நாளில் சென்னையிலிருந்த அறிஞர் சிலருக்குள் **தொண்டமண்டலமா** அல்லது **தொண்டைமண்டலமா** என்னும் ஐய மேற்பட்டுப் பெருஞ்சொற்போர் நடைபெற்றது. ஒன்றும் முடிவாகவில்லை. பின்னர் அனைவரும் இராமலிங்க அடிகளாரிடம்வந்து, தமது ஐயப்பாட்டைத் தெரிவித்தனர். அடிகளார் தக்க ஆதாரங்களுடன் **தொண்டமண்டலம்**

என்று வழங்குவதே தக்கதென்று நிலைநாட்டியதுடன், **தொண்டமண்டல சதகம்** என்னும் நூலினையும் அமைத்துக் கொடுத்தார். அந் நூலுக்குக் காஞ்சிபுரம் சபாபதி முதலியார், புதுவைச் சுப்பராய முதலியார் முதலிய பல அறிஞர்கள் சிறப்புப்பாயிரம் வழங்கினார்கள். அந்நாளில் அடிகளார் ஒழிவிலொடுக்கநூலின் சிறப்புப்பாயிரவிரிவுரை, **சிவநேச வெண்பா, நெஞ்சறிவுறுத்தல், மகாதேவ மாலை, இங்கிதமாலை,** முதலிய பல நூல்களையும் செய்ததுடன் தமது **திருவருட்பாவின் இரண்டாம் மூன்றாந் திருமுறைகளையும்** பாடியருளினார்.

அவ்வாறு பல நூல்களைச் செய்துகொண்டிருக்கும் நாளில், தொழுவூர் வேலாயுத முதலியார் என்பவர், அடிகளாரைப்பற்றி ஒருவாறுணர்ந்தார். அவர் எல்லோருக்கும் எளிதிற் பொருள் விளங்காத, நூறு சிலேடைப் பாடல்களைப்பாடி, அவற்றால் அடிகளாரின் தன்மையை ஆராய வெண்ணினார். தாம் பாடிய பாடல்களை அடிகளாரிடம் கொண்டுவந்தார். அவைகள் சங்ககாலத்துப் புலவர்களால் பாடப்பெற்றவை யென்றும், ஏட்டுச் சுவடிகளிலிருந்து தமக்குக் கிடைத்தன வென்றும், அடிகளாரிடம் பொய் யுரை புகன்று அப் பாடல்கள் எவ்வாறுள்ளன வென்று வினவினார்.

பாடல்களைப் பார்த்த அடிகளின் உள்ளத்தில் உண்மை விளங்கிற்று. அடிகள் முதலியாரைப் பார்த்து, அப் பாடல்கள் சங்ககாலத்துப் புலவர்களாற் பாடப்பெற்றன அல்ல வென்றும், தற்காலத்துக் கற்றுக்குட்டிகளாலேயே பாடப்பெற்றனவென்றும், தவறுகள் பல பொதிந்துள்ளன வென்றும சாற்றினார்.

அடிகளாரின் ஆற்றலைக் கண்ட தொழுவூரார், அடிகளின் அடிகளைப் பணிந்து, தாம் செய்த பெரும்பிழை

யினைப் பொறுத்துத், தம்மை மாணவராக ஏற்றுக்கொண்டு, அருள்புரிய வேண்டுமென்று பெரிதும் வேண்டினர். அடிகளாரும் வேலாயுதரின் குற்றத்தைப் பொறுத்துத் தம் மாணவராக ஏற்றுக்கொண்டார். வேலாயுதனரின் அறிவு மிகச்சிறந்து வளர்ந்தோங்கிற்று. வேலாயுதனர் அடிகளாரை யடைந்து சிறந்தமையைக் கண்ட வேறு பலரும் அடிகளார்க்கு அடியார்களாகிக் கல்விப்பொருளை அருட்குறிப்பானே எளிதிலடைந்தார்கள்.

அந்நாளிலேயே இராமலிங்க அடிகளாரிடம் வியத்தகு செய்கைகள் பல விளங்கின. ஒருகால் அடிகளார் ஒற்றியூரடைந்து இறைவனைப்போற்றி வழிபட்டுவிட்டு ஒரு சாவடியில் படுத் துறங்கினர். அப்போது அவருடைய காதுகளிலே கடுக்கன்கள் விளங்கின. ஒரு கள்ளன் மெள்ள வந்து அடிகளின் ஒரு காதிலுள்ள கடுக்கனைக் கழற்றினன். அதனை யுணர்ந்த அடிகளார், அவன் மேற்புறமிருந்த காதுக் கடுக்கனைக் கைப்பற்றும்வரை அசையாதிருந்து, கைப்பற்றியவுடன் மறுபுறமாகவுந் திரும்பிப் படுத்தார். அக் கள்வன் அக் காதிலிருந்த கடுக்கனையுங் கைப்பற்றிச் சென்றான்.

அடிகளார் நன்னெறிக்கட் செல்லுதலை அடிகளாரின் உறவினர்கள் தடுத்து உலகப் படுகுழியில் வீழ்த்த வெண்ணினர். மிக வற்புறுத்தி அடிகளாரின் உடன்பாட்டையும் அரைகுறையாகப் பெற்றனர். அடிகளாரின் தமக்கையார் உண்ணாமுலையாரின் மகள் தனக்கோட்டியம்மாள் என்னும் கன்னிகையை மணமகளாக்கி மணமுஞ் செய்வித்தனர். இரவில் பள்ளியறைக்குச் சென்ற இராமலிங்கனர், இரவு முழுதும் திருவாசகத்தைக் கையேந்தி அதனை, மனமுருகப் பாடிக் கசிந்துருகி அவ்வின்பப் பெருக்கிலே

தோய்ந்து காலையில் வெளிப்போந்தனர். நாடோறும் அவ்வாறே நிகழலாயிற்று. உறவினர்கள் தங்கள் தவற்றினை அப்போதுதான் உணரலாயினர்.

திருமணத்தால் உள்ளம் யாதும் திரிதலைப் பெறாத அடிகள், பழைய நிலைமையிலேயே இருந்து வியத்தகு செயல்கள் பல புரிந்துகொண்டிருந்தார். ஒருகால் ஓரன்பரின் வேண்டுகோட்கிணங்கி அவருடைய வீட்டிலே நிகழ்ந்த திருமணத்திற்குச் சென்றார். அங்கு மிகுந்த வெளிப்பகட்டாக ஆடையணிந்து ஆரவாரத்துடன் சென்றவர்கட்கே மதிப்பு மிகுதியாக நடைபெறுதலையும், மற்றையோர் பொருட்படுத்தப் பெறாமையையும் கண்ட அடிகளார், அவ் வீட்டிற்கு எதிர்வீட்டுத் திண்ணையிற் சென்று அமர்ந்திருந்தார். அமர்ந்திருந்தவர்,

"சோடில்லை மேல்வெள்ளைச் சொக்காயில் லைநல்ல சோமனில்லை
பாடில்லை கையில் பணமில்லை தேகப் பருமனில்லை
வீடில்லை யாதொரு வீறுப்பு மில்லை விவாகமது
நாடில்லை நீநெஞ்சமே! எந்த வாறினி நண்ணுவையே."

என்னும் பாடலையும் பாடினார். திருமண வீட்டுக்காரர் ஓடோடியும் வந்து அடிகளைப் போற்றி அழைத்துக் கொண்டு சென்று வழிபட்டதுடன், அங்கு வந்த எல்லோரையும் ஒரே படியாகப் பார்த்து மதித்துப் போற்றும்படியாகவும் ஏற்பாடு செய்தார். அடிகளாரின் இச் செய்கையால் அங்கு எல்லோருக்கும் ஒத்த மதிப்பு ஏற்பட்டது.

அடிகளார் பலவிடங்களுக்குஞ் சென்று இறைவழிபாடு புரிந்ததன்றிக், கோடகநல்லூர்ச் சுந்தர அடிகள், சங்கராசாரியார், முருகதாசர் என்னும் தண்டபாணி அடிகள் முதலிய பெரியோர்களிடத்திலும் நட்புக்கொண்டு அளவளாவினார். செயற்கருங்காரியங்கள் பலவற்றை

அடிகளார் புரிந்ததுடன் ஏழை எளியவர்களிடத்தில் மிகுந்த பேரிரக்கங்கொண்டு அவர்கள் உடற்பிணி பசிப் பிணி முதலியவற்றைப் போக்குதலையே தமது முக்கிய காரியமாகவுங் கொண்டிருந்தார். அடிகளார் கருங்குழி என்னும் ஊரில் தங்கியிருந்தபோது, அகல்விளக்கிற்கு அருகிலிருந்த தண்ணீரைத் தவறுக எண்ணெயென்றும் கருதி விளக்கில் எடுத்து ஊற்றி ஓர் இரவு முழுவதும் எரித்தருளினுர்.

வடலூர் என்னும் இடத்தில் ஓர் அறச்சாலையை ஏற்படுத்தினுர். அவ்வறச்சாலையில் எக்காலமும் பசிநோய் மருந்தினை, அடைந்தார்க்கெல்லாம் அளிக்கலானுர். அவ் வறச்சாலைக்குத் திருவருட் செயலால் வேண்டிய பொருள் கள் வேண்டியாங்குக் கிடைத்தன. அடிகள் தண்ணளியே வடிவமாக வந்த பெரியராதலின், பலியிடுதலாகிய தீச்செய் கையைப் பெரிதும் வெறுத்தார். தேங்காயைப் பலியிடு தலைக்கூட அடிகளார் விரும்பவில்லை. பலி பெறுஞ் சிறு தெய்வங்களைத்தானும் அடிகளார் நினைக்கவும் அஞ்சினர். அடிகளாரின் இச் சீரிய பண்புகள்,

> "நலிதரு சிறிய தெய்வமொன் றையோ
> நாட்டிலே பலபெயர் நாட்டிப்
> பலிதர ஆடு பன்றி[1]குக் குடங்கள்
> பலிக்கடா முதலிய வுயிரைப்
> பொலிவறக் கொண்டே போகவுங் கண்டே
> புந்திநொந் துளநடுக் குற்றேன்
> கலியுறு சிறிய தெய்வவெங் கோயில்
> கண்டகா லத்திலும் பயந்தேன்."

என்றும், இன்னும் பலபடியாகவும் பாடியுள்ள பாடல்க ளால் இனிது அறியப்படும்.

---

1. குக்குடம் - கோழி:

அடிகளார் பாடிய அருட்பாக்களை யெல்லாம், புத்தக வடிவமாக அச்சிற் பதிப்பித்து வெளியிடவேண்டுமென்று, அடிகளின் அன்பர்களாகிய புதுவைச் சுப்பராய முதலியார் முதலிய அன்பர்கள் பலர் வேண்டிக்கொண்டனர். அடிகளாரும் அவர்களுடைய வேண்டுகோட்களுக்கு ஒரு வாறு இசைந்தருளினர். அதுவரை பாடிய பாடல்களெல்லாம், தொழூவூர் வேலாயுத முதலியார் அவர்களாலே நான்கு திருமுறையாக வகுக்கப்பெற்று, முதன் முதலாக ஆயிரத்து எண்ணூற்று அறுபத்தேழாம் ஆண்டிலே வெளியிடப்பெற்றது.

அடிகளார் தாம் இறுதியில் ஓரறையில் அமர்ந்து திருக் காப்பிட்டுக்கொள்ளப் போவதாகவும், அவ்வறையினை எவரும் திறந்து பார்த்தல் கூடாது என்றும் முன்னரே கட்டளை பிறப்பித்தார். பின்னர் மேட்டுப்பக்கத்திலுள்ள சித்திவளாகத் திருமாளிகையில் சிலநாள் கதவைத் தாளிட்டுக்கொண்டிருத்தலும், சிலநாள் வெளியே வந்து இருத்தலுமாக இருந்தார். வெளியே வந்து தங்கிய நாட்களில் அரிய சொற்பொழிவுகள் பல செய்தார். அவ்வாறு திங்கள் பல சென்றன.

இறுதியில் ஆங்கிலம் ஆயிரத்தெண்ணூற்று எழுபத்து நான்காம் ஆண்டிலே, தைத்திங்களின் பத்தொன்பதாம் நாளின் புனர்பூசமும் பூசமும் கூடிய நன்னாளில், வெள்ளிக்கிழமையில் இரவு பதினைந்து நாழிகைக்கு மாளிகைக்குள் புகுந்து திருக்காப்பிட்டுக்கொண்டார். அதற்குப்பின் அடிகளார் வெளிப்படவில்லை.

## கo. மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை

மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை இற்றைக்கு நூற்றுமுப்பத்திரண்டு யாண்டுகட்கு முன்னர், சிதம்பரம் பிள்ளை என்பவருக்கும், அன்னத்தாச்சி என்பவருக்கும் முதலாவது பிள்ளையாகத் தோன்றினார். சிதம்பரம் பிள்ளை முன்னர் மதுரையிலும், பின்னர் எண்ணெய்க் கிராமம், சோமரசம் பேட்டை என்னும் ஊர்களிலும் வாழ்ந்திருந்தவர். மீனாட்சிசுந்தரம் பிள்ளை எண்ணெய்க் கிராமத்திற் பிறந்தார். சிதம்பரம் பிள்ளை தமிழ்ப்பயிற்சி மிக்குடையார். பல சிறுவர்கட்கும் பெரியவர்கட்கும் கல்வி கற்பித்தார். மீனாட்சிசுந்தரம் பிள்ளை இளமைக் காலத்தில் தம் தந்தையாரிடம் அந்தாதிகள், கலம்பகங்கள், பிள்ளைத் தமிழ்கள், நிகண்டு முதலியவைகளைப் படித்துணர்ந்தார்.

பிள்ளையவர்களின் பதினைந்தாம் ஆண்டிலேயே தந்தையாராகிய சிதம்பரம் பிள்ளை மண்ணுலக வாழ்வினை நீத்து விண்ணகம் புகுந்தார். அவர் காலமான ஆண்டின் பெயர் விரோதி. தந்தையார் பிரிவுக் காற்றாத பிள்ளை,

"முந்தை யறிஞர் மொழிநூல் பலநவிற்றும்
தந்தை யெனைப்பிரியத் தான்செய்த—நிந்தைமிகும்
ஆண்டே விரோதியெனும் அப்பெயர்நிற் கேதகுமால்
ஈண்டேது செய்யா யினி."

என்னும் பாடலையும், இதைப்போன்ற இன்னுஞ் சில பாடல்களையும் பாடி இரங்கினார். பின்னர்ச் சிறிது நாள் அவ்வூரிலிருந்துவிட்டுத் திரிசிரபுரத்தை யடைந்தார். பல நண்பர்கள் உதவியாலும், செல்வர்கள் உதவியாலும் திருமணஞ் சிறப்புடன் நடைபெற்றது. திரிசிரபுரத்திலேயே நிலைபெற்று ஏட்டுச் சுவடிகள் பலவற்றைத்தேடிமுயன்று கற்றுவந்தார். ஒருவருக்கு ஒரு நூலிற் பயிற்சி யுண்டென்

றறிந்தால் அந்நூலை எவ்வகையேனும் முயன்று அவர்க ளிடம் கற்றுக்கொள்வது பிள்ளையவர்கட்கு வழக்கம். கல்வியைக் கற்றபோதும், தாம் அதனைப் பிறருக்குக் கற்பித்தபோதும், பிள்ளையவர்கள் ஏற்றத்தாழ்வுகளைப் பொருட்படுத்தியதேயில்லை. திரிசிரபுரத்தில் திரிந்த ஒரு துறவி தண்டியலங்கார நூலை நன்கு கற்றவர் என்று அறிந்து, அவர் எவ்வகை நடந்தால் மகிழ்வாரோ அவ் வகை நடந்து அந் நூலைக் கற்றறிந்தார். திருவாவடுதுறை யாதீனத்து வேலாயுத முனிவரிடம் பல நூல்களைப் பயின் றறிந்தார். திருவாவடுதுறை யாதீனத்திற்கு அடிக்கடி சென்று அவ் வாதீனப் பழக்கத்தையுந் தேடிக்கொண்டார்.

செய்யுள் செய்யும் திறன் இவருக்கு இயற்கையாகவே இனிது அமைந்திருந்தது. தம் இளமைக்காலத்தில் தானே திருவூறைப் பதிற்றுப்பத் தந்தாதி, திருப்பைஞ்ஞீ லித் திரிபந்தாதி, அகிலாண்டநாயகி மாலை, அகிலாண்ட நாயகி பிள்ளைத்தமிழ், பழசைப் பதிற்றுப்பத் தந்தாதி முதலிய பல நூல்களையும் பலருடைய வேண்டுகோளின் படி அவ்வக் காலங்களில் பாடி முடித்தார். திரிசிரபுரத் தில் அந்நாளி லிருந்த புலவர்களாகிய அறிஞர்களிடம் அவர் கட்குத் தெரிந்தவைகளை யெல்லாங் கற்றுக்கொண்டார்.

சென்னையில், பல சிறந்த அறிவாளிகளாகிய புலவர் கள் இருக்கிருர்கள் என்னுஞ் செய்தி பிள்ளையவர்கட்குத் தெரிந்தது. சென்னையை அடைந்து அவர்களுடன் அள வளாவி அவர்கட்குத் தெரிந்தவைகளையும், கற்றுணர வேண்டும் என்னும் எண்ணம் இவருள்ளத்தில் வேரூன்றி நின்றது. அதற்குத் தக்ககாலம் வருவதை எதிர்நோக்கி யிருந்தார். அதற்குத் தக்ககாலமுங் கிட்டியது. சென்னை யைச் சேர்ந்தார். அங்கு அப்போது, தாண்டவராயத்

தம்பிரான், காஞ்சிபுரம் மகா வித்துவான் சபாபதி முதலியார், எழும்பூர்த் திருவேங்கடாசல முதலியார், திருத்தணிகை விசாகப் பெருமாளையர், திருவம்பலத் தின்னமுதம் பிள்ளை, அட்டாவதானம் வீராச்சாமிச் செட்டியார், புரசை அட்டாவதானம் சபாபதி முதலியார், மழவை மகாலிங்கையர் முதலிய பல புலவர்கள் இருந்தனர். பிள்ளையவர்கள் அனைவரிடமும் அடக்க ஒடுக்கத்துடன் பழகி அவர்கள் கற்றறிந்தவைகளை யெல்லாந் தாமுங் கற்றுக் கொண்டார்.

முதன் முதலாகச் சிலருடன் மழவை மகாலிங்கையரைப் பார்க்கச்சென்றார். புதியவராகிய பிள்ளையவர்களைக் கண்ட ஐயர், "அவர் யார்?" என்று கேட்டுணர்ந்தார். பின்னர் ஏதேனும் ஒரு செய்யுள் சொல்லுமாறு கேட்டார். பிள்ளையவர்கள் தாம் பாடிய **அகிலாண்ட நாயகி பிள்ளைத் தமிழி**லிருந்து,

[1] "இரசத வரையமர் [2]பவள விலங்கல்
இடம்படர் பைங்கொடியே
இமையவர் மகிழ்வொடு புகழுஞ் [3]சிமயத்
திமயம் வரும்பிடியே,
சரணினை பவ[4]ருட் டிமிரஞ் சிதறச்
சாரு மிளங்கதிரே
சதுமறை யாலு மளப்பரி தான
தயங்கு[5]பொ லாமணியே,
மரகத வரையிள கியவெழி லெனவெழில்
வாய்த்த செழுஞ்சுடரே

1. இரசதவரை - வெள்ளிமலை.
2. பவளவிலங்கல் - சிவபெருமான்.
3. சிமயத்திமயம் - முடிகளையுடைய இமயம்.
4. உள் திமிரம் - அகவிருள்.
5. பொலாமணி - தொளையில்லாத மணி.

[1]மதுரித நவரசம் ஒழுகக் கனியும்
வளத்த நறுங்கனியே
தரணி மிசைப்பொலி தருமக் குயிலே
தாலோ தாலேலோ
தழையுந் [2]தந்தி வனத்தமர் மயிலே
தாலோ தாலேலோ."

என்னுஞ் செய்யுளைக் கூறினர். "இப்பாடல் எந்நூலிலே உள்ளது?" என்றார் ஐயர். பிள்ளை, "அடியேன் இயற்றிய அகிலாண்டநாயகி பிள்ளைத் தமிழில் உள்ளது," என்றார். பிள்ளையவர்கள் கூறிய பாட்டு அவராலேயே இயற்றபெற்ற தென்பதையுணர்ந்த ஐயருக்கு மிக வியப்பாக விருந்தது. அவர் மற்றவர்களை நோக்கி, "இத்தகைய செய்யுள் இயற்றும் ஆற்றலமைந்தும் ஆரவாரமின்றிப் பூனைபோல் அடங்கி யொடுங்கி யிருப்பது மிக அருமை," என்று கூறிப் பாராட்டினர். அப் பிள்ளைத்தமிழ் இன்னும் அச்சிற் பதிப்பிக்கப் பெறவில்லை யென்றுணர்ந்த ஐயர், "கட்டாயம் அதனை உடனே பதிப்பித்து வெளிப்படுத்த வேண்டும்," என்று கூறிச், சிறப்புப்பாயிரம் ஒன்றும் பாடியளித்தார். சென்னையில் தங்கியிருந்தவரையிலும் பிள்ளையவர்கள் மகாலிங்கையரிடமே பெரும்பாலுந் தங்கியிருந்து கற்க வேண்டியவைகளைக் கற்றுக்கொண்டார்.

சென்னையிலிருந்து திரிசிரபுரத்தை யடைந்ததும், பல செல்வர்களும் எளியவர்களும் பிள்ளையவர்களிடம் மாண வர்களாகிப் பல நூல்களைக் கற்றனர். இடையிடையே பல புராணச் சொற்பொழிவுகளையும் பிள்ளையவர்கள் நடத்திக்கொண்டு வந்தார். அந்நாளில் பூவாளூர் தியாக ராசச் செட்டியார், அரன்வாயில் வேங்கடசுப்புப் பிள்ளை, திருவீழிமிழலைச் சாமிநாதக் கவிராயர் முதலியோர் மாண வர்களாகிக் கல்வி கற்றுச் சிறந்தனர்.

1. மதுரிதம் - இனிமை. 2. தந்திவனம் - திருவானைக்கா.

தியாகராசச் செட்டியார் வேண்டுகோட்படி பூவாளூர் சென்றபோது, பூவாளூர்ப் பதிற்றுப்பத் தந்தாதி பாடினார். பூவாளூர்க்கடுத்த லால்குடி என்னும் திருத்தவத்துறையி லெழுந்தருளிய பெருந் திருப்பிராட்டியார்மீது பிள்ளைத் தமிழ் பாடினார். திருவாரூர்க்குச் சென்றகாலை அங்குள்ளார் விருப்பப்படி தியாகராச லீலை பாடினார்.

நாளடைவில் பிள்ளையவர்களின் சீர்த்தி தண்டமிழ் நாடெங்கும் மண்டியது. அந்நாளில் பெங்களூரிற் பெருஞ் செல்வராகவும், தமிழன்பராகவும் விளங்கிய தேவராச பிள்ளை யென்பவர், மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் புகழைக்கேட்டு, மகிழ்ந்து பிள்ளையவர்களைப் பெங்களூருக் கழைத்து வேண்டிய உதவிகளையெல்லாம் புரிந்து பல தமிழ் நூல்களைக் கற்கலானார். தேவராச பிள்ளை கல்வி கற்றதுடன் கன்னட மொழியிலிருந்த குசேலோ பாக்கி யானத்தைத் தமிழில் மொழிபெயர்த்து இனிய செந்தமி ழில் பாடுவதற்கும் முயன்றார். அவ்வேலை அவரால் முடி யாதுபோகவே, குசேலோ பாக்கியானத்தையும் சூதசங் கிதையையும் பிள்ளையவர்களே இனிமை ததும்பப் பாடி முடித்து, அவைகளை அவர் பெயராலேயே வெளியிட்டுக் கொள்ளுமாறும் பணித்தார். மற்றும் பலர் பிள்ளையவர்க ளிடம் பெங்களூரில் கல்வி கற்றனர்.

பிள்ளையவர்கள் பெங்களூரில் இருந்து திரும்பியவுடன் புராணம் பாடுதல், நூலியற்றல், கல்வி கற்பித்தல் முதலிய காரியங்கள் மீண்டும் வழக்கம்போல் நடைபெற்றன. உறையூர்ப் புராணம், காந்திமதியம்மை பிள்ளைத்தமிழ், எறும் பீச்சரம் வெண்பா வந்தாதி, தண்டபாணி பதிற்றுப்பத்தந்தாதி, திருக்கற்குடிமாலை, வாட்போக்கிக் கலம்பகம் முதலியவற்றை இந்நாளில் செய்து அரங்கேற்றினார்.

கல்விப் பயிற்சிக்கு ஓர் எல்லை இல்லை. கலைமகள்கூட இன்னும் கல்வி பயின்றுகொண்டிருக்கிறாள் என்பது சிலர் கொள்கை. நூல்களைக் கற்குந்தோறுங் கற்குந்தோறும் கற்பவர்களுடைய அறிவு, வளர்ச்சியைப் பெறுகிறது.

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு."

என்னும் தெய்வப் புலவர் திருவாக்கின் உண்மையை ஒவ்வொருவரும் தங்கள் நடைமுறையிலே நன்குணர்ந்திருக்கலாம்.

பிள்ளையவர்கட்கு இலக்கண விளக்கத்தின் சில பகுதிகள் நன்கு விளங்காமலிருந்தன. இலக்கண விளக்கத்தை ஐயமறக் கற்றுணர்ந்தார் அந்நாளில் யாவரென்று ஆராய்ந்தார். அந் நூலை நன்குணர்ந்த ஒருவர் அகப்பட்டார். தாம் அவருக்கு மாணவராகி அந்நூலைக் கற்றுத்தெளிந்தார். பல நூல்களைக் கற்றவரும் செய்தவருமாகிய பிள்ளையவர்கள், வேறொருவருக்கு மாணவராகிக் கல்விகற்றது பலருக்கு வியப்பை விளைத்தது.

பிள்ளையவர்கள் பலரிடத்தும் மிக வருந்தித் தாம் கற்ற கல்வியைத் தம்மை நாடிக் கற்க வருபவர்கள் எவ்வகை வருத்தமுந் தோன்றாமல், அவர்கட்கு உணவு உண்டி முதலியவைகளைக்கூட அளித்துக் கற்கச்செய்தார். கல்வி கற்பிக்கும் காரியத்தில் பிள்ளையவர்கள் எந்நாளும் சமய வேறுபாட்டைப் பொருட்படுத்தியதே இல்லை. குலாம் காதர் நாவலர் என்னும் முகமதியர் சீறாப்புராணம் கற்றார். சவரிராயலு நாயகர் என்பவர் கிறித்தவர். இவர் தேம்பாவணி திருக்காவலூர்க் கலம்பகம் முதலியவைகளைக் கற்றார். வேதநாயகம் பிள்ளை என்னும் கிறித்தவர் அரசாங்க அலுவலில் அமர்ந்திருந்தும் பிள்ளையவர்களிடம் பல நூல்களைப்

பாடங்கேட்டுப் பிற்காலத்தில் பெருமை பெற்றவராகத் திகழ்ந்ததுடன் நீதிநூல், சர்வசமய சமரசக் கீர்த்தனை, பெண்மதி மாலை, பிரதாப முதலியார் சரித்திரம் என்னும் நூல்களை இயற்றி இறவாப் புகழ் எய்தினார். இவ் வேத நாயகம் பிள்ளைமீது பிள்ளையவர்கள் **குளத்தூர்க்கோவை** என்னும் கோவையையும் பாடிச் சிறப்பித்தார்.

அண்மையிலுள்ள ஊர்களிலிருந்து பலர் வந்து கற்றதுடன், சேய்மையில் இருந்தும் பலர் வந்து கல்விகற்றுச் சிறப்படைந்தனர். பிள்ளையவர்கள் இரண்டாம் முறை சென்னை சென்றபோது **சித்திரச்சத்திரப் புகழ்ச்சிமாலை, வியாசைக்கோவை** ஆகியவைகளை விநாயக முதலியார் என்னுஞ் செல்வர்மீது பாடினார். சீகாழி சென்ற சமயம் **சீகாழிக்கோவை, திருத்தில்லை யமக வந்தாதி, திருவெண்ணீற்றுமை பிள்ளைத்தமிழ்** முதலியவைகளை இயற்றி அரங்கேற்றினார்.

பிள்ளையவர்கள் பலருடைய விருப்பப்படி மாயூரத்தைத் தம் இருப்பிடமாகக்கொண்டு, மாயூரத்தில் வந்து குடிபுகுந்தார். அப்போது, வல்வம் கந்தசாமிப் பிள்ளை, மாயூரம் முத்துசாமிப் பிள்ளை, சித்தக்காடு நமச்சிவாயப்பிள்ளை, சிவலிங்க வாத்தியார், சுப்புப் பாரதிகள், திருப்பாம்புரம் சாமிநாதப் பிள்ளை, கூறைநாடு முத்துக்குமாரப்பிள்ளை, கோபால் பிள்ளை, அண்ணுசாமி ஐயர், சேஷையங்கார், வெங்குவையர் என்னும் பலர் வந்து கல்வி கற்கத் தொடங்கினார்கள். அந்நாளில் பிள்ளையவர்களுடைய மிகுபுகழ், குன்றின் முடியிலிட்ட விளக்கெனயாண்டும் விளங்கியது.

பிள்ளையவர்களைத் திருவாவடுதுறை ஆதீனப் புலவராக அமர்த்தவேண்டும் என்னும் எண்ணம் சிலருக்கு

நெடுநாளாக விருந்தது. சுப்பிரமணிய தேசிகர் என்பவர் முயற்சி செய்து பிள்ளையவர்களை ஆதீன வித்துவானாக்கினர். பிள்ளையவர்களும் தம்மிடம் கற்கும் மாணவர் குழாங்களொடு ஆவடுதுறையை யடைந்து, அங்குள்ள தம்பிரான்கட்கும் கல்வி பயிற்றலானர். அக் காலத்தில் அம்பலவாணதேசிகர் ஆதீனத்தலைவராக அமர்ந்திருந்தார்; அவர்மீது அரிய கலம்பகமொன்றியற்றி யரங்கேற்றினர். அவ் வரங்கத்தில் '**மகாவித்துவான்**' என்னுஞ் சிறந்த பட்டப்பெயர் ஆதீனத் தலைவராற் பிள்ளையவர்கட்கு அளிக்கப்பட்டது.

பிள்ளையவர்கள் திருவாவடுதுறையில் இருந்தபோது ஆறுமுக நாவலர் நூல்களை அச்சிற் பதிப்பிக்கும் நற்காரியத்திலே ஈடுபட்டிருந்தார். நாவலர் பதிப்பித்த நூல்கள் பலவற்றிற்குத் தாம் சிறப்புப் பாயிரம் அளித்ததுடன், தம்முடைய மாணவர்வளுட் சிறந்தவர்களைக் கொண்டும் அளிக்கச் செய்தார். பிள்ளையவர்கட்கும் நாவலருக்கும் ஒருவரிடத்தில் ஒருவருக்கு நல்ல மதிப்புண்டு. பிள்ளையவர்கள் கல்வி கற்பிப்பதிலும் நூல்கள் பாடுவதிலும் பொழுதைப் போக்கினர். நாவலரோ உரைநடை நூல்கள் எழுதுவதிலும் நூல்களை அச்சிற் பதிப்பித்தலிலும் தம்முடைய பொழுதை அதிகமாகச் செலவிட்டார். இருவர் செயல்களும் தமிழகத்திற்குப் பெரும்பயன் விளைப்பனவாயின. நாவ்லர் திருவாவடுதுறை சென்றிருந்தபோது பிள்ளையவர்களைப் பெரிதும் பாராட்டிச் சென்றார்.

பிள்ளையவர்களைப் பலரும் பற்பல வூர்களுக்கு அழைத்துச் சென்று புராணங்களும் வணக்கநூல்களும் பாடச் செய்திருக்கின்றனர். ஒவ்வொரு நூலும் பாடப் பெற்றவுடனே அல்லது பாடிக்கொண்டிருக்கும்

போதேயோ அரங்கேற்றஞ் செய்வது பிள்ளையவர்களின் வழக்கம்.

பிள்ளையவர்கட்கு ஒருமுறை உடனலங்குன்றி யிருந்த போது சாய்வு நாற்காலி ஒன்று இன்றியமையாததாக விருந்தது. அதன்பொருட்டுத் தம் அன்பர் ஒருவருக்கு,

"உறுவலியி னிடங்கொண்டு [1]வனப்பமைந்த
நாற்காலி ஒன்று வேண்டும்
[2]மறுவறுநாற் காலியெனல் யானையன்று
குதிரையன்று வல்[3]லே றன்று
[4]கறுவகல்பாற் பவ்வன்று விவையெல்லாம்
[5]இயங்குதல்செய் கடன்மேற் கொள்ளும்
பெறுபவர்பால் இயங்காது வைத்தவிடத்
தேயிருக்கப் பெற்ற தாமே.',

"அத்தகைய தொன்றனுப்பின் அதிலமர்ந்து
மிக்கசுகம் அடைவேன் யானும்
உத்தமநற் குணத்திலுயர் நீயுமிகு
சீர்த்தியையா [6]ஒளிரா நிற்பை
[7]வித்தகமற் றலைதெவ்வா திருப்பதற்கும்
இடங்கொடுத்தல் வேண்டு மேய
சுத்தமிகு மதனைவரு பவன்பாலே
யனுப்பிடுதல் தூய தாமே."

இச் செய்யுட்களைப் பார்த்து அவர் உடனே நல்ல சாய்வு நாற்காலி யொன்றை யனுப்பினார்.

நாவலருக்கும் பிள்ளையவர்கட்கும் பின் அவர்களைப் போல் நற்றமிழ்த்தொண்டைக், கல்வி போதிப்பதிலும், நூல்கள் பலவற்றைப் பதிப்பித்தலினும் ஒருங்கே செய்து

1. வனப்பு - அழகு. 2. மறு - குற்றம். 3. ஏறு - காளை.
4. கறுவு - சினம். 5. இயங்குதல் - போதல் வருதல்.
6. ஒளிராநிற்பை - விளங்குவாய். 7. வித்தக - நல்லோனே.

விளங்கிய, உ. வே. சாமிநாதையர் பிள்ளையவர்களையடுத்து அவராற் பெரிதும் கருத்துடன் இறுதிக் காலம்வரை பாதுகாக்கப் பெற்றுக் கல்வி கற்றுச் சிறந்தார். இவ்வையரால் தமிழ்த்தாய் பல அணிகலன்களை இழவாமற் பெற்றதுடன் பெருஞ் சிறப்பும் எய்தினள். ஐயரிடத்திலே பிள்ளையவர்கள் மிகுந்த அன்புடனிருந்தார். ஐயரால்தான் நாம் பிள்ளையவர்களின் முழுவரலாற்றையும் இனிதறிந்து மகிழ்வதுடன், பிள்ளையவர்களின் பெருமையையும் உணர்கிறோம்.

பிள்ளையவர்களின் பெரும் புகழும் பேரும் இந்திய நாட்டில் மட்டுமன்றி வெளி நாடுகளிலும் எட்டியிருந்தது. இலண்டனில் இருந்து ஒருமுறை பிள்ளையவர்கட்கு வந்த கடிதம் ஒன்று, "மீனுட்சிசுந்தரம் பிள்ளை, இந்தியா" என்று மட்டும் விலாசம் எழுதப் பெற்றிருந்தும் பிள்ளையவர்கட்கு வந்து சேர்ந்தது பெருவியப்பை உண்டாக்கிற்றும். இதனுல் பாவேந்தராகிய இவருடைய பெயர் எவ்வளவு தூரம் பரவியிருந்ததென்பதை ஒருவா றுணரலாம்.

இறுதிவரை பிள்ளையவர்கள் மாணவர்கட்குப் பாடஞ் சொல்லுதல், புராணம் இயற்றல், நூல் இயற்றல் முதலிய காரியங்களிலேயே ஈடுபட்டிருந்து தமது சுக-ஆம் அகவையிலே திருவாவடுதுறையில் இறைவன் திருவடி நீழலையடைந்தார். பிள்ளையவர்களின் பிரிவு அன்பர்களனைவரையும் ஆற்றெுணுத துயரில் அழுத்தியது. பலர் பலவகையாக இரங்கற்பாக்கள் பாடி வருந்தினுர்கள்.

பிள்ளையவர்கள் பொறுமையே வடிவாக வந்தவர். யாரிடத்தும் எக்காரணத்தை முன்னிட்டும் சினங்கொண்டதில்லை. பேரறிவாளர்க்கிருக்க வேண்டிய அடக்கம் பிள்ளையவர்களிடம் இயற்கையாகவே அமைந்திருந்தது. ஆயிரக்

கணக்கான பாடலைச் செய்து பழகியவராதலின் மிகவிரைவாகப் பாடுவார். இவர் புதுப்பாடல்களை இயற்றுவது மனப்பாடஞ் செய்த பழம் பாடல்களைக் கூறுவது போன்றிருக்கும். பொருளை ஒரு பொருளாக எண்ணி எவரையும் எந்தக் காலத்திலும் இவர் பொருட்படுத்தியதில்லை. கிடைத்த பொருள்களைத் தொகுத்து வைத்திருப்பின் இவர் பிற்காலத்தில் பெருஞ் செல்வராக விளங்கியிருக்கலாம். அவ்வாறெல்லாஞ் செய்யாது கிடைத்த பொருள்களை அப்பொழுதைக் கப்பொழுது செலவிட்டுச் செல்வம் என்னும் பொருளை அதன் பெயருக்கேற்றபடியே செய்துவிட்டார். அறிவிலாரின் வெற்றுரைகளைக் கேட்குங்கால் அவற்றைக் கேட்டுக்கொண்டு பேசாதிருப்பாரேயன்றி மறுத்துரையாடார். 'அறிவோர்க்கழகு கற்றுணர்ந்தடங்கல்' என்பதற்குப் பிள்ளையவர்களே தக்க சான்றாவர்.

பிள்ளையவர்கள் இயற்றிய நூல்களில் பல வெளிவந்துள்ளன. பிள்ளையவர்கள் செய்த நூல்கள்:—1 அம்பர்ப் புராணம், 2. ஆற்றூர்ப்புராணம், 3. உறையூர்ப்புராணம், 4. கண்டதேவிப்புராணம், 5. காசிரகசியம், 6. குறுக்கைப் புராணம், 7. கோயிலூர்ப்புராணம், 8. சூரைமாநகர்ப்புராணம், 9. தனியூர்ப்புராணம், 10. தியாகராசலீலை, 11. திருக்குடந்தைப்புராணம், 12. திருத்துருத்திப்புராணம், 13. திருநாகைக்காரோணப்புராணம், 14. திருப்பெருந்துறைப்புராணம். 15. திருமயிலைப்புராணம், 16. திருவரன்குளப்புராணம், 17. பட்டீச்சுரப்புராணம், 18. மண்ணிப்படிக்கரைப்புராணம், 19. மாயூரப்புராணம், 20. வாளொளிபுற்றூர்ப்புராணம், 21. விளத்தொட்டிப் புராணம், 22. வீரவனப்புராணம், 23. குமரகுருபரர் வரலாறு, 24. சிவஞான அடிகள் வரலாறு, 25. மயில்ராவணன் வரலாறு, 26. குருபூசை மான்மியம், 27. குசேலோபாக்கியானம்,

28. சூத சங்கிதை, 29. கச்சிவிநாயகர் பதிகம், 30. சுப்பிரமணியசாமி பதிகம், 31. திட்டகுடிப் பதிகம், 32. மருதவாணர் பதிகம், 33. தண்டபாணி பதிற்றுப்பத்தந்தாதி, 34. திருஞான சம்பந்தர் பதிற்றுப் பத்தந்தாதி, 35. திருவூறைப் பதிற்றுப் பத்தந்தாதி, 36. பழசைப் பதிற்றுப் பத்தந்தாதி, 37. பாலைவனப் பதிற்றுப் பத்தந்தாதி, 38. பூவாளூர் பதிற்றுப் பத்தந்தாதி, 39. குடந்தைத் திரிபந்தாதி, 40. திருப்பைஞ்ஞீலித் திரிபந்தாதி, 41. திருவானைக்கா திரிபந்தாதி, 42. திருவிடைமருதூர்த் திரிபந்தாதி, 43. திருச்சிராமலை யமகவந்தாதி, 44. திருவாவடுதுறை யமகவந்தாதி, 45. தில்லையமகவந்தாதி, 46. எறும்பீச்சரம் வெண்பாவந்தாதி, 47, 48. அகிலாண்டநாயகி மாலை, 49. திருக்கற்குடிமாலை, 50. சிதம்பரேசர் மாலை, 51. சுப்பிரமணிய தேசிகர் மாலை, 52. சச்சிதாநந்த தேசிகர் மாலை, 53. சவரராயலு நாயகர் மாலை, 54. சித்திரச் சத்திரப் புகழ்ச்சி மாலை, 55. அகிலாண்டநாயகி பிள்ளைத் தமிழ், 56. காந்திமதியம்மை பிள்ளைத்தமிழ், 57. சேக்கிழார் பிள்ளைத் தமிழ், 58. திருவிடைக்கழி முருகர் பிள்ளைத் தமிழ், 59. திருவெண்ணீற்றுமை பிள்ளைத்தமிழ், 60. பாகம் பிரியாள் பிள்ளைத்தமிழ், 61. பிரம வித்தியாநாயகி பிள்ளைத்தமிழ், 62. பெருந்திருப் பிராட்டியார் பிள்ளைத் தமிழ், 63. மங்களாம்பிகை பிள்ளைத்தமிழ், 64. வாட்போக்கிக் கலம்பகம், 65. அம்பலவாணதேசிகர் கலம்பகம், 66. சீகாழிக் கோவை, 67. குளத்தூர்க் கோவை, 68. வியாசைக் கோவை, 69. திருவிடை மருதூர் உலா, 70. சுப்பிரமணிய தேசிகர் நெஞ்சுவிடுதூது, 71. தானப்பாசாரியர் தசவிடுதூது, 72. திருவிடைக்கழிக்குறவஞ்சி, 73. திருவாவடுதுறைச்சிலேடை வெண்பா, 74. கப்பற்பாட்டு, 75. குருபரம்பரை அகவல், 76. திருஞானசம்பந்தமூர்த்தி

ஆநந்தக்களிப்பு, 77, பொன்னூசல், 78, மங்களம், 79. லாலி, 80. வாழ்த்து என்பன.

இந் நூல்களில் சில முடிவு பெறுதன. பல மறைந்தன. பல வெளிவந்து உலவுகின்றன. பிள்ளையவர்களின் பெருமையை இன்று அவருடைய நூல்களும் வரலாறும் விளங்கச் செய்கின்றன.

## கக. ஆறுமுக நாவலர்

ஆறுமுக நாவலர் இற்றைக்கு நூற்றியிருபது யாண்டு கட்கு முன்னர் யாழ்ப்பாணத்திலேயுள்ள நல்லூரில் தோன்றினர். நாவலரின் தந்தையார் பெயர் **கந்தப்ப பிள்ளை.** தாயார் **சிவகாமி அம்மையார்.** நாவலர் தம் இளமைக் காலத்தில் தானே கல்வி கற்பிப்பதில் சிறந்த முயற்சி யுடையராகவிருந்தார். நிகண்டு, அந்தாதி முதலிய பல நூல்களையும் தம்முடைய பன்னிரண்டாவது அகவைக் குள்ளேயே அனைவரும் வியக்கும் வண்ணம் கற்றறிந்தார்.

நாவலருடைய தந்தையார் ஒரு நாடகநூலை இயற்றிக் கொண்டிருந்தபோது, கையில் எழுத்தாணியும் ஓலையும் பிடித்தபடியே திடீரென்று விண்ணுலக வாழ்வை யெய்தி னர். அந்நாடகத்தின் பிற்பகுதியை அக்காலத்திலேயே நாவலர் தொடர்ந்து இயற்றி முடித்தார். அப்போது நாவல ருக்கு அகவை ஒன்பது. அவ்வியத்தகு செயல் நாவலரின் தமையனார்களாகிய உடன்பிறந்தார்களுக்கு மிகுந்த மகிழ்ச் சியை உண்டாக்கியது. அவர்கள் நாவலர் மேன்மேலும் கல்விப் பயிற்சியை நன்கு பெறுதற்கான உதவியை உள்ள முவந்து புரிந்தார்கள். தமிழ்மொழியையே அன்றி ஆங்கில மொழியையும் நன்கு கற்றுத் தமிழில் உள்ளதை ஆங்கிலத் திலும் ஆங்கிலத்திலுள்ளதைத் தமிழிலும் மொழிமாற்றும் ஆற்றலையும் அடைந்தார்.

அக்காலத்தில் பார்சிவல் பாதிரி என்னும் கிறித்தவர் தமிழ்மொழியுங் கற்று யாழ்ப்பாணத்திலே தமது கிறித்தவ சமயத்தைப் பரப்புந் தொழிலிலே ஈடுபட்டிருந்தார். அவர் ஆறுமுக நாவலரின் இருமொழியாற்றலையும் நன்குணர்ந்து, தமிழ் மொழியில் தமக்கு வேண்டிய உதவிபுரிவதற்காகத் தம்முடைய தமிழ்ப் பண்டிதராக ஏற்படுத்திக் கொண்டார். பாதிரியாரிடம் அலுவல் பார்ப்பதற்கு ஒப்புக்கொள்ளுமுன்னரே, தாம் எப்போதும் சிவகண்மணி திருநீறு முதலிய சமயக்குறிகளுடன்தான் வரமுடியுமென்றும், அக் குறிகளைப்பற்றி அவர் யாதுந் தடை செய்யக்கூடாது என்றும், அவர் சைவசமய நிந்தனை புரிவதுபோல் தாம் சிறித்தவ சமய நிந்தனை புரியவேண்டியதாக வரும்போது, அவ்வாறு செய்வதுபற்றி வருத்தப்படக்கூடாது என்றும் திட்டஞ் செய்துகொண்டார். நாவலரை விட்டால் நல்ல தமிழறிவாளர் கிடைப்பதருமையென்பதை யுணர்ந்த பாதிரியாரும், நாவலருடைய விருப்பப்படி செய்யலாம் என்று ஒப்புக்கொண்டார்.

பார்சிவல் பாதிரியார் நாவலரைக் கொண்டு தஞ்சமய நூலாகிய பைபிலைத் தமிழில் மொழிபெயர்க்கச் செய்தார். நாவலரும் அரிய செந்தமிழ் நடையில் மொழிபெயர்த்தார். மொழி பெயர்க்குங்கால் தாம் செய்யும் அவ்வேலையால் தமது சைவ சமய வளர்ச்சியானது குன்றுவதற்கு இடமாவதையும், பொய்யாகிய புறச்சமய வளர்ச்சியானது மிகுதிப்படுவதற்குத் துணையாவதையும் நன்குணர்ந்தார். சைவமுந் தமிழுந் தழைத்தினிதோங்கத் தம்முடல் உள்ள வரையிலும் உழைக்கவேண்டுமென்று உறுதி செய்து கொண்டார். ஒழிவு நேரங்களில் சைவசமய நூல்கள் பலவற்றையுங் கற்றறிந்ததுடன் வடமொழி நூல்களையுங்

கற்றற்பொருட்டு அம்மொழியையும் மிகு விரைவாகவும் எளிதாகவும் கற்றுக்கொண்டார்.

நாவலர் பைபிளை மொழிபெயர்த்துக் கொண்டிருக்கும் போது, சென்னையிலுள்ள கிறித்தவ சங்கத்தார்கள், தாங்களும் ஒரு மொழிபெயர்ப்பை எழுதிக்கொண்டிருந்தார்கள். பார்சிவல் பாதிரியார் தாம் மொழி பெயர்க்கச் செய்த பைபிளையெடுத்துக்கொண்டு ஆறுமுக நாவலரையும் உடனழைத்துக்கொண்டு சென்னைக்கு வந்தார். தமது மொழி பெயர்ப்பைச் சென்னைச் சங்கத்தாருக்குக் காட்டினார். சென்னைச் சங்கத்தார் யாழ்ப்பாண மொழிபெயர்ப்பு மிக நன்றாக இருப்பதைப் பார்த்துப் பெரிதும் அழுக்காறு கொண்டார்கள். தங்கள் மொழிபெயர்ப்பு வீணாகிவிடுமே என்னும் ஏக்கம் அவர்களை வாட்டியது. ஆகவே, அவர்கள் யாழ்ப்பாணத்து மொழிபெயர்ப்பின்மீது பல குறைகளைக் கூறி, 'அது பதிப்பித்தற்கு ஏற்றதன்று,' என்றனர். அப்பொழுது சென்னையிற் பெரும் புலவராக விளங்கியிருந்த மகாலிங்கையர் என்பவரிடம் இருமொழிபெயர்ப்புகளுங் காட்டப்பெற்றன. நாவலர் மொழிபெயர்ப்பைக் கண்ட ஐயர் மிக வியப்படைந்தார். "யாழ்ப்பாணத்தில் இத்தகைய செந்தமிழும் உண்டோ?" என்று போற்றினார். ஆகவே, நாவலர் மொழிபெயர்த்த பைபிலே பதிப்பூர்தியேறிப் பெருமை பெற்றது.

நாளடைவில் நாவலருக்குத் தமது சமய வளர்ச்சியிலேயே கருத்து மிகுதியாகச் சென்றது. இலக்கண இலக்கியங்களையும் சமய நூல்களையும் காலையிலும் மாலையிலும் மற்றும் ஓய்வு கிடைத்தபோதுகளிலும் மாணவர் பலருக்கும் கற்பிக்கலானார். நாவலரிடம் தமிழ் வளர்ச்சி நோக்கமும், சமயவளர்ச்சி நோக்கமுமே பெரிதும் இடம் பெற்

றிருந்தபடியால் மாணவர்களிடம் ஊதியம் யாதையும் நாவலர் நாடினுர் அல்லர்.

நாவலரிடம் கல்விப்பொருளைப் பெற்றவர்கள் சதாசிவப் பிள்ளை, சாமிநாதய்யர், செந்திஞதையர், நடராசையர், விசுவநாதையர், ஆறுமுகப் பிள்ளை, ஆறுமுகச் செட்டியார், கந்தசாமிப் பிள்ளை, பொன்னம்பலப் பிள்ளை முதலிய பலராவர். இவர்களிற் பலர், நாவலருடைய நற்காரியங்களுக்கு உறுதுணையாய் உடன்நின்று உழைத்துத் தாங்களும் தங்கள் ஆசிரியரைப்போலப் பிறர்க்குப் பேருதவி புரிந்திருக்கின்ருர்கள்.

நாவலர் பெரிய புராணத்திடத்தும் நாயன்மார்களிடத்தும் அளவிலாப் பற்றுக்கொண்டவர். நாவலரின் பெரிய புராண அன்பின் மிகுதியைக்கண்ட நாவலரின் உடன்பிறந்தார் ஒருவர் நாவலரின் பெரியபுராண அன்பின் எல்லையை அறிய விரும்பினுர். நாவலரிடஞ் சென்று நவிலக்கூடிய ஒருவரிடத்தில், "தொண்டர் புராணக் கதைகளெல்லாம் அண்டப்புளுகு, கற்பாருக்கு இறையன்பு நிறையக் கூறிய கற்பனை; அவைகள் உண்மையென்று எண்ண வேண்டா," என்று கூறினுர். அச்செய்தி அவ்வன்பரின் மூலமாக நாவலர் செவியை நண்ணியது. நாவலருக்குத் தமையனுர்மீது நவிலற்கரிய சினம் உண்டாகியது. அத்தமையனுரை வெட்டிக் கொலைபுரிவதுதான் அவர் கூறிய பழியுரைக்குக் கழுவாய் என்று துணிந்தார். கையிற் பெரிய கத்தியொன்றை யெடுத்துக்கொண்டு தமையனுர் வீட்டை நோக்கிச்சென்ருர். இளவல் சினத்துடன் வருதலைக்கண்ட தமையனுர் நகைத்துக்கொண்டே இல்லத்தினுட் சென்றுவிட்டார். அங்கே யிருந்தவர்கள் நாவலரைப் பிடித்துத் தடுத்துநிறுத்திச் சினத்தைத் தணித்துத் திருப்பியனுப்பினுர்கள்.

தம்மிடங்கற்கும் மாணவர்கட்குப் பொருள்களை விளக்கும் ஆற்றல் நாவலரிடம் வியக்கத்தக்க முறையில் அமைந்திருந்தது. அது நாளடைவில் மிகவிரிந்து பெருஞ் சொற்பொழிவுகளாக மாறியது. சைவசமய வளர்ச்சியின் பொருட்டுக் கோயில்களிலும், பொது இடங்களிலும், நல்ல நாட்களிலும், திருவிழாக் காலங்களினும் சமயச்சொற் பொழிவுகள் பல செய்தார். தம்முடைய மாணவர்களையும் நண்பர்களையுங்கொண்டு பல சொற்பொழிவுகள் செய்வித்தார். நாவலருக்கு முன்னர்ச் சொற்பொழி வாற்றும் பழக்கம் நமது தமிழ்நாட்டில் மிகுதியாகவில்லை. நாவலர் காலத்தில்தான் சொற்பொழிவு வளர்ச்சிபெறத் தொடங்கியது. நாவலருடைய சொற்பொழிவைக் கேட்டவர்கள் கேட்ட அளவோடு தங்கள் கடமை தீர்ந்துவிட்டது என்று அத்துடன் நின்றுவிடாமல், நடைமுறையிலும் கடைப்பிடிக்கத் தொடங்கினர்கள். புலாலுண்ட பலர் அதனை நிறுத்தித் தூயரானர்கள். சிவபூசனை புரியாத பலர் புரியத்தொடங்கினர்கள். நாவலரின் சொற்பொழிவு நல்ல பயனை நல்கியது. நாளடைவில் இந்தியாவிற்கும் வந்து பலவிடங்களிலே சைவசமய வளர்ச்சிக்கான சொற்பொழிவுகள் பல செய்தார். ஒருமுறை சென்னைப்பட்டினஞ் சென்று திரும்பினர். நாவலருடைய சொற்பொழிவுத் திறனையும், அறிவாற்றலையும் பலர் மூலமாகக் கேள்விப்பட்டிருந்த திருவாவடுதுறை யாதீனத்துப் பண்டாரச் சந்நிதிகள், நாவலரைத் தங்கள் ஆதீனத்திற்கு அழைத்துச் சிறப்புக்கள் பல செய்து போற்றினர்கள். பல நூல்களினும் உள்ள சிறப்பைக் கேட்டு வியந்தார்கள்.

ஒருநாள் சைவச் சொற்பொழிவு ஒன்று ஆற்றுமாறு கூறினர்கள். அப்போது ஓர் அரிய பெரிய சைவசமயச் சொற்பொழிவை மிகச்சிறந்த முறையில் செய்தார். அஃது

எல்லோருடைய உள்ளத்தையும் கொள்ளைகொண்டது. சுருங்கச் சொல்லல் விளங்கவைத்தல் முதலிய பண்புக ளெல்லாம் அச் சொற்பொழிவிலே நிறைந்திருந்தன. அச் சொற்பொழிவைக் கேட்ட பண்டாரச் சந்நிதிகளும் கூடி யிருந்த புலவர்களும், 'நாவலர்' என்னும் சிறப்புப்பெயரை யளிப்பதென்று ஒரே மனதாகத் தீர்மானித்தார்கள். அத் தீர்மானப்படியே ஆறுமுகனுர்க்கு 'நாவலர்' என்னுஞ் சிறப்புப்பெயர் நல்கப்பட்டது. அதுமுதல்தான் எல்லோ ராலும் 'நாவல'ரென்று கூறப்பெற்றதுடன், 'ஆறுமுக நாவலர்' என்று கையெழுத்தும் இடலானுர்.

சொற்பொழிவுகள் செய்யத் தொடங்கினல் எவ்வளவு நேரமாயினும் சலியாமல் நின்று செய்வார். சில சமயங் களில் பத்துநாழிகைவரை நின்றபடியே சொற்பொழிவுகள் செய்வார். இவருடைய சொற்பொழிவுகள் கேட்டார்ப் பிணிக்குந்தகையவாய் இருந்தமையின், அவையினரும் சொற்பொழிவு முடியும்வரை அகலாதிருந்து கேட்பார் கள். பலவிடங்களிலும் சொற்பொழிவின் பொருட்டுப் பெற்ற புகழும், பரிசும் பல.

நாளடைவில் நாவலரின் சமயப்பற்றும் மொழிப் பற்றும் அதிகரித்தன. முதலில் யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையிலே **சைவப்பிரகாச வித்தியாசாலை** என்னும் பெயருடன் ஒரு வித்தியாசாலையை ஏற்படுத்தினுர். திருத் தில்லை என்னும் சிதம்பரத்தில் ஒரு சைவப்பிரகாச வித்தியாசாலையும், மடமும் ஏற்படுத்த முயற்சிசெய்தார். அம் முயற்சி நன்கு கைகூடிவராமையின் சிதம்பரத்தில் சைவப்பிரகாச வித்தியாசாலை மாத்திரம் ஏற்படுத்தப் பெற்றது. நாவலர் அவர்கள் வித்தியாசாலைகள் ஏற்படுத்து வதற்காகச் செய்த முயற்சிகள் பல. அவைகளெல்லாம் தமிழ்நாட்டாரின் தீவினையால் நன்கு நிறைவேறவில்லை.

நாளடைவில் கிறித்துவசமய வளர்ச்சி நாடெங்கும் பெருகிவருதலைக் கண்ட நாவலர், கிறித்துவ மதத்தில் உள்ள குற்றங்களை யெல்லாம் எடுத்து விளக்கிச் சொற்பொழிவுகள் செய்யலானார். பிறரைக்கொண்டு, ஞானக் கும்மி, ஏசுமதநிராகரணம் முதலிய நூல்களையும் எழுதி வெளிப்படுத்தச் செய்தார். **சைவதூடண பரிகாரம், சுப்பிர போதம்** என்னும் நூல்களையும் தாமே எழுதி வெளிப் படுத்தினார். **'வச்சிரதண்டம்'** என்றொரு பத்திரிகையும் வெளிவந்தது. மற்றும் பலரைக்கொண்டு, **'கிறித்துவமத கண்டனம்,' 'மிலேச்சமத விகற்பம்,' 'விவிலிய குற்சிதம்'** முதலிய கண்டன நூல்களையும் எழுதி வெளியிடச் செய்தார்.

"பாட்டுப்பாடுதலை நாவலர் நன்குணரார். அதனால் தான் அவர் பாடியனவாகப் பாடல்கள் காணப்பெற வில்லை," யென்று சிலர் எண்ணியிருக்கிறார்கள். அவ்வெண்ணம் தவறு. பாடல்களை இயற்றத் தொடங்கின் மனப் பாடஞ் செய்த பாடலைத் திரும்பச் சொல்லுதலைப்போல எளிதாகவும், விரைவாகவும் பாடும் ஆற்றல் அமைந்தவர் நாவலர். சமயகுரவர்களுடைய அரிய திருவருட்பாக்கள் இறைவனைத் தொழுது போற்றுதற்கிருக்கும்போது, நாம் வேறு ஏன் செய்யவேண்டும் என்னும் எண்ணத்துட னேயே நாவலர் புதுப்பாடல் இயற்றும் முயற்சியில் இறங்க வில்லை. ஓரவையில் ஒரு சமயம் சொற்பொழிவு செய்யத் தொடங்கினார் நாவலர். அப்பொழுது அங்கு நின்ற தம் முடைய மாணவர் ஒருவரைப் பார்த்து, "ஆனைமுகக் கடவுளைப்போற்றி ஒரு வணக்கங் கூறுக," என்றார். அம் மாணவரோ, "தாங்களே முதலிற்சொல்லுங்கள் அதுதான் நல்லது," என்றார். உடனே நாவலர்,

"சீர்பூத்த கருவி நூல் உணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய இருள்கள் நீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமௌலிப் பிரானுர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றேதும்
மதம்பூத்த விநாயகன்தாள் வணங்கி வாழ்வாம்."

என்னுஞ் செய்யுளைப் புதிதாக மிகுவிரைவில் பாடி வணங்கினர். இப் பாடல் புதிதாக அப்பொழுது தான் பாடப் பெற்ற புதுப்பாடல் என்பதை யறிந்த பலர், மிகுந்த வியப்பை யடைந்தார்கள். இவ்வாறு நாவலர் பாடிய பாடல்கள் இன்னும் பல வுள்ளன. செய்யுள் இயற்றுவதிலும் உரைநடை நூல்கள் எழுதுவதிலும், உரைகள் எழுதுவதிலும், சொற்பொழிவுகள், செய்வதிலும், மாணவர்க்குப் பொருளை விளக்குவதிலும் நற்றிறம் படைத்தார், நாவலரைப்போல் அக்காலத்தினும் இல்லை; இக்காலத்தினும் இல்லை. பொருளின் பொருட்டு நாவலர் யாரையும் புகழ்ந்து பாடியதில்லை. பொருளின் பொருட்டு ஒருவரை ஒரு பொருட்படுத்தி நயந்து நாடியதுமில்லை. தம் அருமை பெருமையை அறிந்து போற்றினரிடத்துமட்டுமே சிறிது பற்றுக்கொண்டிருந்தார். இறுதிக்காலம் வரை இல்லறவாழ்க்கையில் புகாத இவர், தமது ஒழுக்கத்தைப் பாதுகாத்துக்கொண்டு சமய வளர்ச்சியிலும் தமிழ் வளர்ச்சியிலுமே தமது வாணுளைச் செலவிட்டிருக்கிறுர்.

ஒருமுறை சிலர் நாவலரிடத்திற் பேசிக்கொண்டிருக்கும் போது நாவலரைப் பார்த்து, "தாங்கள் நூல்களில் எழுதுவதைப் போன்றும், சொற்பொழிவுகளில் சொல்வதைப் போன்றும் நடைமுறையில் நடந்து காட்டியும் வரு

கின்றீர்களா?" என்று கேட்டனர். அடக்கத்திற்கே இடம்போல் அமைந்த ஆறுமுகனார் உடனே, "ஆம்," என்று பதில் கூறிவிடவில்லை. "கைகாட்டி மரம் இன்ன இன்ன ஊருக்குச் செல்லும் வழி இஃது இஃது என்று கையால் காட்டிக்கொண்டு நிற்கின்றதே தவிரத் தான் அவ்வழியில் என்றேனும் செல்கின்றதா? இல்லை யன்றோ? நானும் அக் கைகாட்டி மரத்தைப் போன்றவன்தான்," என்று விடையிறுத்தார். இப் பதிலைக் கேட்ட அவர்கள் மிகுந்த வியப்படைந்து, "எல்லா அறங்களையும் நடை முறையில் உலகினர்க் குணர்த்தும் இப் பெரியாரே இவ் வாறு கூறுகின்றாரே," என்று பெரிதும் வியந்துகொண்டு சென்றனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்த கிறித்துவர்கள் தங்கள் பிதற்றுரைகளையும், நூல்களையும், பத்திரிகைகளையும் மானிப்பாயில் ஒரு பதிப்பகம் ஏற்படுத்தி அதிற் பதிப் பித்து வெளியிட்டார்கள். அப் பத்திரிகைகள் புத் தகங்கட்கு மறுப்பெழுதி வெளியிடுவதற்கும், நூல்கள் அச்சிடுவதற்கும் ஒரு பதிப்பகம் இன்றியமையாததாக விருந்தது. அதன்பொருட்டு நாவலர் சென்னைபட்டி னத்தை யடைந்து ஒரு பதிப்புப்பொறியை விலைக்குவாங்கி அதற்கு 'வித்தியாநுபாலன யந்திரம்' என்று பெயர் இட்டு வண்ணார் பண்ணையிலே அமைத்தார். அப் பதிப்ப கத்தில் மாணர்களின் பொருட்டுப் பால பாடங்களை நல்ல முறையில் புதிதாக எழுதிப் பதிப்பித்தார். ஆத்தி சூடி, கொன்றைவேந்தன் முதலிய அறநூல்களுக்கு உரை யெழுதிப் பதிப்பித்தார். சிவாலயதரிசனவிதி, கொலை மறுத்தலுரை, முற்கூறிய கிறித்துவமத கண்டன நூல் முதலியவற்றையும் அப் பதிப்பகத்திலே பதிப்பித்தார்; திருச்செந்தில் நிரோட்டக யமக வந்தாதி யுரை, திரு

முருகாற்றுப்படையுரை, ஆகியவைகளையும் எழுதிப் பதிப்பித்தார். பெரியபுராணத்தை உரைநடையாக எழுதி வெளியிட்டதுடன் நன்னூல் விருத்தியுரையும் பதிப்பித்து வெளியிட்டார்.

நாளடைவில் முற்கூறிய அச்சுப்பொறி போதாமையால், அதனை விற்றுவிட்டுச் சென்னை பட்டினத்திற்குத் திரும்பவும் வந்து, ஒரு பதிப்பகத்தை முற்பெயரோடு அமைத்தார். அதில் திருக்குறள் பரிமேலழகர் உரை, திருக்கோவையார்உரை, தருக்கசங்கிரகவுரை, சேதுபுராணம், தொல்காப்பியச் சேனாவரையருரை முதலியன திருத்தமாகப் பதிப்பிக்கப்பெற்றன. இலக்கணக்கொத்து, தொல்காப்பியச் சூத்திரவிருத்தி ஆகியவைகள் திருவாவடுதுறைச் சுப்பிரமணிய தேசிகர் கட்டளைப்படி பதிப்பிக்கப் பட்டன.

நாவலர் செய்த வுரைகள் :—கோயிற் புராணவுரை, சைவசமய நெறியுரை. திருச்செந்தில் அந்தாதியுரை, திருமுருகாற்றுப்படையுரை, நன்னூற்காண்டிகையுரை, சிவதருமோத்தரவுரை, மருதூரந்தாதியுரை முதலியன. புதிதாகச் செய்த நூல்கள் :—பாலபாடங்கள், இலக்கண வினாவிடை, சைவவினா விடை, இலக்கணச் சுருக்கம், திருவிளையாடற் புராண வசனம், பெரிய புராண வசனம், பெரிய புராண சூசனம் முதலியன.

நாவலர் பல நூல்களைப் பிழையற ஆராய்ந்து பதிப்பித்திருக்கிறார். எழுத்துப்பிழைகளோ பொருட்பிழைகளோ தாம் பதிப்பிக்கும் நூல்களில் ஏற்படக்கூடாதென்பது நாவலருடைய பேரவா. அதன் பொருட்டு மிகமுயன்று நூல்களைப் பதிப்பித்திருக்கிறார். தக்க ஆதாரங்கண்டால் அன்றி எதனையும் தம் உள்ளம் போனவாறு திருத்திப்

பதிப்பிக்கும் வழக்கம் நாவலரிடம் இல்லை. நாவலர் பதிப்பித்த நூல்கள் ஓர் எழுத்துப் பிழைகூட இன்றி, மிகச் செம்மையாக வெளிவந்தன.

தமிழ் வளர்ச்சியின் பொருட்டும், சைவசமய வளர்ச்சியின் பொருட்டும் நாவலர் போட்ட திட்டங்கள் பல இன்னும் நிறைவேரு திருப்பினும், அவைகள் எதிர்காலத்திலேனும் நிறைவேறுதல் கூடும். வாணுள் வரை சமயத்திற்கும் மொழிக்குமே தம் உடல் பொருள் உயிர் ஆகியவைகளைப் பயன்படுத்திய நாவலர், இறுதிவரை தம் நோக்கத்திலேயே கண்ணுங் கருத்துமாயிருந்து, சாலிவாகன கஅ0உ-குச் சமமாகிய பிரமாதியாண்டு கார்த்திகைத் திங்கள் உக-ஆம் நாள் வெள்ளிக்கிழமை இரவு யாழ்ப்பாணம் வண்ணுர் பண்ணையில் தமது இல்லத்தில் பூதவுடலை நீத்துப் புகழுடலை யெய்தினர்.

# கஉ. பூண்டி அரங்கநாத முதலியார்

### தோற்றம்

திருவள்ளூர் என வழங்கும் திருவெவ்வளூர் "தொண்டை நன்னாடு சான்றோருடைத்து" எனச் சிறப்பிக்கப்படும் தொண்டைநாட்டின்கண்ணுள்ள ஓர் ஊராகும். திருவள்ளூரை யடுத்துப் பூண்டி என்னும் ஒரு சிற்றூர் உள்ளது. அப் பூண்டியின்கண், சுப்பராய முதலியார் என்பார் ஒருவர் ஏறக்குறைய நூறாண்டுகட்கு முன் வாழ்ந்திருந்தார். அவர் அரசியல் துறையில் ஓர் உயர்ந்த அலுவலில் அமர்ந்திருந்தார். ஆயிரத்து எண்ணூற்று நாற்பத்து நான்காம் ஆண்டிலே அரங்கநாதர் சுப்பராய முதலியாருக்கு அருமைத் திருமகனாகத் தோன்றினார். உரிய காலத்தில் பள்ளியில் அமர்த்தப் பெற்றார்.

### கல்விப்பயிற்சி

கூரிய அறிவுநலம் செறியப்பெற்ற அரங்கநாதர் கல்வித்துறையிலே வியத்தகு முறையில் விளங்கினார். உயர்நிலைக் கல்வியைப் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியிலும், சென்னை அரசினர் கல்லூரியிலும் கற்றார். பள்ளி இறுதித் தேர்வில் தம்முடைய பதினெட்டாம் அகவையில் முதல்வராகத் தேறினார். அரசினர் கல்லூரித் தேர்வுகளிலும் அரங்கநாதரே முதல்வராகத் தேறினார். அவர் பள்ளிகளில் பரிசாகப் பெறும் நூல்கள் வண்டிகளில் ஏற்றிக் கொண்டு செல்லும்படியான அளவுக்கு மிகுதியாக இருக்குமாம்.

### தேர்வாளர் தவறு

அரங்கநாதர் இராசதானிக் கல்லூரியில் பி. ஏ. வகுப்பிற் படித்தபோது ஆங்கிலத்திலும், கணக்கிலும் சிறந்து

திகழ்ந்தார். அக் காலத்தில் அக் கல்லூரிக்குத் தலைவராக விருந்த எட்மண்ட் தாம்சன் என்பவர் அரங்கநாதருடைய அறிவுத் திறமையிலே மிகவும் ஈடுபட்டு, அவரை மிகவும் மதித்துவந்தார். ஆண்டுத் தேர்வில் அரங்கநாதரே முதன் மையாகத் தேர்ச்சிபெற்று அதற்குரிய பரிசைப் பெற்றுத் தமது கல்லூரிக்குப் பெருமையை உண்டாக்குவாரென்று அத் துரை உறுதியாக எண்ணிக்கொண்டிருந்தார். தேர்வு நடந்தது; முடிவும் கல்லூரித் தலைவர் எட்மண்ட் தாம்ச னுக்குத் தெரிந்தது. அரங்கநாதர் ஆங்கிலத்தில் முதலிடம் பெறவில்லை. தாம்சன் துரை வருந்தினர். அரங்கநாதரை அழைத்தார். "ஏன் இவ்வாறு ஏமாற்றிவிட்டாய்?" என்று கேட்டார். அரங்கநாதர் தாம் நன்றாகத்தான் எழுதியதாகக் கூறினர். தாம்சன் துரை அரங்கநாதர் ஆங்கிலத்தில் முதலிடம் பெறுமையைக் கூறினர். அரங்க நாதர் தாம் ஆங்கிலத்திலும் நன்றாகத்தான் விடையை யெழுதியிருப்பதாகக் கூறி, எழுதிய விடைகளையும் விளக்க மாக எடுத்துக் கூறினர்.

தாம்சன் துரை தாழ்த்தல் செய்யாமல், அவ்வாண்டு தேர்வுத் தலைவராக இருந்தவரிடம் அரங்கநாதரை அழைத் துக்கொண்டு சென்றார். அரங்கநாதர் எப்பகுதியில் தக் காங்கு தேர்ச்சி பெறவில்லையோ, அப் பகுதியைத் திருத் தியவர் அத்தேர்வுத் தலைவராகவே யிருந்தார். தாம்சன் அவரைப் பார்த்து. "இம் மாணவர் ஆங்கிலத்திலும் கணக் கிலும் மிக வல்லவர். அவ்வாறாகவிருந்தும் மற்றைய மாண வர்களைப்போலப் பொதுவாகவே தேர்ச்சி பெற்றிருக் கிறார். அவ்வாறு தேர்ச்சி பெறுவதைவிட இவர் தேர்ச்சி பெறாமலே போவது நல்லது. இவர் எழுதியுள்ள விடைத் தாளை நான் பார்க்கவேண்டும்," என்றார்.

தேர்வுத் தலைவர், தாம் எல்லாத் தாள்களையும் நன்றாகப் பார்த்துத்தான் திருத்தியிருப்பதாகக் கூறிவிட்டு, அத்தாளை யெடுத்துவந்து காண்பித்தார். பல பக்கங்கள் மதிப்பெண் இடப்பெறாமல் நின்றன. அரங்கநாதர் அவைகளைத் தேர்வுத் தலைவருக்குக் காட்டினார். விடைத்தாளின் ஒரு பக்கத்தில் பெரும் பகுதியை எழுதி, ஒரு வினாவின் பதிலை முடித்துவிட்டு எஞ்சியதாளை எழுதாமல் விட்டு விட்டு மறுபக்கத்திலிருந்து எழுதத் தொடங்கியிருந்தார். அதனால், தேர்வுத்தலைவர் அதற்குமேலே எழுதப்பெறவில்லை என்னும் எண்ணத்துடன் பார்க்காமல் விட்டுவிட்டார். மதிப்பெண் இடப்பெறாத பகுதிகளைக் கண்ட தேர்வுத்தலைவர் மிகவும் வருந்தினார். "நேர்மையற்ற முறையில் ஒருவருடைய புகழைக் கெடுத்துவிடப் பார்த்தேனே," என்று கூறி மதிப்பெண் இடப்பெறாத பக்கங்களுக்கும் மதிப்பெண்ணை இட்டுக் கூட்டினார். அரங்கநாதரின் மதிப்பு உயர்ந்தது. அவரே முதல்வராகத் தேறிப் புகழ் பெற்றார். தேர்வு முடிவு செய்தித்தாள்களில் வெளியிடுவதற்கு முன்னரே விடைத்தாள்கள் ஆராயப்பெற்றுத் தவறு கண்டுபிடிக்கப்பட்டமையின், அச்செய்தி அப்படியே அடங்கிவிட்டது.

### இளமையில் நுண்ணறிவு

அரங்கநாதர் இளமை முதற்கொண்டே தமிழ்மொழியினிடத்தில் ஆர்வம் மிக்கவராய் அமைந்து நின்றார். தமிழறிஞர்கள் யாண்டுச் சொற்பொழிவு செய்யினும், அவ்விடங்கட்கெல்லாஞ் சென்று கேட்பதற்கு அரங்கநாதர் தவறமாட்டார். மாணவராகக் கல்வி கற்றுக்கொண்டிருந்த காலத்தில், அறிஞர்கள் சிலரிடத்தில் சிறிய தமிழ்நூல்கள் பலவற்றையும் பாடங்கேட்டுத் தமிழறிவையும் பெருக்கிக்

கொண்டேயிருந்தார். ஒருமுறை கேட்டவைகளை மறவாமல் நினைவில் வைத்திருக்கும் ஆற்றல் அரங்கநாதருக்கு இயற்கையாக அமைந்திருந்தது. காஞ்சிபுரம் சபாபதி முதலியார், அட்டாவதானம் சபாபதி முதலியார் முதலிய அறிஞர்களோடு பழகுதலையும் அரங்கநாதர் மேற்கொண்டிருந்தார்.

அரங்கநாதர் பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்தபோது, அட்டாவதானம் சபாபதி முதலியார் புரசவாக்கத்திலுள்ள கங்காதரேசுவரர் கோயிலில் வாரந்தோறுஞ் சைவநூற் சொற்பொழிவுகள் செய்துகொண்டிருந்தார். அக் காலத்தில் அவருடைய சொற்பொழிவைக் கேட்பதற்கு மக்கள் பெருங்கூட்டமாகச் சேருவர். அரங்கநாதரும் அச் சொற்பொழிவைச் சென்று கேட்பதற்குத் தவறமாட்டார்.

ஒருநாள் சொற்பொழிவு நடந்துகொண்டிருந்தது. சொற்பொழிவாளராகிய சபாபதி முதலியார் சிவனடியாருடைய பெருமையைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். சைவநூல்களிலே மட்டுமன்றி, வைணவநூல் முதலிய வேறு நூல்களிலேயிருப்பினும் சமயத்திற்குத் தக்க பாட்டாக இருப்பின் அதனை யெடுத்துக் கூறுவது சபாபதி முதலியாரின் வழக்கம். சிவனடியார் பெருமையைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது, பிள்ளைப் பெருமாளையங்கார் இயற்றிய திருவரங்கக் கலம்பகத்திலிருந்து,

“பாதியா யழுகியகால் கைய ரேனும்,
பழிதொழிலும் இழிகுலமும் படைத்தா ரேனும்,
ஆதியாய் அரவணையாய் என்பா ராயின்
அவரன்றோ யாம்வணங்கும் அடிகளாவார்

சாதியால் ஒழுக்கத்தால் மிக்கோ ரேனும்,
சதுர்மறையால் வேள்வியால் தக்கோ ரேனும்,
போதினுன் முகன்பணியப் பள்ளி கொள்வான்
பொன்னரங்கம் போற்ருதார் புலையர் தாமே.”

என்னுஞ் செய்யுளைக் கூறி, “இழிகுலம் முதலியவற்ருல் உண்டாகுந் தாழ்வு தாழ்வன்று; இறைவனிடத்திலுள்ள அன்பினல் உண்டாகும் உயர்வே எல்லாவற்றினும் உயர்ந்ததாகும்,” என்று கூறினர்.

அப்பொழுது கூட்டத்தில் இருந்து சொற்பொழிவைக் கேட்டுக்கொண்டிருந்த அரங்கநாதர் எழுந்தார். சொற்பொழிவாளரைப் பார்த்துச் “சைவநூற் சொற்பொழிவு செய்யுந் தாங்கள் வைணவநூற்செய்யுள்களை மேற்கோளெடுத்துக் காட்டுகிறீர்களே; நம்முடைய சைவசமய நூல்களிலே இத்தகைய பாடல்களா இல்லை?” என்று கேட்டார்.

இதற்கு முதலியார் என்ன பதில் சொல்லுவாரோ என்று கூட்டத்தினர் ஆவலுடன் சொற்பொழிவாளராகிய சபாபதி முதலியாரைப் பார்த்தனர். சபாபதி முதலியாரோ சிறிதும் எண்ணமிடாமல், “அதற்கென்ன? இதுவும் பொன்னரங்கத்தை (பொன்னம்பலத்தை)ப் பற்றிய பாடல்தானே,” என்று மிக எளிதாகப் பதிலளித்தார்.

அரங்கநாதர் அவ்வளவில் அமையாமல், “பொன்னரங்கம் பொன்னம்பலமாகலாம். ஆனல், அப் பாட்டில் ‘ஆதியாய் அரவணையாய்’ என்று, இருப்பவைகட்கு என்ன பதிற் கூறுவீர்கள்?” என்று கேட்டார்.

சபாபதி முதலியார் அரங்கநாதர் கேள்விக்கு வியக்கத் தக்கவிதமாக ஏதேனும் விடைகூறவேண்டுமென்று அதனைப்பற்றி எண்ணமிட்டுக்கொண்டிருந்தார்.

அதற்குள் அரங்கநாதர் தம்முடைய கேள்விக்குத் தாமே பதிலுங்கூறத் தொடங்கி, "ஆதியாய் - முதல்வனே, அர - அரனே, அணியாய் - என்பால் வந்து அருள் புரிவாயாக என்றும், பள்ளிகொள்வான் என்பதற்குக் கோயில் கொள்வான் என்றும் பொருள் கொள்ளலாமல்லவா?" என்று கேட்டார்.

சொற்பொழிவாளராகிய சபாபதி முதலியாருக்கு அளவு கடந்த மகிழ்ச்சியுண்டாகிவிட்டது. கேள்வியையும் எழுப்பி விடையுந் தாமே கூறிய அரங்கநாதர்பால் பெரு மதிப்புக்கொண்டார். "ஆ! ஆ!! நீ கூறிய பொருள் மிக அழகாக இருக்கிறது. மிக இளமைக் காலத்திலேயே அரிய அறிவுடைய உனக்கு இறைவனருளால் மேன் மேலும் அறிவு விளக்கமுண்டாகும்," என்று வாழ்த்துரை கூறிப் போற்றினர். அவையோர் அரங்கநாதரின் அறிவுத் திறத்தையும், அவ்வறிவுத் திறத்தைப் போற்றிய சொற்பொழிவாளரின் தன்மையையுங் கண்டு மகிழ்ந்தார்கள்.

### தேர்வு தெரிவதற்கு முன்பே வேலை

கல்லூரியின் இறுதித்தேர்வின் முடிவு தெரிவதற்கு முன்னரே, அரங்கநாதர் தாம் பயின்ற அரசினர் கல்லூரியில்தானே உதவிக் கணக்காசிரியராக அலுவல் அளிக்கப் பெற்றார்.

### பலவகையிலும் தேர்ச்சி

அரங்கநாதர் ஏதாவது ஒன்றில்தான் தேர்ச்சியுடையவர் என்று கூறும்படி யிருக்கவில்லை. கணக்கு, ஆங்கிலம், தத்துவநூல், தமிழ்மொழி, வரலாற்றுநூல், நிலநூல், அறிவுநூல் ஆகிய எல்லாவகைக் கலைகளிலும் தேர்ச்சி பெற்றவராகத் திகழ்ந்தார். கும்பகோணம் கல்லூரியில்

கணக்காசிரியராக அமர்ந்திருந்தபோது எம். ஏ. தேர்வுக்கும் படித்து எம். ஏ., பட்டமும் பெற்றார். இவர் பல வகைப் பயிற்சியும் பெற்றிருந்தாராயினும் இவருடைய உள்ளம் பெரும்பாலும் கணக்குநூற் றுறையில்தான் படிந்திருந்தது. கல்லூரிக்கு எவ்வாசிரியரேனும் வராது விடுமுறைபெற்று நின்றிருப்பின், அவர்கள் நடத்த வேண்டிய பாடங்களை அவ்வாசிரியர்களைவிடச் சீர்பெற நடத்துவதில் இவர் மிகத் திறம்பெற்று விளங்கினார். இத்தகைய ஆற்றலானது எல்லோருக்கும் அமைந்துவிடாது. இத்தகையோர், 'நடமாடும் பல்கலைக் களஞ்சியம்' என்று மிகவும் போற்றப் பெறுவர்.

ஆங்கிலேயர் பாராட்டு

சென்னை அரசினர் கல்லூரிக்குத் தத்துவ நூலாசிரியர் ஒருவரை ஏற்படுத்த வேண்டியதாக இருந்தது. அப்பொழுது முற்கூறிய தாம்சன் துரை இங்கிலாந்திலிருந்து டங்கன் துரை என்பவரை வரவழைத்தார். டங்கன் துரை உலகப் புகழ் பெற்ற டாக்டர் எர்பட் பென்சர் என்னும் தத்துவப் பேராசிரியரின் மாணவர். டங்கன் சென்னைக்கு வந்ததும் தாம்சன் அவரை ஒரு நாள் மாலை கடற்கரையில் அரங்கநாத முதலியாருக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். அவர்கள் மூவரும் ஓரிடத்தில் அமர்ந்து அளவளாவிக் கொண்டிருந்தனர். தாம்சன் ஏதோ ஓர் அலுவலை முன்னிட்டுச் சிறிதுபோது வேற்றிடஞ் சென்றுவிட்டுத் திரும்பினார். அச்சிறுபோது உரையாடலில்தானே அரங்கநாதரின் தத்துவநூல் அறிவை டங்கன் தெரிந்துகொண்டார். ஆகவே தாம்சன் திரும்பி வந்ததும் அவரைப் பார்த்து, "தத்துவநூல் கற்பிப்பதற்கு ஆயிரம் மைலுக்கு அப்பாலிருந்து என்னை ஏன் வரவழைத்தீர்கள்? என்னை

விட நன்முகத் தத்துவநூற் பயிற்சியுள்ள அரங்கநாதர் இச் சென்னையிலேயே இருக்கும்போது," என்று கேட்டார். இதனால் அரங்கநாதரின் தத்துவநூல் அறிவை நாம் ஒரு வாறு அளவிட்டுக் கொள்ளலாம்.

இரட்டுற மொழிதல்

முற்கூறிய டங்கன், பாடங்களை அவரவர்களுக்கு ஏற்றபடி பிரித்துக் கொடுக்கத் தொடங்கினர். ஒருசமயம் அப்போது அரங்கநாதரைப் பார்த்துத், "தாங்கள் என்ன பாடம் எடுத்துக் கொள்ளுகிறீர்கள்?" என்று கேட்டார். அதற்கு அரங்கநாதர், 'நீங்கள் விரும்பியவாறே' என்று விடையளித்தார். செகுபியர் என்பவர் இயற்றிய விரும் பியவாறே (As you like it) என்பது பாடங்களுள் ஒன்று. அரங்கநாதர் இரட்டுற மொழிந்ததன் சுவையை நன்கு நுகர்ந்த டங்கன்துரை, செகுபியர் இயற்றிய அந் நாடகப் பாடத்தையே அரங்கநாதருக்கு அளித்தார். ஆங்கிலேயர் கூடப் போதிப்பதற்குத் திணறும் அந் நாடகத்தை அரங்க நாதர் மிக எளிதாகப் போதித்துத் தம் ஆற்றலை நன்கு புலப் படுத்தினர்.

தமிழ்மொழியும் சிவனெறியும்

பல்கலைப் புலவராகத் திகழ்ந்த அரங்கநாதர், ஒரு முறை தமிழ்ப்புலவர்கள் பலரையும் தம் இல்லத்தில் ஒன்றுசேர்த்து அவர்கட்கு விருந்து நடத்திப் போற்றினர். அவர்கள் கூறிய பலவகைப் பொருளுரையுங் கேட்டு மகிழ்ந்தார். புலவர் கூட்டத்தின் இறுதிநாளன்று அரங்க நாதர் தம்முடைய ஆங்கிலப் போக்கைப் புலப்படுத்திப் பேசினர். "உலகத்தில் நிகழ்வன எல்லாம் இயற்கையே. இவ்வுலகை இயக்குதற்கு இறைவன் ஒருவன் வேண்டியதே

இல்லை,'' என்று ஆணவமுனைப்பு வெளிப்படப் பேசினர். அங்கு வந்திருந்த புலவர்பெருமக்களில் தொழுவூர் வேலாயுத முதலியாரும் இருந்தார். இராமலிங்க அடிகளின் மாணவராகிய தொழுவூர் வேலாயுத முதலியார், சமயநூற்பயிற்சியிலும் இறைவன்உண்மைஉணர்ச்சியிலும் பெரும் பயிற்சியுடையவர். அரங்கநாதர் கூற்று வேலாயுதருக்கு வியப்பை விளைத்தது. தம்முடைய சொல்லாற்றல் மிக்க உரைகளால், கடவுளின் உண்மைக் கொள்கையை அரங்கநாதர் உள்ளத்தில் பசுமரத்தாணிபோற் பதியுமாறு விளக்கிக் காட்டினர்.

வேலாயுதரின் விரிவுரையை மறுக்கும் ஆற்றல் அரங்கநாதருக்கு அமையாது போயிற்று. அவ்வளவில் அரங்கநாதர் நெற்றியில் நீறணிந்து, கைகூப்பி வேலாயுத முதலியாரை வணங்கி அவருடைய மாணவராயினர். வேலாயுத முதலியாரின் தமிழாற்றல் அரங்கநாதருக்கு வியப்பையளித்தது. அவரிடமே தமிழ்நூல்கள் பலவற்றையுங் கற்கத் தொடங்கினர். வேலாயுத முதலியாரைத் தம்முடைய கல்லூரியில் தமிழாசிரியராகவும் அமர்த்தினர். திருமணம் செல்வக்கேசவராய முதலியாரின் தந்தையாரான, திருமணம் சுப்பராய முதலியாரிடமும் சில நூல்களைக் கற்றார்.

நினைவாற்றல்

அரங்கநாதர் பலவகைக் கலைகளிலும் ஒருங்கே சிறப்புற்று விளங்குவதற்கு அவருடைய நினைவாற்றலே பெருந்துணையாக விருந்தது. உ. வே. சாமிநாதையர் தாம் பதிப்பித்து வெளியிட்ட பூவாளூர்ப் புராணப்புத்தகம் ஒன்றினை ஒருநாள் மாலையில் அரங்கநாதரிடம் கொடுத்துவிட்டுச் சென்றார். மறுநாள் அவர் தம்மைப் பார்த்தபோது

அரங்கநாதர், "நீங்கள் கொடுத்தபுராணம் மிகவும் நன்றாக இருக்கின்றது," என்று கூறியதுடன், அந் நூலிலிருந்து சுவைமிக்க சில பாடல்களையும் ஒப்புவித்தார். ஐயர் அரங்கநாதரைப் பார்த்துத், "தாங்கள் எப்போது அந் நூலைப் படித்தீர்கள்?" என்று கேட்டார். அதற்கு அரங்கநாதர், "இரவே படித்து முடித்துவிட்டேன்," என்றார். பல பாடல்களைப் பாராமல் ஒப்புவித்ததைக் கேட்ட ஐயர் பெரிய வியப்புந் திகைப்பும் அடைந்தார்.

விவேகாநந்தர் ஒரு புத்தகத்தை யெடுத்தால், வரி வரியாகப் படிக்காமல் பக்கம் பக்கமாகக் கீழும் மேலும் பார்த்துக்கொண்டே சென்று சிறிது போதுக்குள் புத்தகத்தை முடித்து வைத்துவிட்டு, அந் நூலில் உள்ள செய்திகளை யெல்லாம் விளக்கமாகக் கூறுவாராம். அத்தகைய ஆற்றல் அரங்கநாதருக்கும் அமைந்திருந்தது.

அந்நாளில் ஐரோப்பியருக்கும், இந்தியருக்கும் ஒற்றுமைச் சங்கம் ஒன்று இருந்தது. அதன் தொடக்க காலத்தில் திங்களுக்கொருமுறை கூட்டங் கூடுவது வழக்கம். கூட்டங்கள் உறுப்பினர்களுடைய இல்லங்களிலே நிகழும். விருந்து செய்தல், வாய்ப்பாட்டுக் கருவிகளோடுகூடிய இன்னிசை, 'ஒப்புவித்தல்,' (அஃதாவது சிறந்த அறிஞர்களுடைய நூல்களிலிருந்து சுவையான பகுதிகளைப் பாராமல் ஒப்புவித்தல்) முதலியன கூட்டங்களில் நிகழும். கூட்டம் எவருடைய இல்லத்தில் நடைபெறுகிறதோ அவரே பொழுதுபோக்கை நடத்தவேண்டியது என்பது திட்டம். ஒருமுறை இந்தக் கூட்டம் ஆங்கில மாது ஒருவரின் இல்லத்தில் நடைபெற வேண்டிய முறை வந்தது. அவ்வம்மையார் தக்க ஏற்பாடுகள் செய்தார். ஓர் ஐரோப்பியப் பெரியாரை ஆங்கில மொழிபெயர்ப்பு இராமாயணத்திலிருந்து

இருநூறு பாட்டுக்கள் ஒப்புவிப்பதற்கு ஏற்பாடு செய்திருந் தார். அவ்வாங்கிலேயப் பெரியார் பாட்டை மனப்பாடஞ் செய்யாதபடியாலோ, மற்றெக்காரணத்தாலோ தம்மால் முடியாதென்று, கூட்டம் நடைபெறவேண்டிய தினத் திற்கு முன் தினம் கையை விரித்துவிட்டார்.

ஆங்கிலமாது யாது செய்வதென்று தெரியாமல் திகைத்து அரங்கநாதரிடஞ் சென்று, "இப்பொழுது என் நிலை எதிர்பாராதவாறு திகைப்பில் வந்துவிட்டது. நீங்கள் தாம் இப்பொழுது உதவி செய்யவேண்டும். புத்தகத்தைப் பார்த்து இருநூறு பாடல்களையும் படித்தால் போதும்," என்று கூறினர். அரங்கநாதர், "ஏதோ பார்ப்போம்," என்று கூறி அம்மையாரை அனுப்பினர். மறுநாள் மாலை கூட்டம் நடந்தது. அரங்கநாதர் இருநூறு பாடல்களையும் மனப்பாடமாக ஒப்புவித்தார். கேட்டவர்கள் வியப்புந் திகைப்பும் அடைந்தனர். நானூறு வரிகளடங்கிய இரு நூறு பாடல்களை ஓர் இரவில் மனப்பாடஞ் செய்த அரங்க நாதரின் நினைவாற்றல் எத்தகையதென்பதைக் கூறவும் வேண்டுமோ ?

"அங்கே ஒரு சிங்கம் இருக்கிறது"

ஆக்சுபோர்டிலிருந்து ஆங்கிலேய ஆசிரியர்களைச் சென்னை அரசினர்கல்லூரிக்கு அனுப்பினால், "அங்கே சிங்கம் இருக்கிறது என்பதை நினைவில் வைத்துக் கொள் ளுங்கள்," என்று அரங்கநாதரைக் குறிப்பிட்டுச் சொல்லி யனுப்புவார்கள். இதனால் அரங்கநாதரிடம் மேனாட்டு ஆசிரியர்களும் எவ்வளவு அச்சமுடையவர்களாக இருந் தார்களென்பது ஒருவாறு புலனாகும்.

விளையாட்டுக்கள்

அரங்கநாதர் கல்வித்துறையில் முழுமனத்தையுஞ் செலுத்தியிருந்தும், விளையாட்டுத்துறைகளிலும் மிகவுந்

தேர்ச்சிபெற்றவராகவே விளங்கினர். ஐரோப்பியர்களுக்குரிய சதுரங்கம், பந்தடித்தல், சீட்டாடுதல் முதலிய விளையாட்டுக்களிலும் அவர்கள் வியக்குமாறு ஆடுவார். ஒரு முறை அரங்கநாதர் கண்களை மூடிக்கொண்டே சதுரங்க ஆட்டத்தை ஆடி வெற்றிபெற்ருர். சதுரங்கப்பலகை அரங்கநாதரின் பின் வைக்கப்பெற்றது. அரங்கநாதருடைய எதிராட்டக்காரர் காயை இன்ன கட்டத்திலிருந்து இன்ன கட்டத்திற்கு வைக்கின்றேன் என்று சொல்லிக்கொண்டேயிருந்தார். அரங்கநாதர் பலகையைப் பாராமலே எதிர் ஆட்டக்காரரின் ஒவ்வோராட்டத்திற்கும் தம் காய்களை எப்படி வைப்பது என்று சொல்லிக்கொண்டே வந்து ஆட்டத்தை வென்ருர். இத்தகைய விளையாட்டுக்கள் பலவற்றை எளிதாக விளையாடுவது அரங்கநாதருக்கு இயல்பு.

### தீர்ப்பு எழுதிய திறமை

அரங்கநாதர் வழக்கறியுந் துறைகளிலும் பழக்கம் மிகுந்தவராக இருந்தார். நீதித்தலைவராக விளங்கிப் பெரும்புகழ் பெற்ற திருவாரூர் முத்துசாமி ஐயரை அறியாதார் யார்? அந்த முத்துசாமி ஐயரும் சிக்கலான சில செய்திகளின் சிக்கை யறுப்பதற்குத் தக்கவர் மிக்க புகழுடன் விளங்கும் அரங்கநாதரே என்று துணிந்து அரங்கநாதரின் உதவியை நாடினர் எனின், வேறு கூறுவதற்கு யாதுளது?

முத்துசாமி ஐயர், உயர்நிலை நீதிமன்றத்தலைவராக விளங்கியபோது ஒரு வழக்கில் தீர்ப்பு எழுதத் தொடங்கினர். சில செய்திகள் வாதிக்கு நன்மையாகவுஞ் சில செய்திகள் பிரதிவாதிக்கு நன்மையாகவும் அமைந்திருந்தன. யாருடைய பக்கத்திற்கு வெற்றியை நிலைநாட்டுவ

தென்பது மிகவுஞ் சிக்கலாக விருந்தது. ஒரு பக்கமுந் துணிவதற்கு முத்துசாமி ஐயரால் முடியவில்லை. வழக்கின் வினுவிடைக் குறிப்புகளுடனும், அறநூல்களின் (சட்ட நூல்களின்) பகுதிக் குறிப்புகளுடனும் ஒருநாள் மாலை அரங்கநாதரின் இல்லத்திற்குச் சென்றூர். ஐயர் சென்ற பொழுது அரங்கநாதர் வீட்டில் இல்லை. சிறிதுபோது எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். காத்திருந்து பார்த்தும் அரங்கநாதரைக் காணமுடியவில்லை. தாம் கொண்டுவந்த வைகளை அரங்கநாதருடைய எழுதுபலகையின்மீது வைத்துவிட்டு, வந்த செய்தியின் காரணத்தை எழுதி வைத்துவிட்டுச் சென்றூர்.

வீடு திரும்பிய அரங்கநாதர் செய்தி யுணர்ந்தார். இரவு உணவை முடித்துக்கொண்டு உறங்கினூர். நள்ளிர வில் அரங்கநாதர் உறக்கம் அகன்றது; விழித்துக்கொண் டார். முத்துசாமி ஐயர் தம்முடைய எழுதுபலகையின் மேல் வைத்திருந்தவைகளை எடுத்துப் படித்தார். செய்தி களை யெல்லாம் விளக்கமாக உணர்ந்துகொண்டார். அதற் குத் தக்கவாறு தீர்ப்பையும் எழுதி முடித்தார். மீண்டும் படுத்துக் கண்ணுறங்கினூர். முத்துசாமி ஐயர் காலையில் வந்தார். உறங்கிக்கொண்டிருக்கும் அரங்கநாதரைப் பார்த் தார். வேலையாளைப் பார்த்து, "அரங்கநாதர் தாம் வைத்து விட்டுச் சென்றவைகளை எடுத்துப் பார்த்தாரா?" என்று கேட்டார். வேலையாள் எடுத்துப் பார்த்ததாகவும் நள்ளிரவில் ஏதோ எழுதிக்கொண்டிருந்ததாகவும் கூறி னூன். முத்துசாமி ஐயர் அரங்கநாதர் எழுதி வைத் திருந்த தீர்ப்பை யெடுத்துப் படித்துப் பார்த்தார். அவ ருக்கு மனநிறைவு ஏற்பட்டது. மகிழ்ச்சியுடன் எடுத்துக் கொண்டு சென்றூர்.

**மதிப்புத் தேடிய ஆசிரியர்கள்**

அரங்கநாதர் கும்பகோணம் கல்லூரியில் வேலை பார்த்துக்கொண் டிருந்தபோது, தமிழ்ப் புலவர் தியாக ராசச் செட்டியார் அக்கலாசாலையில் தமிழாசிரியராக வேலை பார்த்துக் கொண்டிருந்தார். செட்டியாரின் அறிவுப் பெருக்கை நன்குணர்ந்த அரங்கநாதர் அடிக்கடி தியாக ராசச் செட்டியார் வீட்டிற்குச் சென்று அவருடன் அளவளாவும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தார். தமிழ்ப் புலவரான செட்டியார் வீட்டிற்கு அடிக்கடி அரங்கநாதர் செல்வது சில ஆங்கில ஆசிரியர்களுக்குப் பிடிக்கவில்லை. அவ்வாசிரியர்கள் மிகவுங் குறுகிய உள்ளப்பான்மை யுடையவர்கள். சிறிது ஆங்கிலங் கற்ற தம்மை மிக வுயர்ந்த வர்களாகவும், தமிழ் படித்தவர்களை மிகவும் இழிந்தவர்க ளாகவும் எண்ணிக்கொண்டிருப்பவர்கள். அவர்களுள் ஒருவர் ஒருநாள் அரங்கநாதரைப் பார்த்துப், "பெரும் ஆங்கிலப் பேராசிரியராக விளங்கும் தாங்கள் வெறுந் தமிழ்ப் பண்டிதராக விருக்கும் தியாகராசச் செட்டியாருடைய வீட்டிற்கு அடிக்கடி செல்வது மதிப்பாகாது; தங்களுடைய பெருமைக்கு ஏற்றதன்று; நாங்களெல்லோருங்கூட அவரிடத்தில் அன்புடையவர்கள் தாம். ஆயினும், தங்களைப் போல் அடிக்கடியா சென்றுகொண்டிருக்கிறோம்?" என்று அரங்கநாதர் மனத்தைக் கலக்குமாறு பேசினார்கள்.

அவ் வாங்கில ஆசிரியர்களுடைய உள்ளக் கிடக்கை அரங்கநாதருக்கு நன்றாகத் தெரிந்து விட்டது. அவர் தமக்கு அறிவுரை கூறவந்த ஆங்கில ஆசிரியர் களைப் பார்த்து, "உங்களுக்குத் தமிழ்க்கல்வியறிவு ஒருசிறிதேனும் இருக்குமாயின் நீங்கள் இவ்வாறு இயம்புவதற்குத் துணிந்திருக்க மாட்டீர்கள். நீங்கள் சிறியவற்றிலிருந்து உங்களுக்குத் தமிழறிவு சிறிதும்

கிடையாது என்பது நன்றாகத் தெரிகிறது. செட்டியாருக்கு நம்மைப் பார்க்கினும் ஊதியம் குறைவு என்பதற்காக அவரை நம்மிலுந் தாழ்ந்தவர் என்று எண்ணிக் கொண் டிருக்கிறீர்களா? ஊதியத்திற்கும் கல்வியறிவுக்ுஞ் சிறிதுந் தொடர்பு இல்லையென்பது உங்களுக்குத் தெரியாதா? முன்னாளிலுங்கூடத் தமிழ்மொழி யறிஞர்களும் வடமொழி யறிஞர்களும் வறிஞர்களாகத்தான் இருந்தார்கள். அவர்களுடைய வறுமையே அவர்களுடைய உயர்வை உண்டாக்கியது. அரசர்கள் கூடத் தமிழறிஞர்களின் நட்பைப் பெரிதாக மதித்துப் பாராட்டி வந்தார்களென்பதை வரலாற்று நூல்களால் நன்குணரவில்லையா? நாம் அனைவரும் ஆங்கிலமொழியைச் சிறிது படித்துவிட்டுச் செருக்கித் திரிகிறோம். செட்டியாரோ இளமைமுதற்கொண்டே ஒழுங்காகத் தக்க ஆசிரியர்களிடம் தமிழைப் படித்திருக்கிறார். நம்மைப்போல் ஊதியத்தையும் வயிற்றுப்பாட்டையும் எண்ணித் தமிழைப் படித்தவரல்லர். நம்முடைய படிப்பு நம்மோடு முடிவடைந்துவிடும். செட்டியாருடைய பெருமையோ தமிழ்நாடு முழுவதும் எங்குச் சென்றாலும் சிறப்பை யடையும். செட்டியாருடைய கல்விப்பெருமையைக் கேள்வியுற்ற கோபாலராவ் அவரை நமது கல்லூரிக்கு விரும்பி யழைத்தார். அதனால்தான் செட்டியார் இங்கு வேலைக்கு வந்தாரே யல்லாமல் அவராக விரும்பி வரவில்லை. நீங்கள் தியாகராசச் செட்டியாருடைய பெருமையைச் சிறிதும் உணராமல் இருப்பதுபற்றி நான் மிகவும் வருந்துகிறேன்," என்றார். அரங்கநாதரின் அறிவுரையைக் கேட்ட ஆங்கில ஆசிரியர்கள், "அறியாத்தனமாக அரங்கநாதரிடம் வந்து அகப்பட்டுக்கொண்டோமே," என்று வருந்தினர்.

**விளங்காத பாட்டு**

அரங்கநாதர் தமிழறிவு மிக்கவராதலின் ஒருமுறை தமிழ்த் தேர்வுக் கேள்விகளைத் தாமே தேர்ந்தெடுத்தார். பாடப் புத்தகத்திலே ஒரு விளங்காத பாட்டும் இருந்தது. அஃது இராமாயணத்தைச் சேர்ந்த பகுதி. அதனைப் பாடம் நடத்திய தியாகராசச் செட்டியார் அப் பாட்டின் பொருள் தமக்கு விளங்கவில்லையென்றும், அப் பாட்டு யாருக்குமே விளங்காது என்றும், அதனால் அதில் கேள்வி வராது என்றும் மாணவர்கட்குச் சொல்லியிருந்தார். அரங்கநாதர் அந்த விளங்காத பாட்டிலும் ஒரு கேள்வியைக் கேட்டிருந்தார். கேள்விக்கு எந்த மாணவரும் விடை யெழுதவில்லை. அவரவர்கள் தியாகராசச் செட்டியாரிடம் வந்து, "அந்தப் பாட்டில் கேள்வி வராதென்று கூறினீர்களே; உங்களுக்கு விளங்காத பாட்டு தேர்வாளருக்கு விளங்கியபடியினால்தானே கேள்வி கேட்டிருக்கிறார். நீங்கள் ஏன் அந்தப் பாட்டின் பொருளைத் தெரிந்து எங்களுக்குச் சொல்லாமலிருந்தீர்கள்," என்று தொல்லை செய்தார்கள்.

தியாகராசச் செட்டியார் அரங்கநாதரிடம் வந்து, "அந்தப் பாட்டிலிருந்து கேள்வி கேட்டிருக்கிறீர்களே; அந்தப் பாட்டுத் தங்களுக்கு விளங்குகிறதோ?" என்று கேட்டார். அரங்கநாதர், "அந்தப் பாட்டின் பொருள் எனக்கு விளங்கவில்லை. தாங்கள் என்ன பொருள் சொல்லியிருக்கிறீர்களென்பதைத் தெரிந்துகொள்ளலாமென்று தான் கேட்டேன். தாங்கள் என்னபொருள் கூறினீர்கள்?" என்று கேட்டார். செட்டியார் அரங்கநாதரைப் பார்த்து, "அந்தப் பாட்டின் பொருள் எனக்கும் விளங்கவில்லை; அதிலிருந்து கேள்வி வராது என்று கூறிவிட்டேன். இப்பொழுது மாணவர்கள் என்னிடம் வந்து என் உயிரை

வாங்குகிறீர்கள். நீங்கள் இவ்வாறு விளங்காத பாட்டிலிருந்து கேள்வி கேட்டு என்னைத் தொல்லையில் சிக்கவைக்கலாமா?" என்று கேட்டார். அதற்கு அரங்கநாதர் "நீங்கள் அதைப்பற்றிக் கவலைப்படவேண்டாம். நான் அந்தப் பாட்டைத் தேர்வுக் கணக்கிலிருந்து விலக்கி விடுகிறேன்," என்று தக்க பதில் கூறினார்.

**கச்சிக் கலம்பகம்**

அரங்கநாதர் சென்னையிலிருக்கும்போது தம்முடைய ஆசிரியராகிய தொழுவூர் வேலாயுதமுதலியாரோடு போட்டி போட்டுக்கொண்டு செய்யுட்கள் இயற்றப் பழகிவந்தார். செய்யுள்செய்யும் ஆற்றலும் அரங்கநாதருக்கு எளிதாகவே அமைந்தது. தாமும் ஏதாவதொரு செய்யுள்நூல் இயற்ற வேண்டுமென்று திட்டம் போட்டுக்கொண்டிருந்தார். வேலாயுத முதலியாரைப் பார்த்துத், "தாங்கள் ஒரு கலம்பகம் பாடவேண்டும்," என்று வேண்டிக்கொண்டார். அரங்கநாதர் வேண்டுகோட்படி வேலாயுத முதலியார், திருவொற்றியூர்ப் படம்பக்கநாதரையும் காஞ்சி ஏகாம்பரநாதரையும் பாட்டுடைத் தலைவர்களாக வைத்து, **மகிழ் மாக் கலம்பகம்** என்னும் நூலைப் பன்னாள் முயன்று பாடி முடித்தார். (மகிழ்-மகிழமரத் திறைவன். மா-மாமரத் திறைவன். திருவொற்றியூர்த் திருப்பதி மரம் மகிழ்; காஞ்சிபுரத் திருப்பதி மரம் மா.) மகிழ் மாக் கலம்பகம் அரங்கநாதருடைய வேண்டுகோளின்படி இயற்றப்பெற்ற தென்பது,

"பேசுமறைப் பொருளன்பர்க் கின்பூட்ட
மாமகிழ்க்கீழ்ப் பிரியா வாக்கம்
ஆசுகவி பொருந்தவருந் தமிழ்மாலை
யணிகென்ன வறிவாற் சான்ற

வீசுபுகழ்ப் பூண்டிமகி ழரங்கநா
　　தன்சொல்ல விளம்பி னுனல்
மாசிலருட் சூரவன்வழி யொழுகுவே
　　லாயுதனும் வாய்மை யோனே.''

என்னும் சிறப்புப்பாயிரப் பாட்டால் இனிது புலனும். தம்முடைய ஆசிரியரின் கலம்பகத்தைக் கண்டபிறகு, அரங்கநாதர் தாமும் விரைந்து கலம்பகம் பாடத்தொடங்கிக் கச்சிக் கலம்பகத்தை மிக எளிதாகவும், விரைவாகவும் பாடி முடித்தார்.

அக்கலம்பகம் சென்னையில் உள்ள தொண்டை மண்டலம் உயர்நிலைப் பள்ளியில் அரங்கேற்றஞ் செய்யப் பெற்றது கலம்பக அரங்கேற்ற காலத்தில் சென்னையிலிருந்த அறிஞர்களும் செல்வர்களும் ஒருங்கே குழுமிக் கலம்பக அரங்கேற்றத்தைக் கண்டுங் கேட்டும் மகிழ்ந்தார்கள்.

திருவாரூர்ச் சின்னசாமிப் பிள்ளை, தண்டலம் பாலசுந்தர முதலியார், மயிலாப்பூர் முருகேச முதலியார், உ. வே. சாமிநாதையர், திருமணம் சுப்பராய முதலியார், சிதம்பரம் ஈசானிய மடம் இராமலிங்க அடிகள் முதலிய அறிஞர்கள் கலம்பகச் சொற்பொழிவைச் செய்தார்கள். கலம்பக அரங்கேற்றம் இனிது முடிவுபெற்றது.

**பூண்டி ?, பண்டிட் ?**

கலம்பக அரங்கேற்றத்திற்குப் பின் பல அறிஞர்கள் ஒன்றுகூடி அரங்கநாதருக்குப் பண்டிதர் என்னும் பட்டத்தை யளிப்பதற்கு ஏற்பாடு செய்து ஒரு கூட்டத்தைக் கூட்டினார்கள். அக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய பூம்மல் விசயரங்க முதலியார் (ப. சம்பந்த முதலியாரின்

தந்தை) அரங்கநாதரின் பல பண்புகளையும் பாராட்டி விட்டு, "கச்சிக் கலம்பக நூலாசிரியராகிய அரங்கநாத ருக்கு நாம் பண்டிதர் என்கிற புகழ்ப்பெயரை இப் பொழுது புதிதாக வழங்கவில்லை. முன்னரே அரசாங்கத் தாரால் அளிக்கப்பட்டுவிட்டது. எப்பொழுதெனின், இராவ்பகதூர்ப் பட்டம் அரங்கநாதருக்கு அளிக்கும் பொழுது பட்டம் அரசப்பிரதிநிதியின் கையெழுத்திற் காகக் கல்கத்தாவுக்குச் சென்றது. அரங்கநாதருடைய பெயர் ஆங்கிலத்தில் பூண்டிரங்கநாத முதலியார் (Pundi Ranganatha Mudaliar) என்று எழுதப்பெற்றிருந்தது. கல்கத்தாவுக்கு இது போய்ச் சேர்ந்தவுடன் அங்கிருந்த அறிஞர்கள் பூண்டி என்னும் ஆங்கிலச் சொல்லின் இறுதி யில், 'T' என்னும் எழுத்தை எழுதிவிட்டார்கள். அவ் வறிஞர்கள் ஏன் அவ்வாறு எழுதினரெனின், 'பண்டிட்' என்னும் சொல்லில், 'டி' விட்டுப்போய்விட்டதாக அவர் கள் எண்ணிக்கொண்டார்கள். அரங்கநாதரின் பெயருக்கு முன் எழுதப்பெற்றுள்ள பூண்டி என்பது ஓர் ஊரினு டைய பெயரென்பது அவர்களுக்குத் தெரியாது. இவ் வாறு அரங்கநாதர் தற்செயலாகவே பண்டிதப்பட்டத்தை யடைந்தார்," என்று கூறினர்.

### தமிழார்வம்

ஒருமுறை அரங்கநாதர் பல அறிஞர்களோடமர்ந்து இன்னுரையாடிக் கொண்டிருந்தார். தமிழ்மொழியையும் பற்றிப் பேச்சு நிகழ்ந்தது. அப்பொழுது ஒருவர் ஆங்கில மொழியில் பல அரிய செய்திகள் இருக்கின்றனவென்றும், எத்தனையோ புலவர்கள் அம் மொழியை வளம்பெறச் செய்திருக்கிறார்கள் என்றும், தமிழில் ஒன்றுமில்லையென் றும், ஆங்கிலமொழிதான் மிகவுஞ் சிறந்ததென்றும்

சொன்னார். தமிழைப்பற்றிக் குறைவாகப் பேசியதைக் கேட்க, அரங்கநாதருக்குச் சினமுண்டாகியது. அவர் உடனே, "ஞாயிற்று மண்டலத்திற்குமேல் எவ்வளவோ தூரத்தில் ஆயிரக் கணக்கான உடுக்கள் (நட்சத்திரங்கள்) இருக்கின்றனவென்றும், அவற்றில் சில ஞாயிற்றைவிடப் பெரியனவென்றும் சொல்லுகிறார்கள் மேனாட்டு வான மண்டல ஆராய்ச்சிக்காரர்கள். ஞாயிற்றையே பார்த்து அனுபவிக்கத் தெரியாமல் உடுக்களைப்பற்றிப் பேசுவதிற் பயனில்லை. முதலில் தோன்றும் ஞாயிற்றை நன்கு ஆராய்ந்து அனுபவித்துவிட்டு அதன் பிறகு உடுக்களைப் பற்றி ஆராய்ச்சி செய்து மகிழலாம். அதைப்போன்றது தான் மொழியைப்பற்றிய செய்தியும். எவ்வளவோ சிறந்த செய்திகள் வேறு மொழிகளில் இருக்கலாம். தமிழ் மொழியிலுள்ள நல்ல செய்திகளையெல்லாம் நுகர்ந்து மகிழ்ந்தபின்பன்றோ அவைகளை நுகர்ந்து களிக்க முற்பட வேண்டும்?" என்று சிறந்த உவமையோடு விளக்கிப் பேசினார். அரங்கநாதரின் தாய்மொழி யார்வத்தைக் கண்ட ஆங்கிலமொழியார்வக்காரர் மடங்கி வாயடங்கினார்.

### உ. வே. சாமிநாத ஐயருக்கு உதவி

ஓலைச்சுவடிகளிலிருந்து பழந்தமிழ் நூல்கள் அழிந்து போகாமல், அவைகளைத் தாள்களில் பதிப்பித்து வெளியிட்டுப் பாதுகாத்த பெருமையின் பெரும்பகுதி பெரும் பேராசிரியர் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயருக்கு உரிமையாகும். சாமிநாதையர் பலவகையான அல்லல்களுக்கிடையே பலருடைய உதவியைப் பெற்று நூற்பதிப்பு வேலையை நடத்தினார். சிந்தாமணியைப் பதிப்பிக்குங்கால் அரங்கநாதரிடமுஞ் சென்று,

### கட்டளைக்கலித்துறை

"நந்தாத வான்பொருளைப்புல வோர்க்கு நயந்தளிக்கும்
சிந்தா மணியைப் பலரு மெளிதுறச் செய்திடுவாய்
மந்தாரத் தோட்டெழிற் சந்தானம் போலிரு வான்பொருளை
வந்தார்க் களித்தடு மால்ரங்க நாத மகிபதியே."

என்னுஞ் செய்யுளைக் கூறி உதவி வேண்டினர். உடனே அரங்கநாதர் ஐம்பது ரூபாக்கள் அளிப்பதாக வாக்களித்ததுடன், வேறு பலரிடமும் ஐயருடைய அரும்பணியை எடுத்துக் கூறி உதவியளிக்கும்படி செய்தார். அரங்கநாதர் சாமிநாத ஐயருக்கு எழுதிய கடிதப் பாடல்களிற் சில வருமாறு :

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

"பொறையினாற் பகையைத் தாக்கும்
பொருள்படச் சீடர்க் கோதும்
முறையினான் மடமை நீக்கும்
முத்தமிழ்க் கல்வித் தேர்ச்சி
நிறையினால் ஐயம்போக்கும்
நெடும்புகழ் தன்பேர்க் கொத்த
துறையினா லெளிதி னாக்கும்
தாயனிஃ துவந்து காண்க." (க)

### கலிநிலைத்துறை

"பாடுந் திறனில னாயினு மறுமொழி பாவலநீ
நாடுந் திறனிவை நவிலற் கொருவகை துணிவுற்றேன்
கூடுந் திறனறி புலமைக் கவிஞரொ டுறவாய்க்[1]கூற்
றாடுந் திறனாறு செந்தமி ழமுதச் சுவையோர்ந்தே." (உ)

---

1. கூற்றாடும் - பேசும்.

### எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

"அன்றெனைக் காண [1]நயந்தனை யைய
அமையமொவ் வாமையால் அமைவாய்ச்
சென்றனை நின்னைக் கண்டிலாக் குறைய
தென்னதே சிற்றறி வுடையேன்
ஒன்றல பலவாம் பிழைசெயத் தகுமே
உத்தம குணமொருங் குடையாய்
கன்றினைக் [2]காரான் கனிவுறக் காக்கும்
கனிவொடு [3]கமித்தனின் கடனே." (௩)

### வெண்பா

[4]"விரும்பார்க் கினியா னெனக்குறிபேர் மேலோன்
கரும்பார் சுவையின்பங் கண்டான்—[5]அரும்பாகச்
சிந்தா மணியின் சிறப்பனைத்து மோர்ந்ததனை
நந்தா மணியா நயந்து." (௪)

### கோச்சகக் கலிப்பா

[6]"மருந்தனசீ வகசிந்தா மணிக்குரையை மாண்புலவர்
விருந்தெனக்கொள் வகையளித்தாய் வேறியம்பல் வேண்டுமதோ
[7]பெருந்திமிரம் போக்குவித்தாய் பேரறிவி [8]னாதவனைப்
[9]பொருந்தீரம் பெற்றனையே புத்தகமும் பெற்றேனே." (௫)

---

1. நயந்தனை - விரும்பினை. 2. காரான் - காராம்பசு.

3. கமித்தல் - பொறுத்தல்.

4. விரும்பார்க்கு இனியான் - தன்னை விரும்பாதவர்க்கு இனிமைதராதவன்; இஃது எதிர்மறை முகத்தால், விரும்புகின்றவர்க்கு இனிப்பவனென்னும் பொருளையுடையதாய், **நச்சினார்க்கினியர்** பெயரைக் குறித்து நின்றது.

5. அரும்பாகம் - அரிய செய்யுட் பாகங்களையுடைய.

6. மருந்து - அமிர்தம்.

7. பெருந் திமிரம் - பேரிருள், அறியாமை.

8. ஆதவனை - ஞாயிற்றை.

9. பொரும் தீரம் - ஒப்பாக இருக்கும் ஆற்றல்.

இறுதியிலும் உறுதியான நினைவு

பெருஞ்சிறப்புடன் திகழ்ந்த அரங்கநாதருக்கு நாற்பத்தொன்பதாவது அகவையிலே இறுதி நெருங்கி விட்டது. அறிவிலாரைக் கோதென்று நினைத்து இவ்வுலகில் தானே விட்டு வைத்திருப்பதும், அறிவுடையாரைச் சாறு என்று எண்ணி விரைவில் வாயிலிட்டுக் கொள்வதும் கொடுங் கூற்றிற்கு நெடுங்கால இயல்பு. எத்தனையோ அறிஞர்கள் தம் வாழ்நாளின் செம்பாதியாகிய ஐம்பதாவதாண்டைக் கூடப் பாராமல் இவ்வுலக வாழ்வை நீத்தகன்றார்கள். அரங்கநாதருடைய ஆற்றலுஞ் சிறிது சிறிதாக ஒடுங்கிவந்தது. ஓயா உழைப்பின் மிகுதியால் நோய்கள் பல அரங்கநாதருடைய உடலைப் பற்றிக்கொண்டன. இறுதியில் படுத்த படுக்கையானார்.

அரங்கநாதர் இறுதிக்காலத்தில் எம். ஏ. தேர்வில் கணக்குப்பகுதித் தலைவராக விருந்தார். வினாத்தாளை வழங்கியவர் மதிப்பெண் இடுவதற்குள் நோய்வாய்ப்பட்டார். இறுதிக்காலம் நெருங்கி விட்டதென்று அரங்கநாதருக்கு உறுதியாகத் தெரிந்தது. மதிப்பெண் இடும் வேலையைத் தாஞ் செய்யமுடியாதிருக்கும் நிலைமையைக் குறிப்பிட்டு எழுதித் தம்மை அந்த வேலையில் நின்றும் விடுதலை செய்யுமாறு தெரிவித்துவிட்டார். கணக்குத் தேர்வுக் கூட்டத்திலிருந்த ஓர் ஆங்கிலப் பேராசிரியரும் பார்ப்பனப் பேராசிரியரும் அரங்கநாதருடைய மதிப்பெண் இடும் வேலையைப் பார்க்கத் தொடங்கினர். அரங்கநாதர் வினாத்தாளில் கேட்டிருந்த ஒரு சிக்கலான கணக்கின் விடை எவ்வளவோ ஆராய்ச்சி செய்து பார்த்தும் அவர்களுக்கு விளங்கவில்லை. அவர்கள் அரங்கநாதரையே கேட்டுத் தெரிந்து கொள்வதற்காக அரங்கநாதரிடம் வந்தனர்.

அரங்கநாதரோ உடலும் உயிரும் வேறு பிரியும் நிலைமையி லிருந்தார். கணக்கின் விடையைத் தெரிந்துகொள்வதற்கு வந்தவர்கள் சிறிதுந் தாழ்க்காமல், வினாத்தாளிலுள்ள அவ் வினாவைக் காட்டி அதற்கு விடையை எழுதித் தருமாறு தாளையும் எழுதுகோலையும் அரங்கநாதரிடங் கொடுத்தார் கள். அந்த நிலைமையிலும் நினைவாற்றலோடிருந்த அரங்க நாதர் அவ் வினாவின் விடையை விளக்கமாக எழுதிக் கொடுத்தார். அவர் எழுதிக்கொடுத்த விடை ஆசிரிய ரிருவருக்கும் மிகுந்த வியப்பையும், மகிழ்ச்சியையும் விளைத்தது. அந்தோ! இத்தகைய பேராசிரியரும் இறந்து படுகின்றாரே என்று வருந்திக் கண்ணீர் சொரிந்தனர். சிறிதுநேரத்தில் 1893-ஆம் ஆண்டு தம்முடைய நாற்பத் தொன்பதாம் அகவையில் அரங்கநாத முதலியார் உயிர் நீத்தனர்.

அரங்கநாதரின் பிரிவு குறித்து வருந்தாதார் ஒருவரு மிலர். அரங்கநாதரின் மாணவர்களும் நண்பர்களும் பெரி தும் வருத்தங் கொண்டாடினர். அவருடைய பிரிவுத் துன்பை மக்கள் மறப்பதற்குப் பல நாட்களாயின.

டாக்டர் உ. வே. சாமிநாதையர் அரங்கநாதரின் பிரிவு குறித்துப் பாடிய இரங்கற்பாக்கள்:

[1]நண்பார் தருமரங்க நாதசுகு ணாகரவித்
திண்பார் புகழ்கல்விச் செல்வமுடைச் சிங்கமே
பண்பார் தருமுன்னைப் பார்த்தே பெருமகிழ்வை
உண்பார் வருந்த வொளித்தெங் ககன்றனையே. (க)

தென்னாடு செய்த செழுந்தவமே தென்றொண்டை
நன்னாடு பெற்ற நலமார் மணிவிளக்கே
முன்னாடு சென்னை முளைத்த முழுமதியே
எந்நாடு சென்றாயீ தென்னேயோ வென்னேயோ. (உ)

1. நண்பு ஆர்தரும் - நட்புப் பொருந்தும்.

பொன்னைப் பெறலாம் புகழ்பெறலாம் [1]பூவலயம்
தன்னைப் பெறலாம் [2]தகமுயன்றால் யாவையுமே
பின்னைப் பெறலாம் [3]பிறழா மனவலிசேர்
உன்னைப் பெறுமாறு முண்டோ வுரையாயோ. (௩)

[4]நாவலோர் வாழ்த்தரங்க நாத நயசுகுண
பாவலோர் பெற்றபெரும் பாக்கியமே செந்தமிழின்
ஆவலோ டேனை அருங்குணங்கள் யாவையுமே
[5]மாவலோ யெவ்விடத்து வைத்தகன்றாய் சொல்வாயே. (௪)

**வேறு**

[6]தரங்கவேலை யனையதாய சடையிடைப்பு குந்துநின்
[7]றுரங்கலந்த வாங்கிலேய ஒருமொழிப்ர சங்கமங்
கரங்கநாத வள்ளல்போல வவரவர்வி யந்துதம்
[8]சிரங்கரந்து ளக்குமாறு செப்பவல்லர் யாவரே. (௫)

**வேறு**

எல்லா நலமும் இனிதமைந்தோன் பூண்டிநகர்
நல்லார் புகழரங்க நாத முகிலிறந்த
பொல்லாத வோசையிடி போலே தமிழ்க்குயிலை
[9]வல்லாமை செய்து வருத்தத் திருத்தியதே. (௬)

---

1. பூவலயம் - பூவுலகம். 2. தக - தகுதியாக.
3. பிறழா - மாறுபடாத. 4. நாவலோர் - அறிஞர்கள்.
5. மாவலோய் - மிக வல்லவனே.
6. தரங்க வேலை - அலையையுடைய கடல்.
7. உரம் - அறிவுவன்மை.
8. சிரங் கரந்துளக்குமாறு-தலையாட்டுதலுங் கைதட்டுதலுஞ் செய்யுமாறு.
9. வல்லாமை - ஒன்றுஞ் செய்யமாட்டாமை. இடியொலி கேட்பின் குயில் செயலற்றிருத்தல் இயல்பு.

## கஙு. இராய்பகதூர் பெ. சுந்தரம்பிள்ளை

### பிறப்பு

மனோன்மணீய நாடக நூலாசிரியரான இராய்பகதூர் பெ. சுந்தரம் பிள்ளையவர்கள், சேரநாட்டில் திருவிதாங் கூரைச் சேர்ந்த ஆலப்புழை என்னும் ஊரில் தோன்றிய வர். சுந்தரம்பிள்ளையின் தந்தையார் வேளாள மரபில் தோன்றி அறுவைவாணிகம் செய்துகொண்டிருந்தார். தந்தையார் பெயர் பெருமாள்பிள்ளை. தாயார் பெயர் மாடத்தி என்ப. சுந்தரம்பிள்ளை ஆயிரத்து எண்ணூற்று ஐம்பத்தைந்தாம் ஆண்டு பிறந்தார். தாய் தந்தையர் இறைவன்மாட்டு அன்பு மிக்கவர்களாதலின் சுந்தரம் பிள்ளையும் இறைவனிடத்திலே பேரன்பு பொருந்தியவராக விருந்தார்.

### கல்விப் பயிற்சி

ஆலப்புழையில் அந்நா ளிருந்த பள்ளிக்கூடத்தில், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, மூதுரை, நன்னெறி, நீதிநெறி விளக்கம் முதலிய நீதி நூல்களையும் பிற சிறு நூல்களையும் நன்கு கற்றுணர்ந்தார். சுந்தரம்பிள்ளை இயற்கையில் கூரிய அறிவும் சீரிய செயலும் சிறந்து விளங் கினமையின், பன்னிரண்டாம் அகவையில் தானே, தாய் மொழியாகிய தமிழ்மொழியிற் பிழையறப் பேசவும் எழுதவும் வல்லவராகப் பிறங்கினர். அந்நாளில் ஆலப் புழையில் புதிதாக அமைக்கப்பெற்ற ஆங்கிலக் கல்விச் சாலையில் ஆங்கிலங் கற்கத் தொடங்கினர். புகுமுகத் தேர்ச்சிவரை கற்றூர். அந்நாளிலேயே சுந்தரம்பிள்ளையின் அறிவு அனைவரும் வியக்கத்தக்கவாறு விளங்கியது.

அதன் பிறகு திருவனந்தபுரம் அரசர் கல்லூரியிற் சேர்ந்து உயர்நிலைக்கல்வி பயிலலானர். பத்தாவது வகுப்

பில் முதல் வகுப்பில் தேறினர். அதனால் அரசியலார் திங்கள்தோறும் எட்டு வெண்பொற் காசுகள் (ரூபா) உதவியளிக்கலாயினர். அவ் வுதவி பி. ஏ. முடிவுவரை கொடுக்கப்பெற்றது. ஒவ்வொரு வகுப்பிலும் திறம்பெறக் கற்றுச் சிறப்புற்று வந்தார். ஆயிரத்து எண்ணூற்று எழு பத்தாறும் ஆண்டில் பி. ஏ. தேர்விலுந் தேறினர். மாணவ ராகக் கல்வி கற்றபொழுதே பலவகை நூல்களையும் நன்கு பயின்று அறிவு நிரம்பப்பெற்றார். சுந்தரம்பிள்ளை கல்விச் சாலைகளிற் பெறும் பட்டம் பதவிகளுக்காகப் படிக்காமல், உண்மை யறிவு நிரம்பப் பெறுதலையே குறிக்கோளாகக் கொண்டு கல்வி கற்றமையின், அவருடைய அறிவு பல வகைகளிலுஞ் சிறந்து திகழ்ந்தது.

தொழிலும் திருமணமும்

சுந்தரம் பிள்ளையின் கல்வியாற்றலைக் கல்லூரித் தலைவ ரான 'ராச்' என்னும் ஆங்கிலேயர் நன்குணர்ந்தார். தமது கல்லூரியில் தானே பி. ஏ., எப். ஏ. முதலிய வகுப்பு களுக்கு வரலாற்று நூலும் அறிவுநூலும் கற்பிக்கும் ஆசிரியராக அமர்த்தினர். கல்வி கற்பிக்குந் தொழிலைச் செவ்வையாகச் செய்துவந்தார். இவருடைய சொல்வன்மை மாணவர்களுக்கு மகிழ்வையூட்டியது. ஆசிரியத் தொழி லில் அமர்ந்தபின் இருபத்தொன்றாவது அகவையிலே, சிவகாமி என்னும் மங்கைநல்லாளைத் திருமணம் புரிந்து கொண்டு இல்லற வாழ்க்கையையும் இனிது நடத்தலானார்.

தலைமைத் தொழில்

அக் காலத்தில் திருநெல்வேலி ஆங்கிலத் தமிழ்க் கல்விச்சாலைக்கு ஒரு தலைவரைத் தெரிந்து அறிவிக்குமாறு, சென்னைக் கல்வித் துறைத் தலைவர் டாக்டர் டங்கன், 'ராச்' துரைமகனாருக்கு ஒரு கட்டளை அனுப்பினர். அத் தலை மைப் பதவிக்கு 'ராச்' துரைமகனார் சுந்தரம்பிள்ளையைக்

குறிப்பிட்டனுப்பினர். அவ்வாறே அத் தலைமைத் தொழில் சுந்தரம் பிள்ளைக்கு அளிக்கப்பெற்றது. சுந்தரம் பிள்ளையும் அக் கல்விச்சாலைத் தலைவராக அமர்ந்து, அக் கல்விச்சாலையைத் திறம்பெற நடத்தி, அதனை இரண்டாவது வகுப்புக் கல்லூரியாகவும் ஆக்கினர்.

**நூல்கள் இயற்றுதல்**

திருநெல்வேலியில் தொழில் புரிந்துகொண்டிருந்த காலத்தில், கோடகநல்லூர் சுந்தர அடிகள் என்னும் பெரியாருக்கு மாணவராகிச் சமயநூல்கள் பலவற்றையுங் கற்றுணர்ந்தார். மனோன்மணீயம் என்னும் நாடக நூலையும் நூற்றொகை விளக்கம் என்னும் நூலையும் இந்நாளில்தான் இவர் எழுதத் தொடங்கினர். மனோன்மணீய நாடகத்திற்கு முதல்நூல், [1]இரகசிய வழி என்னும் ஆங்கிலக் கதையாகும்.

மனோன்மணீய நாடக நூலின் முகப்பிலே சுந்தரம் பிள்ளை தமிழ்த்தெய்வ வணக்கம் ஒன்று பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பாவிலே பாடியுள்ளார். அப் பாட்டினால் சுந்தரம்பிள்ளையின் மொழிநூல் ஆராய்ச்சித் திறனும், பன்னூல் ஆராய்ச்சித்திறனும், உலகியல் அறிவும், தமிழ்மொழி மாண்புந் தெள்ளிதிற் புலனும். அச் செய்யுட்களாவன:

**தமிழ்த் தெய்வ வணக்கம்**

**ஆறடித்தரவு**

[2]"நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்

---

1. The Secret way.

2. **தரவு.** கடலை யாடையாக வுடுத்த நிலமடந்தையின் திருமுகத்தைப்போன்றது இப்பரதகண்டம். திருமுகத்தில் பிறைநுதல் போன்றது தென்னாடு. அந் நெற்றியில் இட்ட பொட்டைப் போன்றது தமிழ்நாடு. அப் பொட்டின் மணத்தை யொத்தது தமிழ்மொழி.

தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறும் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திரவிடநற் றிருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ் மணக்க இருந்தபெருந் தமிழணங்கே. (க)

[2] "பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினும் ஓர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பது போல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல வாயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே. (உ)

## தாழிசை

"கடல்குடித்த குடமுனியுன் கரைகாணக் குருநாடில்
தொடுகடலை யுனக்குவமை சொல்லுவதும் புகழாமே. (க)

ஒருபிழைக்கா அரனார்முன் உரையிழந்து விழிப்பாரேல்
அரியதுன திலக்கணமென் றறைவதுமற் புதமாமே. (உ)

சதுமறையா ரியம்வருமுன் சகமுழுது நினதாயின்
முதுமொழிநீ அநாதியென மொழிகுவதும் வியப்பாமே. (ந)

வேகவதிக் கெதிரேற விட்டதொரு சிற்றேடு
காலநதி நினைக்கரவாக் காரணத்தின் அறிகுறியே. (ச)

கடையூழி வருந்தனிமை கழிக்கவன்றோ அம்பலத்துள்
உடையாருன் வாசகத்தில் ஒருபிரதி கருதினதே. (ரு)

தக்கவழி விரிந்திலகுஞ் சங்கத்தார் சிறுபலகை
மிக்கநலஞ் சிறந்தவுன்றன் மெய்ச்சரித வியஞ்சனமே. (சா)

---

தரவு-உ. உலகத்தைப் படைத்தழிக்குங் கடவுள் ஒரே தன்மையாக நிலைத்து நிற்றலைப்போல எவ்வளவு மாறுபாடு நிகழினும் தமிழ் மொழியும் ஒரே தன்மையாக நிலைத்து நிற்கின்றது. தாழிசை-உ. 'கொங்குதேர் வாழ்க்கை' என்னும் பாடல் 'தவறு' என்று நக்கீரர் சிவபிரானை எதிர்த்த வரலாறு இதிற் கூறப்படுகிறது. தாழிசை-ந. ஆரியமொழி தோன்றுவதற்கு முன்னரே தமிழ்மொழி உலகம் முழுவதும் பரவியிருந்ததென்னும் செய்தி இதில் கூறப்பெறுகிறது.

வடமொழிதென் மொழியெனவே வந்தவிரு விழியவற்றுள்
கெடுவழக்குத் தொடர்பவரே கிழக்கொடுமேற் குணராரே. (எ)
வீறுடைய கலைமகட்கு விழியிரண்டு மொழியானல்
கூறுவட மொழிவலமாக் கொள்வர்குண திசையறியார். (அ)
கலைமகள்தன் பூர்வதிசை காணுங்கால் அவள்விழியுள்
வலதுவிழி தென்மொழியா மதியாரோ மதியுடையார். (கூ)
பத்துப்பாட் டாதிமனம் பற்றினர் பற்றுவரோ
எத்துணையும் பொருட்கிசையும் இலக்கணமில் கற்பனையே. (க0)
வள்ளுவர்செய் திருக்குறளை மறுவறநன் குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மநுவாதி ஒருகுலத்துக் கொருநீதி. (கக)
மனங்கரைத்து மலங்கெடுக்கும் வாசகத்தின் மாண்டோர்கள்
கனஞ்சடையென் றுருவேற்றிக் கண்மூடிக் கதறுவரோ. (கஉ)

எனவாங்கு,

**ஆசிரியச் சுரிதகம்**

நிற்புகழ்ந் தேத்து நின்னெடுந் தகைமைந்தர்
பற்பலர் நின்பெரும் பழம்பணி புதுக்கியும்
பொற்புடை நாற்கவிப் புதுப்பணி [1]குயிற்றியும்
நிற்பவர் நிற்க நீபெறும் புதல்வரில்
அடியேன் கடையேன் அறியாச் சிறியேன்
கொடுமலை யாளக் குடியிருப் புடையேன்
ஆயினும் நீயே தாயெனுந் தன்மையின்
மேயபே ராசையென் மீக்கொள வோர்வழி

---

**தாழிசை** - ச. திருஞானசம்பந்தர் சமணருடன் வாதுசெய்து ஏடு எதிரேறச் செய்த செய்தி இதிற் கூறப்பெறுகிறது.

**தாழிசை** - ரு. சிவபிரான் திருவாசக மெழுதிய வரலாறு இதிற் குறிக்கப்பெற்றுளது. **தாழிசை** - சூ. சங்கப் பலகை தகுதி மிக்க தமிழ் நூலுக்குமட்டும் இடங்கொடுத்து வந்ததென்பர். **தாழிசை** - எ, அ. கிழக்கு முகமாக அமர்ந்திருக்கும் கலைமகளுக்கு வலது விழி தென் புறத்ததாகலின் கலைமகளுக்கு வலது விழி தமிழும் இடது விழி ஆரியமுமாகக் கொள்ளவேண்டியது இயல்பு. அவ்வாறின்றி மாற்றிக்கூறின் அது திசையறியாதார் கூற்றென்று நயமுறக் கூறிய அழகு பாராட்டத்தக்கது. **தாழிசை** - க0. பத்துப் பாட்டு - கடைச் சங்கப் புலவர்கள் இயற்றிய தொகை நூல்.

1. குயிற்றியும் - செய்தும்.

உழைத்தலே தகுதியென் றிழைத்தவிந் நாடகம்
வெள்ளிய தெனினும் விளங்குநின் கணைக்காற்கு
ஒள்ளிய சிறுவிர லணியாக்
கொண்மதி யன்பே குறியெனக் குறித்தே.

என்பதாகும். இச் செய்யுள் ஒரே பாட்டாயினும் இதனால் விளைந்த பயன் மிகவும் வியக்கத்தக்கதாகும். சுந்தரம் பிள்ளையின் இந்தப் பாடலைக் கண்டபின்னர் பலரும் தமிழின் பழம்பெருமையையும் சிறப்பையும் உள்ளவாறுணர்ந்தனர். பலர் இச் செய்யுளைத் தாம் எழுதிய தமிழைப்பற்றிய கட்டுரைகளில் எடுத்தாண்டனர். ஆங்கிலேயர்கள் சிலர் தாம் எழுதிய ஆராய்ச்சி நூல்களில், தமிழின் பழமையைப் பாராட்டி, 'ஒரு காலத்தில் உலகம் முழுவதும் தமிழ்மொழி வழங்கியுள்ளது,' என்று எழுதிய கூற்றைக் கதையாகவும் வேடிக்கையாகவும் நினைத்த பலர், சுந்தரம் பிள்ளையின் தமிழ்த்தெய்வ வணக்கப் பாடலைப் பார்த்தபிறகு அக் கொள்கையை ஒருவாறு உடன்படத் துணிந்தனர். சுந்தரம் பிள்ளை தமது மனோன்மணீயத்தில் தம் ஆசிரியர் சுந்தர அடிகளை ஒரு சிறந்த நாடக உறுப்பாக அமைத்திருக்கிறார்.

தந்தையார்மாட்டு அன்பு

சுந்தரம் பிள்ளையின் தாயார் இறைவனடி யடைந்த பின் தந்தையார் தம் மைந்தருடன் இருந்தார். சுந்தரம் பிள்ளை தமது வருவாய் முழுமையையும் தந்தையாரிடங் கொடுத்துவிட்டுத் தம்முடைய சிறு செலவுகளுக்குக் கூடத் தந்தையாரைக் கேட்டுக் காசு பெறுவது இயல்பாம். இதனால் இவர் தம் தந்தையாரிடத்துக் கொண்டிருந்த அன்பையும், பணிவையும் நாம் ஒருவாறு ஊகித்துக்கொள்ளலாம்.

### அறிவுநூற் புலவர்

ஆயிரத்து எண்ணூற்று எழுபத்தொன்பதாம் ஆண்டிலே, திருவனந்தபுரம் அரசர்கல்லூரியில் அறிவுநூற் புலவராயிருந்த, [1]'ஆர்வி,' என்பவர் தம்முடைய தாய்நாடு சென்றபோது தமது வேலையில் சுந்தரம் பிள்ளையை அமர்த்திவிட்டுச் சென்றார். சுந்தரம் பிள்ளை மறுஆண்டில் எம். ஏ. தேர்வுக்குச் சென்று வெற்றி பெற்றார். ஆசிரியத் தொழிலுடன் அமைந்துவிடாது தமிழிலக்கிய வளர்ச்சிக்கான உழைப்பிலும் மிகவும் ஈடுபட்டார். பலவிடங்களிலும் உள்ள கோயில்களில் வெட்டப்பட்டிருந்த கல்வெட்டுக்களை யெல்லாம், ஓய்வு கிடைத்தபொழுது தம்முடைய செலவில்தானே ஆராய்ச்சி செய்து பல புதுச் செய்திகளை யறிந்துகொண்டிருந்தார்.

### பெரிய அலுவல்

சுந்தரம் பிள்ளையின் கல்விப் பெருமையை நன்குணர்ந்த விசாகந் திருநாள் அரசர் அவரைத் தம்முடைய அரண்மனையில் ஓர் உயர்ந்த அலுவலில் அமர்த்தினர். சுந்தரம் பிள்ளையின் கல்வியாற்றலுக்கு அவ்வேலை ஏற்றதாக வில்லை. அவ்வேலையை விட்டு அகலுவதற்குத் தக்க சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். அச்சமயத்தில் அரசர்கல்லூரித்தலைவர் 'ராச் துரை' தம்முடைய தாய்நாடு செல்ல நேர்ந்தது. அவ்வேலை சுந்தரம் பிள்ளைக்குக் கொடுக்கப்பெற்றது. இறுதிக்காலம் வரை அவ்வேலையில் தானே அமர்ந்து, அறிவுநூற் கல்வியை மாணவர்கட்கு நன்முறையில் கற்பித்துக்கொண்டிருந்தார். சுந்தரம் பிள்ளையின் கல்வியாற்றல் ஒவ்வொரு நாளுஞ் சிறந்தோங்கியது.

---

1. Dr. Harvey.

**சைவப்பிரகாச சபை**

ஆயிரத்து எண்ணூற்று எண்பத்து நான்காம் ஆண்டிலே சுந்தரம் பிள்ளையும் மற்றும் பல அறிஞர்களும் ஒன்றுசேர்ந்து 'சைவப்பிரகாச சபை' என்னும் பெயருடன் ஒரு கழகம் ஏற்படுத்தி அதன் வாயிலாக சைவ சமய வளர்ச்சிக்கான காரியங்கள் பல செய்தார்கள். அவ்வவைக்குப் பலரும் ஒன்றுசேர்ந்து ஓர் இடம் வாங்கிக் கட்டிடம் கட்டி அவையை நடத்திவந்தார்கள். அக்கட்டிடம் இன்றுந் திருவனந்தபுரத்தில் உள்ளது. இவ்வவை மூலமாகத் தொண்டுசெய்ததன்றியும் தமிழ்மொழிவளர்ச்சிக்காகவும், அறிவு வளர்ச்சிக்காகவும் சொற்பொழிவுகள் பல நிகழ்த்தியிருக்கிறார். பொதுமக்கள் சொற்பொழிவுக் கழகத்திலும் அமைச்சரா யமர்ந்து அதிலும் பல சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார்.

**ஆராய்ச்சி**

தமிழிலக்கிய வரலாற்றாராய்ச்சியிலும், சமய நூல் ஆராய்ச்சியிலும், திருவிதாங்கூர் பண்டைய அரசர் கால ஆராய்ச்சியிலும் மிகவும் உழைத்து, அவ்வப் பொருள்களைப்பற்றிப் பல கட்டுரைகள் ஆங்கிலத் திங்கள் இதழ்களில் எழுதியுள்ளார். சென்னைக் கிறித்துவக் கல்லூரித் திங்கள் இதழ்களில் 'பத்துப்பாட்டு' என்னும் பொருள் பற்றியும், 'ஞானசம்பந்தர் கால ஆராய்ச்சி' என்னும் பொருள்பற்றியும் ஆங்கிலத்தில் சில கட்டுரைகள் எழுதியிருக்கிறார். திருவிதாங்கூர் பண்டைய அரசர் காலவாராய்ச்சிக் கட்டுரைகளும் மற்றவைகளும் பிறகு நூல் வடிவில் வெளிவந்தன.

**மேனாட்டார் அவா**

சுந்தரம் பிள்ளையின் கல்வித்திறமை நாளடைவில் மேனாடுகளினும் பரவியது. செர்மனியிலுள்ள ஒரு பல்

கலைக் கழகத்தார், சுந்தரம் பிள்ளை அங்கு வந்து தங்கள் கல்லூரியில் ஆறு திங்கள் தங்குவாராஞல், 'அறிவு நூற் பெரும்புலவர்' என்னுஞ் சிறந்த பட்டத்தை வழங்குவு தாக வாக்களித்தனர். இதனல் அந்நாட்டார் சுந்தரம் பிள்ளையிடம் கொண்டிருந்த பெருமதிப்பை ஒருவாறு நாம் உணரலாம்.

**பெரிய பட்டங்கள் பெறுதல்**

அந்நாளில் சென்னை மாநில அரசியல் தலைவராகவிருந்த சர். எம். இ. கிராண்ட்டப் என்பவரின் வேண்டுதலின் பேரினும் தூண்டுதலின் பேரினும் இலண்டனிலுள்ள வரலாற் ருராய்ச்சிக் கழகத்தார் சுந்தரம் பிள்ளைக்கு F. R. H. S. என்னும் பட்டச் சிறப்பையும், ஆசியாத் தொடர்பான ஆராய்ச்சிக் கழகத்தார், M. R. A. S. என்னும் பட்டச் சிறப்பையும் வழங்கிப் பெருமைப் படுத்தினர். சுந்தரம்பிள்ளை செய்த தென்னிந்திய வரலாற் ருராய்ச்சியின் திறமையைக் கண்ட சென்னை அரசியலார் 'இராய் பகதூர்' என்னும் பட்டச் சிறப்பை வழங்கினர். ஆயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூற்ருறாம் ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழகத்தார் பல்கலைக் கழக உறுப்பின ராக அமைத்துக்கொண்டனர். அதுமுதல் பல ஆண்டு கள் சுந்தரம்பிள்ளை, தமிழ், வரலாறு, அறிவு நூல் ஆகியவை களுக்குத் தேர்வாளராக அமைந்தனர்.

**அரசரின் நன்றி**

திருவிதாங்கூர்ப் பண்டையரசர் கால ஆராய்ச்சியினை எழுதும் பொருட்டுச் சுந்தரம்பிள்ளை யெடுத்துக்கொண்ட பேருழைப்பை நன்குணர்ந்த திருவிதாங்கூர் மன்னர், அந்நாள் முதற்கொண்டே சுந்தரம் பிள்ளையின் ஒரே பிள்ளையான நடராச பிள்ளைக்குத் திங்கடோறும் இருபது வெண்பொற் காசுகள் நன்கொடை யளித்துவருகின்ருர்.

### இளமையில் தானே இறுதி

பெருழைப்பு மிகுந்த சுந்தரம்பிள்ளை நோய் மிகுதியால் திடீரென்று தம்முடைய நாற்பத்திரண்டாம் அகவையில் (26-4-1897) இறைவன் திருவடி நீழலை எய்தினர்.

### நல்லியல்புகள்

சுந்தரம்பிள்ளையின் நல்லியல்புகள் பல. இவர் கோடக நல்லூர்ச் சுந்தர அடிகளாரின் தொண்டரானது முதல் காலையில் நீராடித் தேவார திருவாசகத் தமிழ் மறைகளை யோதி இறைவனை வழிபட்ட பின்னரே உணவருந்தி வேலைமேற் செல்வதை மேற்கொண்டிருந்தார். இறுதிவரை அவ்வொழுக்கந் தளராமற் பாதுகாத்து வந்தார். இவர் காட்சிக் கெளியராகவே விளங்கியிருந்தார். மேனாட்டு நாகரிகம் இவருடைய நல்லியல்புகள் எல்லாவற்றையுங் கெடுக்கவில்லை.

தமக்குச் சிறு நன்றியை ஒருவர் புரியினும், 'தினைத் துணை நன்றி செயினும் பனைத்துணையாக் கொள்வர் பயன் தெரிவார்' என்னுஞ் செந்தமிழ் மறைக் கிணங்கப் போற்றும் தன்மையை யுடையவர். தமக்கு உதவிபுரிந்த டாக்டர் ஆர்வி துரையின் நன்றியைப் பாராட்டுவதற்காகத் தாம் குடியிருந்து வந்த மனைத்தோட்டத்திற்கு 'ஆர்விபுரம்' என்று பெயரிட்டு வழங்கினர். தாமியற்றிய மனோன்மணீய நாடக நூலையும் ஆர்வி துரைக்கே உரிமைப் படுத்தி வெளியிட்டார். தம் பழைய நண்பர் சிலரைத் திருவிதாங்கூருக்கு அழைத்து அவர்களுடன் பழமை பாராட்டி மகிழ்ந்தார்.

தமிழ்மொழியில் நாடக நூல்கள் மிகக்குறைவு தமிழ் மொழியில் நல்ல நாடகம் ஒன்றையேனும் செய்து முடிக்க

வேண்டு மென்னும் நோக்கத்துடன்தான் மனோன்மணீயத்தைச் செய்து முடித்தார். ஒன்றேயாயினும் அது நன்றேயாய், என்றும் பொன்றாப் புகழுடன் மிளிர்கிறது. மனோன்மணீய நாடகத்தைவிட அவர் பாடிய தமிழ்த் தெய்வ வணக்கந்தான் அவருடைய புகழைக் குன்றின்மே லிட்ட விளக்கெனத் தமிழுலகம் முழுவதும் விளக்கி அப் புகழை வளர்த்ததென்று கூறுதல் ஒரு சிறிதும் மிகை யாகாது.

---

## கசு. இராவ்பகதூர் சி. வை. தாமோதரம் பிள்ளை

தோற்றம்

திரு. வி. கோ. சூரியநாராயண சாத்திரியார் என்னும் பரிதிமாற் கலைஞனால்,

"காமோதி வண்டர் கடிமலர்த்தேன் கூட்டுதல்போல்
நாமோது செந்தமிழின் நன்னூல் பலதொகுத்த
தாமோ தரம்பிள்ளைசால்பெடுத்துச் சாற்றவெவர்
தாமோ தரமுடையார் தண்டமிழ்ச்செந் நாப்புலவீர்."

என்று பாராட்டப்பெற்ற தாமோதரம் பிள்ளை ஈழநாட்டிலே யுள்ள சிறுப்பிட்டி யென்னும் ஊரில் வைரவநாத பிள்ளை என்பவருக்கு மைந்தராகத் தோன்றினார். தோன்றிய காலம் ஆங்கிலம் ஆயிரத்து எண்ணூற்று முப்பத்திரண்டாம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் பன்னிரண்டாம் நாளாகும். இளமைக் காலத்தில் வட்டுக்கோட்டைக் கல்லூரியில் கல்வி பயின்றார். அத்துடன் அமையாது இலக்கண இலக்கியங் களைச் சுன்னாகம் முத்துக்குமாரக் கவிராயரிடம் முறையே கற்றுணர்ந்தார். இவருடைய இலக்கண இலக்கிய ஆசிரி யர் முத்துக்குமாரக் கவிராய ரென்பது,

"சுன்னை முத்துக் குமரன் துணைக்கழல்
சென்னி நாவொடு சிந்தை திருந்தவைத்(து)
அன்ன மூதறி வாளர் பதந்துதித்(து)
இந்நிலத் திவ்வுரை இன்றி யம்புகேன்."

என்று கலித்தொகைப் பதிப்புரையிற் கூறியுள்ளமையின் நன்கு விளங்கும். அவ் விளமைக் காலத்தே பிள்ளையவர்களின் தமிழார்வமும், நினைவாற்றலும், நுண்மாண் நுழை புலத்திறனும் நேரிற் கண்ட ஆசிரியர் ஶ்ரீ நவி ஃசு தமிழ்ப் பண்டிதரெனும் பட்டஞ் சூட்டினர். தமிழ்மொழி பிள்ளையவர்களால் மிகச் சிறப்படையுமென்றுங் கூறினர்.

**கல்விப் பயிற்சியும் தொழிலும்**

ஆங்கிலக் கல்வியறிவை மிகுதியும் வளர்த்து ஆயிரத்து எண்ணூற்று ஐம்பத்தேழாம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகத்தாரால் நடத்தப்பெற்ற பிரவேசத் தேர்விலும் பி. ஏ. தேர்விலும் தேர்ச்சியடைந்தார். 1871-ல் சட்ட நூற்புலமையில் தேர்ச்சிபெற்று பி. எல். பட்டம் எய்தினர்.

முதலில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் ஆசிரியராயிருந்தார். பின்பு, பெர்சிவல் பாதிரியாரின் வேண்டுகோளுக் கிணங்கத் 'தினவர்த்தமானி' என்னும் தமிழ்வெளியீட்டின் ஆசிரியராயிருந்தார். ஆயிரத்து எண்ணூற்று ஐம்பத்தேழாம் ஆண்டு கள்ளிக்கோட்டை அரசினர் கல்லூரித் தலைமை யாசிரியராக அமர்ந்திருந்தார். சென்னை அரசியல் வரவுசெலவுக் கணக்குநிலையத் தலைவராகவும் தொண்டாற்றினர். பிள்ளையவர்களின் அலுவலகப் பணிகளைக் கண்டு வியப்புறாதார் எவருமிலர். அவர் தம் மேனிலை முதன்மையாளர்களும் இவரிடம் தக்க நன்மதிப்பும் மிக்க வேட்கையும் உடையவர்களாகவே இருந்தனர்.

எடுத்துக்காட்டாக, இவர் தம் அலுவலகத் தலைவர் ஒரு கணக்கை மிகுவிரைவில் முடிக்கவேண்டும் இன்றியமையாக் கருத்தினரா யிருந்தனர். பிள்ளையவர்களே அவ் வேலையை வல்விரைந்து முடிக்கும் சுறுசுறுப்பும் திறமையும் வாய்ந் தவர்கள் என்று கண்டனர்.

பிள்ளையவர்களை வரவழைத்து, "இந்த வேலை கூடிய விரைவில் இன்றியமையாதது முடியவேண்டியதாக விருக் கின்றது. நீரே அதற்குத் தக்கவர். யான் இவ் வேலையை முடிப்பதாயின் ஒருகிழமை செல்லும்; நீர் பத்து நாட் களில் முடித்துத் தரவேண்டும்," என்றனர். பிள்ளையவர் களும், "அவ் வண்ணமே ஆகுக," என்று ஒப்புக்கொண் டனர். ஒப்புக்கொண்டு அக் கணக்கை நான்கு நாட்களில் முடித்து நல்கினர். இதைக்கண்ட தலைவர் மிக வியந்து பிள்ளையவர்களைப் பார்த்து, "நீர் இதனை இரண்டு கையா னும் முடித்தீரோ," என்று நகையும் உவகையும் ததும்ப நவின்றனர்; மிகவும் பாராட்டினர்.

வழக்கறிஞராகவும் சிலகாலம் இருந்ததன்றி ஆயிரத்து எண்ணூற்று எண்பத்தேழாம் ஆண்டுமுதல் புதுக் கோட்டை உயர்நிலை நீதிமன்றத்து நீதித் தலைவராகவும் அமர்ந்து காரியம் புரிந்துள்ளார். அறம்பகர் மன்றத்து நடுவராயிருந்து வழக்குகளைத் திறம்பெற ஆய்ந்து இருவரும் பொருந்த உரைப்பர். உண்மை காணவேண்டு மென்னும் பெருநோக்கம் ஒன்றே யுடையார். இனிமையும் கனிவும் நனிமிக வுடையர். இவர்தம் அருந்திறலை வியவாதார் எவருமிலர்.

**தமிழார்வம்**

தாமோதரம் பிள்ளை இயற்கையாகத் தமிழ்மொழி யிடத்திலே ஆர்வம் மிக்கவர். எவராயினும் தமிழ்மொழி

யைக் குறைகூறும், அல்லது இழிவுபடுத்தும் நோக்கத்துடன் பேசினாலோ எழுதினாலோ அதனைத் தக்கபடியாகக் கண்டிக்காமல் விடார். தமிழ்மொழியிலே மிகுந்த ஆராய்ச்சியுடையவர். ஆகவே, இவர் கூறும் உரைகள் திட்பநுட்ப முடையனவாக விருக்கும். தமிழ் மொழியைப் பற்றி அக் காலத்தில் சிலர் குறைவாக எழுதியும் பேசியும் வந்தனர். அவர் கூற்றைக் கண்டித்துத் தம் கலித்தொகைப் பதிப்புரையிலே,

"தமிழ் சுயபாஷை யென்பதூஉம், அதன் பெயர் திரவிடமரூஉ வன்று; தமிழ் மொழியே யென்பதூஉம், அஃது பரதகண்டத்தில் எப்பாஷைக்கும் பிந்தியதன்றென்பதூஉம், எவ்வாற்றானும் பிற பாஷைகளுக்குத் தாழ்ந்ததொன் றன்றென்பதூஉம் வீரசோழியப்பதிப்புரையில் ஆக்ஷேப நிராகரண சகிதமாக விவரித்தெழுதி யிருக்கின்றேன்.

"ஆயினும், என் கூற்றை நன்குணராது, திரவிடமென்னுஞ் சமஸ்கிருதபதந் தமிழெனத் திரிதற்கு மார்க்கமில்லை யென்று யான் மறுத்ததுபோலச் சிலர் மயங்கி, வெகு கஷ்டப்பட்டு விதிநாட்டித், திரவென்பது தவ்வாகியும், வகர டகரங்கள் மகர ழகரங்களாகியும் மருவி அம்மீறு கெட்டுத் தமிழாயிற்றென்று பல் உதாரணங்கள் காட்டி வாதித்து, இனி யான் தம் மதத்திற்கு உடம்படுதலே தக்கதென்றும் போதித்தனர். இப்படி மருவுதற்கு விதியிலதென்று யான் யாண்டுஞ் சாதித்திலேன். இதுவும் ஒரு பெருமயக்கே. தமிழென்பதற்குந் திரவிடமென்பதற்கும் உள்ள சப்தபேதத்தைக் குறித்து விசாரிப்புழியன்றே இது பயன்படுவது? அன்றியும், மரூஉ மொழி யிலக்கணமுமொன்று உளதாக, விதியென்று மாரடிக்க

வேண்டிய தலைவிதிதானென்னே! மருஉவிற்கு ஒரு வழிப்பட்ட விதியுண்டா? திரவிடந் தமிழென மரீஇயிற் றென்றூற் போதாதா? தமிழென்னுஞ் சொல் தமிழ்ப் பாஷைச் சுயமொழியா திரவிடமென்னும் வடமொழித் திரிபா எஃதுண்மையென ஆராய்ச்சி செய்வான் புகுந்தபோதே, திரவிடமென்பது தமிழென மாறுதற்கு விதியுண்டென்று யான் ஒத்துக்கொண்டது தானே போதருமல்லவா?

"இனி இவர் கூற்றின் சாராமிசத்தைச் சிறிது கவனிப்போம். மதுரையில் ஒரு திருமலை நாயக்கன் இருந்தனன்; சென்னையில் ஒரு திருமலை நாயக்கன் இருந்தனன்; இருவரும் வடுகர். சென்னைக்கும் மதுரைக்கும் மிகச் சுளுவிலும் விரைவிலும் போய்வரத் தக்கதாகப் புகைரத வீதியுண்டு. ஆதலால் இரண்டிடத்தும் இருந்தது ஒரே திருமலை நாய்க்கன்தானென்பதே. இஃதென்ன தர்க்கலக்ஷணம்! என்ன விபரீதம்!! ஒரே காலத்தில் இருந்தாரென்று கொள்ளினும் இது சித்தாந்தமாகாதே. பின்னை அகத்தியர் காலத்தின்முன் தொட்டுள்ள பதினூறாயிரம் வயதுள்ள தமிழ்ப் பதத்தையும், உச்சயினிபுரத்தில் இரண்டாயிரம் வருஷத்தின்முன் பிறந்த திரவிட பதத்தையும் ஒன்றென்றால் யார்தான் நகையார்? மூதாதை திருமன்றவிற் பௌத்திரன் சந்தன தாம்பூலம் பரிமாறினனென்பதற்கும் இதற்கும் யாது பேதம்? தமிழென்னும் பதத்தை எடுத்தாண்ட அகத்திய தொல்காப்பியர் காலத்துச் சமஸ்கிருத நூலுடையோராய நாரத வியாச வசிஷ்டாதியர் வாய்மொழியினின்று திரவிட சப்தம் வழங்கியதை முதற்காட்டியன்றோ பின்னர் இம் மதம் நாட்டப் புகுதல்வேண்டும்? சிவபெருமான் அகத்தியரைப் பொதியிற்கு அனுப்பிய கதை ஸ்காந்தம் முதலிய பழைய புராணங்களில் உளதாகவும், ஆண்டுத் திரவிட சப்தத்தைக் காண்கிலமே.

ஆலசிய புராணம், பாகவதம் முதலிய பிற்றைநாள் நூல்களி லன்றோ அது முளைத்தது? 'யான் போகும் இடம் கலை வல்லோரும் முனிவரும் நிறைந்த பெருமாண்பினதாதலின் அவர்கள் மொழியை உபதேசித்து என்னை ஆண்டனுப்புக' என்றதன்றித் திரவிடமென்று கேட்டதில்லையே,"

என்றும், மற்றும் பலவாறு எழுதியிருத்தல் இக் கூற்றை மெய்ப்பிக்கும்.

**பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்தல்**

பிள்ளையவர்கள் தாம் பலவகைப்பட்ட அலுவல்களில் அமர்ந்திருந்தும் தமிழ்த் தாய்க்குத் தொண்டு புரிதலையே தமது பிறப்புரிமையாகக் கொண்டிருந்தார். தமக்குள்ள ஒழிவுநேரம் முழுமையும் தமிழ்வளர்ச்சிக்கே பயன் படுத்திவந்தார். தமிழ் நூல்கள் பலவும் போற்றுவா ரின்றி மறைந்துபோதலைக் கண்டு மிகவும் வருந்தினர். ஓலைச்சுவடிகளிலிருந்தவாறே மறைந்துபோகுந் தமிழ் நூல் களைத் தாள்களிற் பதிப்பித்து இறவாமல் காப்பாற்ற வேண்டுமென்று உறுதி பூண்டார். பல விடங்களிலும் முயன்று ஓலைச்சுவடிகளைத் தாமே தேடியதன்றிப் பிறரைக் கொண்டுந் தேடித் தொகுத்தார். பழஞ்சுவடிகளை ஒன்றுக் கொன்று ஒப்புநோக்கித் திருத்தமான பாடங்களைத் துணிந்து ஒழுங்குபடுத்தினர். ஏடுகள் செல்லரித்தும் ஓரந் தேய்ந்தும் சிதைந்தும் பலவகையாகப் பழுதடைந்தவைக ளாகக் கிடத்தலைக் கண்டு உள்ளம் கவன்றார்.

முதன் முதலாக நீதிநெறி விளக்க வுரையைப் பதிப் பித்து வெளிப்படுத்தினர். ஆயிரத்து எண்ணூற்று எண்பத் தோராம் ஆண்டிலே வீர சோழியத்தை வெளிப்படுத்தினர். ஆயிரத்து எண்ணூற்று எண்பத்து மூன்றும் ஆண் டில் தணிகைப்புராணத்தை வெளியிட்டார். ஆயிரத்து,

எண்ணூற்று எண்பத்தைந்தாம் ஆண்டில் தொல்காப்பியப் பொருளதிகாரத்தை வெளியிட்டார். ஆயிரத்து எண்ணூற்று எண்பத்தேழாம் ஆண்டில் நல்லந்துவனார் கலித்தொகையை வெளியிட்டார். ஆயிரத்து எண்ணூற்று எண்பத்தொன்பதாம் ஆண்டில் இலக்கண விளக்கம், சூளாமணி முதலியவைகளை வெளிப்படுத்தினார். தொல்காப்பியம் சேனாவரையத்தையும் வெளிப்படுத்தினர். மறு ஆண்டுகளில் எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியம், சொல்லதிகாரம் நச்சினார்க்கினியம் ஆகியவைகளை வெளிப்படுத்தினார். தாமோதரம் பிள்ளை இவைகளை வெளியிட்ட பின்னர் இவைகளைப் பலரும் சிற்சில மாற்றங்கள் செய்து வெளியிடலானார்கள். முதற்கண் இவர் வெளியிடவில்லையேல் இற்றைஞான்று நாம் இந் நூல்களை எளிதிற் கண்டுமகிழ முடியாமலே போயிருக்கும்.

### இயற்றிய நூல்கள்

பழம்பெரு நூல்களைப் பாதுகாப்பதிலேயே தாமோதரம் பிள்ளை தம்முடைய பொருளையும் பொழுதையுஞ் செலவிட்டமையின் புதிய பெரிய நூல்களை எழுதுவதற்கு இவர் முயலவில்லை. ஆயினும், நட்சத்திரமாலை, ஆதியாகம கீர்த்தனம், ஆறும் ஏழாம் வாசக புத்தகங்கள், கட்டளைக் கலித்துறை, சூளாமணி வசனம், சைவ மகத்துவம் முதலிய நூல்களைத் தாமாகவே எழுதி வெளிப்படுத்தி யிருக்கின்றார்.

### அரசினர் மதிப்பு

தாமோதரம்பிள்ளை செய்த நன்மையைப் பாராட்டிச் சென்னை அரசாங்கத்தினர் அவருக்கு 'இராவ்பகதூர்' என்னும் பட்டத்தினை யளித்துப் பெருமைப்படுத்தினர்.

**பதிப்பு வேலையில் பட்ட அல்லல்கள்**

பழம்பெரும் நூல்களைப் பதிப்பித்து வெளிப்படுத்தும் வகையில் பிள்ளையவர்கள் பட்ட அல்லல்கள் பல. அவைகளை, "இலக்கணக் கொத்துடையார் நூலாசிரியர் உரையாசிரியர் போதகாசிரியரென வகுத்த மூவகை ஆசிரியரோடு யான் பரிசோதகனாசிரியரென இன்னுமொன்று கூட்டி, இவர் தொழில் முன் மூவர் தொழிலினும் பார்க்க மிகக் கடியதென்றும், அவர் அறிவு முழுவதும் இவர்க்கு வேண்டியதென்றும் வற்புறுத்திச் சொல்கின்றேன். தூக்கினாலன்றோ தெரியும் தலைச்சுமை? பரிசோதகாசிரியர் படுங் கஷ்டமும் ஒரு அரிய பழைய நூலைச் சுத்த மனச்சாட்சியோடு பரிசோதித்து அச்சிட்டார்க்கன்றி விளங்காது. இவையெல்லாம் அனுபவித்தாலன்றி அறியப் படாப் பொருள்கள். ஒன்றற்கொன்று ஒவ்வாத இருபது இருபத்தைந்து பிரதிகளையும் அடுக்கி வைத்துக்கொண்டு என் கண்காணச் சிந்தாமணி பரிசோதனை செய்து பதிப்பித்த கும்பகோணம் வித்தியாசாலைத் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமத் உ. வே. சாமிநாதையரைக் கேட்டால் இந் நால்வகையாசிரியர் பாட்டின் தாரதம்மியம் சற்றே தெரியலாம். எனக்கு அவரும் அவருக்கு நானுமே சாட்சி," என்று கலித்தொகைப் பதிப்புரையில் எழுதி யிருப்பதால் ஒருவாறு உணரலாம்.

**நன்றி பாராட்டுதல்**

திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் அவர்கள் தமக்குச் செய்த சில உதவியைப் பாராட்டிப் பிள்ளையவர்கள், கலித்தொகைப் பதிப்புரையில் இரண்டு செய்யுள்கள் மூலம் நன்றி பாராட்டியுள்ளார்கள். அப் பாடல்கள் நெஞ்சை நெகிழச்செய்யும் தன்மையுடையன. அப் பாடல்கள்,

"விண்ணோடு [1]கைலை வழித்தே சிகர் [2]வெவ் வினைக்குநெற்றிக்
கண்ணன சுப்பிர மண்ய சுவாமிகள் கான்மலரை
[3]நண்ணுத் தலையி [4]னசைதீரத் தாங்கநற் [5]கோகழிவாய்
மண்ணுய்ப் பிறந்தில னேஐய கோ! இந்த வையகத்தே." (க)

"[6]சிரமாலை யாகவும் சின்முடி யாகவும் செய்ய [7]கண்ட
சரமாலை யாகவும் யானடி யேனுனை யேன்தருவாய்
பரமார் கயிலைப் பரம்பரைக் கோகழிச் சுப்ரமண்யா
மரமாய் நின் [8]பாத குறடாய் வருதற் கொருவரவே." (உ)

என்பனவாம்.

ஆதீனத் தலைவர் அருட்டிரு சுப்பிரமணிய தேசிகரவர்களிடம் மனங்கலந்த தொண்டராயினர். அம்மடத்தின் முன்னுள்ளோர் 'இலக்கண விளக்கத்துக்' கிழைத்த கொடுமையை நடுநிலைவழா நயத்தொடுங் கூறினர். அடிகளும் அதனை ஏற்று இலக்கண விளக்கமும், சூளாமணியும் பதிப்பித்து வெளியிடுமாறு கையெழுத்துப் படிகளுங் கொடுத்துத் தக்க உதவிகள் செய்வதாகவும் உறுதியருளினர்.

அவ்வாறே ஆயிரத் தெண்ணூற் றெண்பத் தொன்பதாம் ஆண்டில் இலக்கண விளக்கத்தையும், சூளாமணியையும் வெளிப்படுத்தினர். பின் சூளாமணிக்கதையை உரைநடைப் படுத்தி உரிய இடங்களில் சூளாமணிப் பாட்டுக்களை யமைத்துத் திருத்தமுற வெளிப்படுத்தினர். சென்னை அரசினரும் இதனை எப்-ஏ., தேர்வுக்குப் பாடமாக வைத்தனர்.

---

1. கைலைவழித் தேசிகர்-கயிலாய பரம்பரைத் தேசிகர். 2. வெவ்வினை - கொடிய வினை. 3. நண்ணு - நண்ணி. 4. நசைதீர - அவாக்கெட. 5. கோகழி - திருவாவடுதுறை.

6. சிரமாலை - தலையி லணிந்து கொள்ளும் மாலை. 7. கண்டசரமாலை - கழுத்தி லணிந்து கொள்ளும் மாலை. 8. பாத குறடு - மரத்தாற் செய்த மிதியடி.

பிள்ளையவர்கள் பதிப்பித்து வெளிப்படுத்திய ஒவ்வொரு பண்டைச் செந்தமிழ் நூற் பதிப்புரை முன்னுரைகளில் அரியபெரும் ஆராய்ச்சி உண்மைகளும், உரைநடை மாண்பும், கற்பார்க்கினிமையும், உவமை முதலிய அணி நலன்களும், நகைச்சுவைப் பகுதியும், நாவன்மை பாவன்மை தோன்றும் நலமும், திட்ப நுட்பமும், சுருக்க பெருக்கமும் பொதுள வரைந்துள்ளனர். அவ் வுரை நடைகள் முற்றும் ஒரு தனித்தமிழ் நன்னூல் ஆகும் மாண்புடையன. அவற்றைக் கற்பார்க்குத் தமிழார்வமும் பெரும்புலமையும் எளிதில் எய்தும்.

தமிழாங்கிலத் தனிப்பெரும் புலவராய்த் திகழ்ந்த பூண்டி திரு. அரங்கநாத முதலியாரவர்களும் சி. வை. தாமோதரம் பிள்ளையவர்களும் உணர்ச்சியொத்த பெருநண்பினர். இருவரும் தாந்தாம் கொண்ட தமிழார்வத்தை இமிழ்திரை உலகுக்கு எடுத்துக் காட்டுவார் போன்று சில பல செய்தனர்.

அவற்றுள் முதலியாரவர்கள் பிள்ளையவர்கள் பதிப்பித்த கற்றறிந்தாரேத்தும் 'கலித்தொகை' பதிப்பின் தாள் விலைமுற்றிலுமுள்ள தொகையில் செம்பாதியை நல்கினர். பிள்ளையவர்கள் முதலியாரவர்கள் பாடி வெளிப்படுத்திய 'கச்சிக்கலம்பகத்'தைக் கண்டு அழுக்காறு கொண்டு சில்லோர் எழுதிய மறுப்புக்குத் தக்கவாறு ஏதுக்கள் காட்டி நடுநிலையமைய எதிர்மறுப்பாங் கண்டன மொன்று ஆங்கிலத்தில் எழுதி வெளிப்படுத்தினர்.

### இறுதி

பிள்ளையவர்கள் இறுதியில் அகநானூற்றை ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தார். ஆனால், அது முற்றுப்பெறாமல் ஆயிரத்துத் தொளாயிரத்து ஒன்றாம் ஆண்டு சனவரித்

திங்கள் முதனாளில் இறைவன் திருவடிப் பேற்றை யெய்தினார். தமிழ்ப்புலவர்கள் பல இரங்கற் பாக்களால் தங்கள் உள்ளத்துயரை ஒருவாறு ஆற்றினார்கள். பிள்ளையவர்களின் பிரிவைக் குறித்து உ. வே. சாமிநாதையர் பாடிய இரங்கற்பா :

"தொல்காப் பியமுதலாந் தொன்னூல் களைப்பதிப்பித்(து)
[1] ஒல்காப் புகழ்மேவி யுய்ந்த[2] பண்பி—னல்காத
தாமோ தரச்செல்வன் [3] சட்டகநீத் திட்டதன்மை
[4] யாமோ தரமியம்ப வே."

---

1. ஒல்காப்புகழ் - சுருங்காத புகழ். 2. பண்பின் அல்காத - நற்பண்பில் குறைவுபடாத. 3. சட்டகம் - உடல். 4. யாமோ தரம் - யாமோ தக்கவர்.